# திருக்கோயில்

மே 1981 ரூ. 1-25





வடாற்காடு மாவட்டம் இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலில் நிகழ்ந்த பைந்தமிழ்ச் சொற்பொழிவு அறக் கட்டளைத் தொடக்கவிழாவில் தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., ஆற்காடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ஏ. எம். சேதுராமன், எம்.எல்.ஏ., முதலிய பெருமக்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தல். (12.5.81)



முகப்பு

அருள்மிகு அகிலாண்டநாயகி
உடனுறை சம்புகேசுவரர் திருக்கோயில்,
திருவானைக்கா.

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 23 | திருவள்ளுவர் ஆண்டு 2012, துன்மதி ஆண்டு — வைகாசி [மே 1981] | மணி : 8

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

**திருக்கோயில்** திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில் முதல்வர் சிறப்புரை

திருவான்மியூரில் அறநிலைய அமைச்சரின் சிறப்புரை

சிவஞான போதச் சிறப்பு
—ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

கம்பர் கண்ட நரசிங்கம்
—திரு. ரெ. இராமசாமி,

சைவம்
—திருமதி. டாக்டர் ராதா தியாகராஜன், எம்.ஏ.,பி.எச்.டி.

தொல்காப்பியம் சுட்டும் சமய உண்மைகள்
—ந.ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.,

திருமுருகாற்றுப்படையும் தமிழிசையும்
—திரு. அ. சங்கரநாராயணன், எம்.ஏ.,எம்.லிட்.

அகிலாண்ட நாயகி மாலை
—திரு. மு. வைத்தியநாதன்

நல்லாரைக் காலன் நணுககில்லானே
—திரு. டாக்டர் ஆர். கோபால கிருட்டிணன், எம்.ஏ.,பி.எச்.டி.

வள்ளலாரின் கடவுட் கொள்கை
—திரு. மா. க. காமாட்சிநாதன்

ஊழி முதல்வன்
—திரு. வேணுகோபால் நாயகர், பி.ஏ.,பி.எல்.


அடக்கமுடைமை
—திரு. டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம்

திருமுறைகளில் தமிழ் மரபு
—திரு. சி. அருணை வடிவேலு முதலியார்.

திருப்புல்லாணியின் சிறப்பு
—திரு. கவிஞர் மனசை ப. கீரன், பி.ஏ.,பி.டி.

நக்கீரர் கண்ட திருவேரகம்
—மகாவித்துவான் பண்டித நடேசனார் பி.ஏ.ஜே.பி.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு



# திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில்

# முதல்வரின் சிறப்புரை

மாண்புமிகு தமிழக முதல்வர்

**எம். ஜி. இராமச்சந்திரன்** அவர்கள்

மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரிய மாண்புமிகு டாக்டர் ம. பொ. சி. அவர்களே, மேலவைத் தலைவர் என்ற பதவிக்கும் பொருத்தமானவர்களே! மற்றும் தவத்திரு வாரியார் அவர்களே! தமிழுக்கு யார் சொந்தம் என்று கேட்டால் நான்தான் சொந்தம் என்று சொல்லுவதற்குரிய தமிழறிவும் புலமையும் பெற்ற வாகீச கலாநிதி அவர்களே! அண்ணாவுக்கும், அதுபோன்ற கொள்கைகளை யார்யார் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கும், துணை நின்று தமிழ் காக்கும் பெரியவர் கி. ஆ. பெ. வி. அவர்களே! இந்த விழாவினை நடத்துகின்ற திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த பெரியோர்களே! கவிஞர் பெருமக்களே! அடிகளார்களே! மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே! உங்கள் அனைவருக்கும், எங்கள் கழகத்தின் பொதுச்செயலாளர் திரு ப. உ. ச. அவர்களுக்கும், கூடியுள்ள பெருமக்களுக்கும், தாய்மார்களுக்கும், ரத்தத்தின் ரத்தமாக விளங்குபவர்களுக்கும், என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

என்னுடைய பேச்சை, எதனை எண்ணுகின்றேனோ அதனை வெளிப்படுத்துவதற்கு முன், என் மீது அன்பு கொண்டிருப்பவர்களுக்கு ஒரு வேண்டுகோளை முன்வைத்து, எதிர்காலத்தில் என்னுடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன். எவ்வளவுதான் என்மீதோ என்னைப் போன்றவர்கள்மீதோ அன்பும், பாசமும் வைத்திருந்தாலும், என்னைப் போன்ற ஒருவரை அழைத்துப் பாராட்டுகின்றவர்களுடைய பேச்சை, முழுமையாகக் கேட்கின்ற பொறுமை, என்னைச் சார்ந்தவர்களுக்கு வரவேண்டும். அதனை எதிர்காலத்தில் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அதில் மிகப் பெரிய உண்மையும் நியாயமும் இருக்கிறது என்பதை, இங்கு வற்புறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இந்நிகழ்ச்சி என்னைப் பாராட்டுகின்ற நிகழ்ச்சி. யாரையும் வற்புறுத்தி அல்லது சூழ்நிலை நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்ட நிலையில், இவர்கள் விழா எடுக்கவில்லை. முதலமைச்சராக இருக்கிறாரே என்பதற்காகவும், பாராட்ட முன்வரவில்லை. இதனை நாம் புரிந்து கொள்ளவேண்டும். என்னைப் பாராட்ட வேண்டிய அவசியம் ஏதும் இல்லாதவர்கள், என்னிடம் எதையும் எதிர்பார்க்காதவர்கள், இவ்விழாவை நடத்துகிறார்கள் என்பதையும், இவ்விழாவில் என்னைப் பாராட்டினார்கள் என்பதையும் நினைவில் வைக்கவேண்டும். இதனை நான் எப்படிக் கொள்வது என்றால், என்னைப் பாராட்டுகின்றவர்கள் கூறுகின்ற கருத்தை, இவ்விழா கண்டு கேட்டு மகிழ வந்தவர்கள், ஏற்றுக் கொள்ளவில்லை என்று கருதுவதா? அல்லது பாராட்டு இவர்களுக்குப் பிடிக்கவில்லை என்று கருதுவதா? இந்தக் கேள்விக்கு நாம் பதில் சொல்ல முடியாது.

நீங்கள் காட்டுகின்ற அன்பு, நாம் யாரைப் பாராட்ட வேண்டுமெனக் கருதி மனதில் ஏக்கப்பட்டிருக்கிறோமோ, அப்படிப் பட்ட பாராட்டு விழாவில், பாராட்டுகின்றவர்களுக்குப் பாராட்டும் வாய்ப்பை நாம் கொடுக்காவிட்டால் பாராட்டப்படுகின்றவர், அந்தப் பாராட்டுக்குத் தகுதியற்றவர் என்று கூடக் கருதலாம். எனவே இப்படிப்பட்ட மாபெரும் விழாவில் எதிர்காலத்தில் இத்தகைய செயலைச் செய்ய மாட்டீர்கள் என்ற உறுதி எனக்கிருக்கிறது. அதனை எதிர்காலத்தில் காப்பாற்றுவீர்கள் என்று நம்புகின்றேன்.

இங்குப் பேசியவர்கள் அத்தகைய மனக் குறைக்கு ஆளாகியிருந்தால் உங்கள் சார்பாக அவர்களிடம் நான் மன்னிப்புக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் கைதட்டுவதிலிருந்து மன்னிப்புக் கோரவேண்டுமென வெளிக்காட்டியிருக்கிறீர்கள் என்று கருதுகின்றேன். நன்றி.

உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியதற்காகவும், தமிழை வளர்க்க, தமிழைப் பாதுகாக்க, நான் எடுத்துக்கொண்ட முயற்சி, எடுத்துக்கொண்ட நடவடிக்கை, இனி எடுக்க இருக்கின்ற என்னுடைய எண்ணத்தின் வடிவங்கள், எப்படி உருவாக வேண்டும், உருவாக்கப்பட்டதை எப்படி ஆதரிக்கவேண்டும், என்று கருதிச் செயல்பட அஞ்சாதீர், நாங்கள் துணை நிற்கிறோம் என்று கூறுவதற்காகவும், செயல்படும் என்னை உற்சாகப்படுத்திச் செயல்பட வைப்பதற்காகவுமே இவ்விழா.

நல்லது செய்தாலும் குறை கூறுகிறவர்கள் இருக்கிறார்கள். இத்தகைய சோதனைகள், இன்னல்கள், போட்டி, பொறாமை, எரிச்சல், காழ்ப்புணர்ச்சி எதுவாக இருந்தாலும், எதிர்காலத்தில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள உதவும். நான் பதவியை, பட்டத்தைப் பெரிதாக நினைக்கவில்லை. தமிழுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்ய நானும் எனது கட்சியும் தயாராக இருக்கிறோம். மக்கள் முனைந்தால், இளைஞர்கள் முடிவெடுத்தால், நடக்காதது எதுவும் இல்லை என்பதை மதுரையில் நடந்த உலகத்தமிழ் மாநாடு காட்டிவிட்டது. மதுரையில் நடந்த மாநாட்டில் எவ்வித அசம்பாவித சம்பவங்களும் இல்லை என்று இங்குப் பேசிய அனைவரும் குறிப்பிட்டார்கள். தமிழகமே அன்று மதுரையில் வந்து கூடியது போன்ற மக்கள் கூட்டம். எங்கு பார்த்தாலும் ஜனசமுத்திரம். தெருவில் எறும்பு ஊர்வது போல் நடந்தார்கள். கட்டுப்பாடும்,கடமை உணர்ச்சியும், தமிழ்மீது இருக்கும் ஆர்வமும், பாசமும் அவர்களை நடத்திச் சென்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

சாதாரணமாகக் குடும்பம் நடத்துவோர், வந்திருப்பவர்களுக்கு உணவு தட்டுப்பாடு ஏற்படக் கூடாதே என்ற கவலையால் இட்லி சுட்டு, சன்னல் வழியாக வழங்கிய அந்த அருமையான கொடையை, நல்மனத்தை, நாம் பாராட்டாமல் இருக்க முடியுமா? பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம், போற்றுகிறோம். நானும் தினசரி சிறிதுநேரம் தமிழ் படித்து வருகிறேன். கடலைக்கூட அளந்துவிடலாம். மணலைக்கூட எண்ணிவிடலாம். ஆனால் தமிழின் வளத்தை அளந்துவிட முடியாது என்பதைத்தான், நான் படித்த அளவில் உணர்ந்தேன். நான்-என் மனம் சரியாக இருக்கும்வரையில், என்மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையைக் காக்க உழைப்பேன். பிரச்னைகளையும், சிக்கல்களையும் உருவாக்க நினைப்பவர்கள், சரியான உள்ளத்தோடு சுட்டிக் காட்டினால் எங்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது. அதைவிட்டுவிட்டுத் தேடிக் கண்டுபிடித்துக் குறைசொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதனை மக்கள் நம்பவில்லை என்பதற்காக விரக்தி அடைகிறார்கள். ஏமாற்றம் அடைகிறார்கள். அதற்கு மக்களும் குற்றவாளியல்ல. நானும் குற்றவாளியல்ல. திருச்சித் தமிழ்ச் சங்கம் நடத்துகிற இந்தப் பாராட்டு விழாவில் கலந்துகொள்ள நான் கொடுத்து வைத்தவன். முழுக்க முழுக்க நூற்றுக்கு நூறு அரசியல்வாதியாக இருக்கும் சூழ்நிலையில், நான் நடிகனாக இருந்தபோது எதைச் சொன்னேனோ, அதை முதல்வராக இருந்து நிறைவேற்றத் தமிழ்ப்பெருமக்கள் உதவி இருக்கிறார்கள்.

புதிதாகக் கட்டிவரும் திருவரங்கம் கோவில் கோபுரத்தைப் பார்க்கச் சென்றேன். சங்கராச்சாரியார் 10 லட்சம் ரூபாய் இதற்கு நிதி அளித்திருப்பதாகச் சொன்னார்கள். இத்தகைய சிறந்த கலையை உருவாக்க 13-ஆவது அடுக்குக் கோபுரம் வேலை நிறைவுபெற, அதன் முழுப் பொறுப்பையும் தமிழக அரசே ஏற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு இங்கே நெற்றியில் விபூதி பூசி ஆசீர்வாதம் செய்தபோது கைதட்டினீர்கள். இராமச்சந்திரனுக்கு விபூதி பூசுவதா? நாமம் போடுவதா? நமக்கு இருப்பது 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற நம்பிக்கை. அவர்கள் எந்தக் கோணத்தில் இருந்து வாழ்த்தினார்களோ, அதை அப்படியே ஏற்கவேண்டும். மற்றவர்களின் உணர்வுகளை நாம் கட்டுப்படுத்தக் கூடாது.

சமயம்தான் தமிழைக் காக்கிறது, வளர்க்கிறது என்று இங்கே பேசினார்கள். நானும் மறுக்கவில்லை. ஆனால் சொல்லுகின்ற கருத்துக்கள் மக்களை ஒற்றுமைப் படுத்த வேண்டுமே தவிர, வேறுபடுத்தக்கூடாது. இராமச்சந்திரன் மாறிவிட்டான் போலிருக்கிறது என்று சிலருக்குச் சந்தேகம். எங்கே இருந்தாலும் நான் நன்றி மறவாதவன். எனக்காக ரத்தம் சிந்தியவர்கள், உயிரை விட்டவர்கள், இன்னமும் உழைத்துக் கொண்டிருக்கிறவர்கள்தான்,எனது முதல் நண்பர்கள். இவ்வளவு பாராட்டுகளுக்கும் நான் பொருத்தமானவனா? அதிகம் படித்தவனோ, படித்தவர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தவனோ அல்ல.

உலகத் தமிழ் மாநாடு நடத்தும்படி சங்கராச்சாரியார் கூறினார் என்பதை, நான் உலகத்தமிழ் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டேன். அவர் சொல்லித்தான் மாநாடு நடத்தினீர்களா? சொந்தமாக எதுவும் செய்யவில்லையா? என்று கேட்டார்கள். முதலில் நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது உலகத்தமிழ் மாநாடு மதுரையில் நடத்தத் திட்டமிட்டோம். அதற்குள் புயல், வெள்ளம் ஏற்பட்டது. அந்தப் பணிகள் முடிவதற்குள் நெருக்கடி ஏற்பட்டு ஆட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டோம். மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு சங்கராச்சாரியார் சுவாமிகள், ஆட்களை அனுப்பி மதுரையில் உலகத்தமிழ் மாநாட்டை நடத்தி முடியுங்கள் என்று சொல்லி அனுப்பினார். அந்த மாநாட்டு ஏற்பாடுகள் துவங்கியபிறகு சொன்னதை ஏற்றுச் செயல் படுத்தியதற்காக வாழ்த்துத்

தெரிவித்திருந்தார். இதைச்சொன்னது தவறா? இப்படி எங்களைக் குறை கூறுகிறவர்கள் கோவிலுக்குச் செல்லவில்லையா? ஜோசியம் பார்க்கவில்லையா? இதை எல்லாம் சுட்டிக் காட்டினால், இராமச்சந்திரன் யாருக்கோ சொந்தமாகிவிட்டான் என்று தள்ளிவிடுகிறார்கள். அப்படிச் சொந்தமானால் என்ன தவறு? நான் யாரும் இல்லாத அனாதைதான். அதனால் எல்லோருமே எனக்குச் சொந்தம்தான்.

இங்குத் தமிழ்ச் சங்கத்தார் எனக்கு வழங்கிய மீனாட்சிசுந்தரேசுவரர் திருமணச்சிலையை எனது அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். அது எல்லா நலனும் தரும் என்றும் தெரிவித்தார்கள். இது தமிழ் மாநாடு நடத்தியதற்காகக்கிடைத்த பரிசு. இதனை எனது அலுவலகத்தில் வைப்பதைவிட, தமிழ் நாட்டிற்கே உரிமையாக்க நான் விரும்புகின்றேன். வேலூர்க் கோயிலில் இது தமிழ்த் தெய்வமாக இருந்து, வழிபடும் அனைவருக்கும் நலன்கள் வழங்கட்டும் என்பது என் விருப்பமாகும்.

(சென்னையில், கோட்டையில், சிலை வைக்கத் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம் விரும்பியது. அதனைச் சிலையில்லாத வேலூர்க் கோட்டைக்கு முதல்வர் வழங்கியது மிகவும் பொருத்தமே என்று, அனைவராலும் பாராட்டப்படுகிறது).

இந்தப் பாராட்டு விழாவில் நான் புதிய உணர்வைப் பெறுகிறேன். என்னிடம் சில குறைகள் இருக்கலாம். அந்தக் குறைகளை எப்படி குறைத்துக்கொள்வது, என்னை எப்படி கட்டுப்படுத்திக் கொள்வது, என்று இந்த விழா சிந்திக்கச் செய்திருக்கிறது. உண்மையிலேயே, மேலும்மேலும் மக்களின் தொண்டனாக-தமிழ்த் தொண்டனாக வாழத் தூண்டி இருக்கிறது. என்னைப் பாராட்டும் உங்களுக்கு எந்தத் தலைக்குனிவும் ஏற்படாதவகையில் நடந்து கொள்வேன். அனைவருக்கும் எனது நன்றி, வணக்கம்.

# தலவழிபாட்டின் பயன்

தல யாத்திரையும் வழிபாடும் மேற்கொள்ளுவதனால், நாம் எய்தும் நலங்களுக்கு அளவேயில்லை. துன்பமும், துயரமும் நிறைந்த இவ்வுலகத்தில், நம்முடைய குறுகிய வாழ்நாளில், நாம் அடையக்கூடிய ஏதோ ஒரு சில இன்பங்களில், உண்மையானதும் உயர்ந்ததும் ஒப்புயர்வற்றதும், தல யாத்திரைகளால் பெறும் இன்பமே எனலாம். தலயாத்திரையால் நாம் நம் கவலைகளை மறக்கின்றோம். நம் மாசுகள் அகன்று, நாம் ஓரளவேனும் புனிதம் அடைகின்றோம். காணாத இடங்களையும் காட்சிகளையும் கண்டு களிக்கின்றோம். கேளாத செய்திகள் பலவும் கேட்டுக் கிளர்ச்சியும், வளர்ச்சியும் பெறுகின்றோம்.

நாட்டின் பல பகுதிகளிலுள்ள பல மக்களைக் கண்டு பழகி, நாட்டு வளப்பங்களை அறிந்து கொள்ளுகின்றோம். தல வழிபாட்டால் நம் உள்ளமும் உணர்வும் புத்துணர்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றன. உள்ளம் விரிவடைகின்றது, உணர்வு பண்படுகின்றது. இறையருளும் பக்தியும் படிமுறையே நம்மிடம் வளர்ந்து ஓங்குகின்றன. நாம் நம் முன்னோர்களுடைய அருமை பெருமைகளையும், அழகிய வரலாறுகளையும், அரும்பெரும் செயல்களையும் கண்டும் உணர்ந்தும் களிப்புறுகின்றோம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று தரிசிக்குங்கால், நமக்கும் அவர்களின் அருள் ஆற்றல் ஓரளவு பதிகின்றது. காலமும் இடமும் வேறுபட்டுக் கடந்திருப்பினும், நாம் அவர்களோடு மானசீகத் தொடர்பு கொள்ளுகின்றோம். அவர்களை நாம் நேரே காண இயலாவிடினும், அவர்களின் தொடர்புபெற்ற தலங்களையும் கோயில்களையும் காணுகின்றபோது, ஒரு வகையில் அவர்களை நேரே காண்பதுபோன்ற உணர்ச்சியும் மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுகின்றன.

பல்லவரும், சோழரும், பாண்டியரும் பிறரும் வானளாவக் கட்டிய உயர்ந்த கோபுரங்களையும், கோயில்களையும் அவற்றின் எழில்மிக்க அற்புதச் சிற்பத் திருவுருவங்களையும், பிறவற்றையுமெல்லாம், நேருக்கு நேராக நாம் நம் கட்புலனாற் காணுங்கால், நாம் எய்தும் வியப்பிற்கும் விம்மிதத்திற்கும் எல்லையுண்டோ? நம் மனித வாழ்விலேயே நாம் பெறக்கூடிய மிக மேலான சிறந்த தெய்விக இன்பம் இதனிலும் வேறு பிறிதொன்று இல்லை; இருத்தல் இயலாது என்பது தேற்றம்.

—ஆசிரியர்



திருவான்மியூரில்

# அறநிலைய அமைச்சரின் சிறப்புரை *

[மாண்புமிகு
**இராம. வீரப்பன்** அவர்கள்]

திருவான்மியூர் மருந்தீசுவரர் ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்த திருக்கோயிலாகும். இப்பகுதியில் வாழும் ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் வகையில், இக்கோயிலுக்கு உரிய இடத்தை மீட்டு, ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் இங்குத் திருமணக்கூடத்தை அமைக்க இருக்கிறார்கள்.

இந்த ஆலயத்தின் சொத்துக்களை அனுபவித்து வருபவர்களிடமிருந்து, அவைகளை மீட்க அறங்காவலர் குழுவினர் போராட வேண்டியிருக்கிறது. ஆலயத்தின் சொத்துக்களைக் கபளீகரம் செய்துகொண்டு வாழுபவர்களிடம் போராடியே மீட்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களுக்குத் திருமணக்கூடம் அமைப்பதற்கான கட்டிடத்தைக் கட்ட, இக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தைப் பத்தாண்டு காலத்துக்கு மேலாக அனுபவித்து வருபவர் தர மறுத்து வந்திருக்கிறார். ஒரு தையற்கடையோ எதையோ வைத்துக்கொண்டு ஒரு ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தைத் தர மறுத்து, ஏழை எளிய மக்களுக்குச் செய்யும் ஒரு நல்ல பணிக்குக் குறுக்கே நின்றிருக்கிறார்கள்.

யார் யாரை எல்லாமோ அறங்காவலர்களாக நியமித்திருக்கிறார்கள் என்று குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்துள்ள குற்றத்தைக் கண்டுபிடித்தால் கோபத்துடன் பேசுகிறார்கள்.

குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல் குழியும் பறித்ததாம். அதுமாதிரி கோயில் சொத்துக்களை மோசடிசெய்தவர்களின், ஊரை அடித்து உலையில் போட்டவர்களின், குற்றங்களைக் கண்டுபிடித்தால் கோபப்படுகிறார்கள். நமது அறங்காவலர்கள் இன்று, பழைய காலத்தில் நடைபெற்ற சீர்கேடுகள் அனைத்தையும் கண்டுபிடித்து வருகிறார்கள்.

மருந்தீசுவரர் ஆலயத்துக்கு ஆண்டு வருமானம் ரூ. 60,000 வருகிறது. ஆனால் ஓராண்டுக்கு முன்புவரை, உள்ளே யாரும் எளிதில் செல்லமுடியாத வகையில் முள்ளும் புதருமாக மண்டிக்கிடந்தன. இப்பொழுது அவை துப்புரவுப் படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், இக்கோயிலின் இடத்தை விலைக்குவாங்கி ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. சென்னை போன்ற நகரங்களில் வீட்டு மனைகளின் விலைகள் மிகவும் உயர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் ஆலயத்துக்குச் சொந்தமான இடங்களை வைத்துக் கொண்டிருக்கும் கல்மனதுக்காரர்கள், இருதயமற்றவர்கள், பத்தாண்டு காலமாக ஒரு இடத்தை ஆலயத்திற்குத் திருப்பிக் கொடுக்க மறுத்துவருகிறார்கள்.

இப்படிப்பட்ட செயல்களை அறநிலையத் துறை தடுத்து நிறுத்த விரும்புகிறது. பழைய ஆலயங்களைக் காக்கும் கடமையும் பொறுப்பும் உள்ளது. நம்முன்னோர்கள் ஆலயங்களுக்கு எழுதிவைத்துள்ள சொத்துக்களை அனுபவித்து வரும் கல்மனம் உடையவர்களை, நாம் அடையாளம் காட்டவேண்டும்.

ரூ. 60,000 மட்டுமல்ல, இலட்சக்கணக்கில் வருமானம் வரவேண்டியுள்ளது. கேட்டால் நீதிமன்றத்துக்குப் போகிறார்கள். அதனால் சில விவரங்களை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

சென்னையிலே உள்ள மிகப்பெரியகோயில் கபாலீசுவரர் கோயில். அக்கோயிலுக்குச் சொந்தமான பழைய வீடுகளும் புதிய வீடுகளும் உள்ளன. அதிலே மிகவும் வசதியானவர்கள் குடியிருக்கிறார்கள். தொழில் நடத்துபவர்கள் குடியிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு வாடகைப் பாக்கி செலுத்த வேண்டும் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

---

* திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவர சுவாமி ஆலயத்தின் சார்பில் கட்டவிருக்கும் திருமணக்கூடத்திற்கு 23-5-81 அன்று அடிக்கல் நாட்டியபோது, மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் **திரு இராம. வீரப்பன்** அவர்கள் ஆற்றிய உரை.

ரூ. 225 மாத வாடகை கட்ட வேண்டிய வர் ரூ. 9555 பாக்கி வைத்துள்ளார். வாடகையைக் கேட்டால் ஆயிரக் கணக்கில் செலவு செய்து சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட மோசடிக்காரர்களின் செயல்களை அம்பலப்படுத்த வேண்டும். நகைத் தொழில் செய்யும் ஒருவர், ரூபாய் 300 மாத வாடகை செலுத்துபவர், அவர் ரூ. 6150 பாக்கி தர வேண்டும். அதே தொழில் உள்ள இன்னொருவர் ரூ.44வாடகை, அவர் பாக்கிரூ. 2094. ரூ. 316 மாத வாடகை செலுத்துபவர் ரூ. 4566 பாக்கி. ரூ. 324 வாடகை செலுத்தும் இன்னொருவர் ரூ. 21,726 வாடகை பாக்கி. இன்னொருவர் இந்திரா காங்கிரசிலே இருக்கும் டாக்டர், மாத வாடகை ரூ. 282 செலுத்துபவர். அவர் வாடகை பாக்கி ரூ. 9,246. வேலையில்லாத ஒருவர் ரூ. 224 மாத வாடகை செலுத்தும் வீட்டில் குடியிருக்கிறார். அவர் பாக்கி செலுத்த வேண்டியது ரூ. 7060.

சிம்ஸனிலே வேலைசெய்யும் ஒருவர் தர வேண்டிய மாதவாடகை ரூ. 91. அவரது பாக்கி ரூ. 3804. ரூ. 87 வாடகை செலுத்தும் இன்னொருவர் பாக்கி ரூ. 3915.

ஆலயத்துக்குச் சேரவேண்டிய வாடகையைச் செலுத்தாமல் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகும் தைரியம் எப்படி வந்தது?

நீதிமன்றங்களுக்குப் போவதன் மூலம் ஆலயங்களுக்குத் தரவேண்டிய பாக்கிகளைத் தாமதப்படுத்தலாம் என்று நினைக்கிறார்கள்.

அறநிலையத்துறை வழக்குகளை உடனடியாக விசாரிக்கத் தனி நீதிமன்றத்தை நிறுவ வேண்டும் என்று அரசிடம் கேட்க அறநிலையத் துறை ஆலோசித்து வருகிறது.

மயிலைக் கபாலீசுவரர் கோயிலுக்கு மட்டும் வாடகை பாக்கி ரூ. 6 இலட்சம் வரவேண்டியதில், நமது அறங்காவலர்கள் முயற்சியால் ரூ. 2 இலட்சம் அளவுக்கு வசூலித்துள்ளனர். வாடகைப்பாக்கி தராதவர்கள் யார் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். அறவழியில் அறங்காவலர்கள் அவர்களை மக்களுக்கு அடையாளம் காட்டவேண்டும்.

யாரை வேண்டுமானாலும், மோசடி செய்யட்டும். ஆண்டவனையுமா மோசடி செய்ய வேண்டும்?

திருவேற்காடு கருமாரியம்மன்கோயிலுக்கு நமது தாய்மார்கள் செலுத்தும் பட்டுப்புடவைகள், சாதாரண சேலைகள் ஆகியவைகளை ஏலம் விடுவதிலும், முறைகேடுகள் நடப்பதாக வந்த புகார்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி ஆணையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அறநிலையத்துறையின் சொத்துக்களை, யார் மோசடி செய்து அனுபவிக்க நினைத்தாலும், இந்த அரசு அனுமதிக்காது.

— — — — — —

# நாட்டுக்குகந்த நன்னெறியைக் காட்டுங்கள்! *

இன்றைய விழா நாயகரான தவத்திரு அடிகளார், பன்றிமலை சுவாமிகள் அவர்கள் எழுதிய என்று கூட அல்ல, தெரிவித்த கருத்துக்களைத் திரட்டி 'ஹோலிபஞ்சாட்சரா' என்ற தலைப்பில் ஒரு நூலை தயாரித்திருக்கிறார்கள். அந்த நூலை நான் வெளியிட வேண்டும் என்கிற அந்தப் பணியை எனக்கு அளித்ததின் மூலம், இந்த விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பு அளித்தமைக்கு விழாக்குழுவினருக்கும் நான் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஏற்று இருக்கிற பொறுப்புக்காரணமாக நீங்கள் இதுவரை கேட்காததை - கேட்க விரும்பாத கருத்துக்களை இங்கே நான் சொல்ல வேண்டிய கடமையிருக்கிறது. அது காலத்தின் கட்டாயம் என்பதை இந்த மாமன்றமும், வணக்கத்திற்குரிய அடிகளாரும் தெரிந்துகொள்ளவேண்டியகடமை இருக்கிறது. அப்படிப்பட்ட கருத்துக்களை இங்கே தெரிவித்துக்கொள்ள வேண்டிய கடமைப்பாடும் எனக்கு இருக்கிறது.

வெளியிட இருக்கும் இந்த நூலில் பல்வேறு நாயன்மார்களைப்பற்றித் தெரிவித்த கருத்துக்களை தொகுத்து வெளியிட்டு இருக்கிறார்கள். வேறு சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் அதேபோல ஆழ்வார்கள் கருத்துக்களும் இதில் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. ஆலயத்தின் அவசியம், ஆலய வழிபாட்டின் சிறப்புக்கள், ஆன்மீக நெறியின் உயர்வுகள் இங்கு எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலைமையில் அறநிலையத்துறைக்குப் பொறுப்பேற்று இருக்கின்ற அந்த உணர்வின் அடிப்படையில், இந்நாட்டிலே இருக்கின்ற கோடானுகோடி சாதாரணமக்கள் ஏழை எளியவர்கள், என்ன கருதுகிறார்கள் என்பதை நீங்களும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அவர்களுக்கெல்லாம் நீங்கள் என்ன வழி காட்டுகிறீர்கள் என்பதை வேண்டுகோளாக

---

* சென்னை மயிலாப்பூர் ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் 4—5—1981 அன்று தவத்திரு பன்றிமலை அடிகளார் சுவாமிகள் எழுதிய ''ஹோலி பஞ்சாட்சரா'' என்ற ஆங்கில நூலினை மாண்புமிகு அமைச்சர் வெளியிட்டு ஆற்றிய சிறப்புரை, இங்குப் பெரிதும் போற்றி வெளியிடப்படுகிறது.

வைப்பதற்குத்தான் அவர்களின் பிரதிநிதி என்ற முறையில் நான் உங்கள் முன் நிற்கிறேன்.

இதற்குக் காரணம், பன்றிமலை அடிகளாரை வாழ்த்துகின்ற வயது எனக்கு இல்லை. ஆனால் அன்புள்ளம் இருக்கிறது. அது வாழ்த்திக் கொண்டுதான் இருக்கிறது.

ஒரு முறை எங்களை எல்லாம் ஆளாக்கிய எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒரு கருத்தைச் சொன்னார்கள். ''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'' என்று அவர்கள் எங்களுக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை வணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களை வாழ்த்துகிறோம்.

ஆனால், சமுதாயத்திலே கோடிக்கணக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை மக்களுக்கு, ஏதும் அறியாத மக்களுக்கு, எந்த வழியைக் காட்டுகிறீர்கள், எந்த நெறியில் நடைபோட வேண்டும் என்று தெளிவுபடுத்தப் போகிறீர்கள் என்பதுதான் இந்த சமுதாயத்தின் சார்பிலே என்னுடைய பணிவான வேண்டுகோளாகும்.

இன்றைக்கு இந்தியா ஆன்மீக நெறிபற்றிக் 'கடவுள் அருள்பற்றி சொல்லியிருப்பது போல' உலகத்திலேயே எந்த நாட்டிலும் எந்த ஆன்மீக வாதியும் சொல்லவில்லை. இந்த நாட்டிலே தான் வறுமையிருக்கிறது. ஏழ்மை தாண்டவம் ஆடுகிறது. படிக்காதவர்களின் தொகை 57 சதவிகிதம் என்பதை எண்ணிப் பார்க்கும் போது வேதனையாக இருக்கிறது.

கல்விக்கு என்று ஒரு கடவுளை வைத்துக் கொண்டு இருக்கின்ற இந்த நாட்டிலேதான் இந்த நிலைமை இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்: ஆண்டவன் மனிதனைப் பார்த்துக் கேட்டார். படைப்பிலேயே உயர்ந்தப் படைப்பாக நான் மனிதனைப் படைத்து இருக்கிறேன். அவனுக்காகத்தான் எல்லாவித வாய்ப்பு வசதிகளையும் தந்து இருக்கிறேன்.

மனிதன் மண்ணைத் தோண்டினால் பொன் கிடைக்கிறது. கடலுக்குள்ளே போனால் முத்து கிடைக்கிறது. கானகத்திலே அவனுக்கு அளவற்ற செல்வம் கிடைக்கிறது. தோண்டிய இடமெல்லாம் வேண்டிய வசதி கிடைக்கிறது. இவையெல்லாம் விட எந்த ஜீவராசிக்கும் இல்லாத பகுத்தறிவைத் தந்து இருக்கிறேன். இவற்றையெல்லாம் பயன்படுத்திக்கொள்ளாமல் எனக்கு இந்த வரம் தா! அந்த வரம் தா! என்று என்னைக் கேட்டுக் கொண்டு இருக்கிறாயே! இதில் என்ன பெருமை இருக்கிறது? இத்தனையும் உனக்குத் தந்த எனக்குத்தான் என்ன பெருமை? என்று கேட்பது போன்ற ஒரு கருத்தை ஆண்டவன் மனிதனைப் பார்த்துக் கேட்டாற்போல் கூறுவார்கள்.

அப்படிப்பட்ட உணர்வு எப்படி வந்தது? என்பதை அருள் கூர்ந்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அறநிலையத்துறையில் பொறுப்பேற்று இருக்கிறவன் என்கிற வகையில் கடந்த சிலகாலமாக அதிகமான அளவு ஆன்மீகத்துறையில் ஈடுபாடு கொண்டு இருக்கிறேன்.

எங்களைப் போன்ற பொதுத்தொண்டு ஆற்றுவோருக்கு உங்களைப் போன்ற சான்றோர்கள் - பெரியோர்கள் ஒரு தெளிவான வழியைக் காட்டவேண்டும் என்றுதான் வேண்டிக்கொள்கிறேன்.

ஏழை எளியமக்கள் நாள்முழுவதும் பாடு பட்டாலும் ஒருவேளை உணவுகூடக் கிடைக்காமல் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஆன்மீகத்துறையில் அவர்களுக்கு எல்லாம் ஒரு வழியைக் காட்டுங்கள்! நீங்கள் காட்டும் அந்த நல்லபாதையில் அவர்களை எல்லாம் வழிநடத்திச் செல்ல எங்களுக்கு ஒரு வழியை ஏற்படுத்தித்தாருங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதைத்தான் நான் பல்வேறு சமயநெறிக் கூட்டங்களில் உங்களைக் கேட்டுக்கொண்டு வருகிறேன்.

இப்படிப்பட்ட ஏழை-எளியவர்கள் பாமரர்கள் ஆகியோரைத் திருத்துவதற்கு ஒரு வழி இல்லை என்றால் ஆன்மீகமும் இல்லை, அறநெறியும் இல்லை என்றுதான் பொருள்.

அவர்களைச் சீர்திருத்தாமல் அவர்களுக்கு ஒரு நல்வழி காட்டாமல் இருக்கின்ற எந்த நெறியும் இந்த நாட்டை உயர்த்தாது.

ஆன்மீக நெறியைப் பரப்புவதற்காகவும் சமய நெறியை உயர்த்துவதற்காகவும் எவ்வளவோ பெரியவர்கள் எத்தனையோ அரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைக்கேட்டு இருக்கிறோம். நான் பொறுப்பேற்றபிறகு இத்தகைய பெரியவர்களைப் பற்றி எல்லாம் கேள்விப்பட்டு இருக்கிறேன். பார்த்து இருக்கிறேன். இந்த மண்டபத்தை விட்டு வெளியே சென்றால் அதையும் தாண்டிப் போனால் 80,90 வயது பெரியவர் துறவறம் பூண்டு கால்நடையாகவே நாடுமுழுவதும் சென்று மக்கள் எளிமையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவரே ஒரு எடுத்துக்காட்டாக நடந்தே சென்று, ஆன்மீகத்தை நிலை நாட்டிக் கொண்டு வருவதைக் காண்கிறோம். பிறகு தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளில் நுழைந்தால் மகேசனுக்கு நிகரான மடாதிபதிகள் சமயத்தை மொழியைக் காப்பாற்றும் பொறுப்பிலே உள்ள ஆதீனத்தலைவர்கள் கண்முன்னே நிறுத்தப்படுகிறார்கள். இவர்கள் எல்லாம் மக்கள் மன்றத்தின் முன்னே வர விரும்பாமல் அங்கேயே உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தங்களை மகேசனுக்கு நிகராகக்கருதிக்கொண்டு மக்கள் அங்கே வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

உயர்ந்த நெறிக்காக முன்னோர்கள் வைத்துச் சென்ற சொத்துக்களை எல்லாம் எப்படி சூறையாடிக்கொண்டிருக்கிறார்கள் என்கின்ற செய்தியும் எங்களுக்குக்கிடைக் கிறது. இதைப்பார்க்கிற துர்ப்பாக்கிய சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதையும் தாண்டிக் குன்றக்குடி அடிகளா ரைப் பார்க்கிறோம். அவர் சாதாரணமான மனிதரைப் போல சமய நெறிக்காக மட்டுமல் லாமல் தமிழுக்காகவும் பாடுபடுவது தவறல்ல என்ற தத்துவத்தைக் கடைப்பிடிக்கிற ஆதீனத் தலைவராக அவரை நாம் பார்க்கிறோம்.

இதேபோல கன்னியாகுமரிவரை பல்வேறு பட்ட சமயநெறித் தலைவர்கள் பல்வேறு கோணங்களில் காட்சியளிக்கிறார்கள்.

ஒரு கவிஞன் சொன்னான்: ''வாழ்கின்றார், முப்பத்து முக்கோடி மக்கள் என்றால் சூழ் கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்'' என்று.

அதே போல நாட்டில் எத்தனை வேறு பாடுகள்.

இங்கே நூலில் குறிப்பிட்டிருக்கிறீர்கள், சந்தனத்தைத் தினமும் அரைத்து அபிடேகம் செய்கிறார் ஒரு நாயனார். அதை அரைத்துக் கொடுப்பவர் ஒரு சைவ சமயத்தவர் - சந்த னத்தை அரைத்துக் கொடுக்கும், அவருக்கு- கடவுளுக்கு அபிடேகம் செய்த சந்தனத்தைக் கொடுக்காதே என்கிறார் ஒரு சமயத்தவர். ஆனால் சைவ சமய நாயனார் தனது பக்தியை நிலை நாட்டக் கையை உடைத்துச் சந்தனப் பூ அபிடேகம் செய்கிறார் என்பது எதைச் சுட்டி காட்டுகிறது. அற மனிதனின் தியாக உணர்வை அது எடுத்துக்காட்டவில்லையா?

கண்ணப்ப நாயனார் தான் வழிபடும் கடவுளுக்குத் தன் கண்ணையே பெயர்த்து அளித்தார் என்றால் அது வெறும் புராணம் மட்டும் அல்ல; மனிதன் தியாக உணர்வோடு வாழவேண்டும் என்பதற்காக வழிகாட்டும் வரலாறு ஆகும்.

15 நாளுக்கு முன்னால் கூட, சென்னை யில் உடன்பிறந்த சகோதரருக்குத் தனது இரண்டு கிட்னியில் ஒன்றை அளித்து அவரது உயிரைக்காப்பாற்றினார் என்ற செய்தி வெளி வந்தது. இது அந்தக்காலக் கண்ணப்பநாய னாரை நினைவுபடுத்தவில்லையா? அந்தத் தியாக உணர்வு உள்ளவர் இன்றைய கண்ணப்ப நாயனாராகக் கருதப்படுகிறார் அல்லவா?

செத்தவர்கள் தங்கள் கண்களை உயி ரோடு இருப்பவர்களுக்கு அளிப்பவர்கள் இருக் கிறார்கள். இந்த நாட்டில் அப்படிப்பட்ட தியாக உள்ளம் கொண்டவர்கள் வாழ்ந்து இருக்கிறார்கள். வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்.

யார் எதைச் செய்தாலும் பிறருக்காக ஏதாவது செய்தாக வேண்டும் என்ற தியாக உணர்வோடு செயல்பட வேண்டும் என்பதைத் தானே தெய்வபக்தி என்கிறோம். தேசபக்தி என்று குறிப்பிடுகிறோம்.

இங்கே நீங்கள் அருமையான நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டீர்கள். இந்த நூலைப் பற்றி உலகத்திலேயுள்ள நாட்டு மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக ஆங் கிலத்தில் வெளியிட்டு இருக்கிறீர்கள். ஆனால் நாம் வாழும் நாட்டிலேயே இதைப் பற்றி ஏதும் தெரியாமல் இருக்கிறானே அவ னுக்கும் அல்லவா சொல்ல வேண்டும்? அவ னுக்கு தமிழில் சொல்ல வேண்டாமா?

இந்த நூலில் சைவ சமயத்தைப் பற்றி யும் சொல்லி இருக்கிறீர்கள். வைணவத்தைப் பற்றியும் சொல்லி இருக்கிறீர்கள். அதன் உள்ளே நுழைய நான் விரும்ப வில்லை. இங்கே இந்த விழாவில் கலந்துகொள்ள ஆயிரக் கணக்கானவர்கள் வந்து இருக்கிறார்கள். உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மாண்புமிகு இஸ்மாயில் அவர்களும் இங்கே வந்திருக்கிறார் கள். இதிலிருந்தே பன்றிமலை அடிகளார் சமயங்களையெல்லாம் கடந்து நிற்கிறார் என்பது புலப்படுகிறது. அப்படிப்பட்ட அடி களார் தெரிவித்த கருத்துக்கள் அடங்கிய இந்த நூலில் ஆழ்வாரைப்பற்றியும் கூறியிருக் கிறீர்கள், நாயன்மார்களைப்பற்றியும் சொல்லி யிருக்கிறீர்கள். கீதையைப்பற்றியும் எடுத் துரைத்து இருக்கிறீர்கள்.

இவைகளெல்லாம் உள்ளடக்கிய ஒரு வழியை எங்களுக்கு காட்டுங்கள் என்பதுதான், ஏழை எளிய பாமர மக்களின் சார்பிலே நான் வைக்கும் வேண்டுகோளாகும்.

காஞ்சிப்பெரியவர், ''திருப்பாவையும், திருவெம்பாவையும் ஒன்றுதான். இரண்டை யும் ஒன்றாகக் கருதி விழா எடுங்கள்'' என்று சொல்லி இருக்கிறார். இரண்டும் ஒன்றுதான் என்றால் இன்றைக்கும் அந்த வேறுபாடுகள் இருப்பானேன்? சைவ-வைணவம், வைணவத் திற்கு வடகலை-தென்கலை என்ற வேறுபாடு இருக்கத்தானே செய்கிறது? இன்றைக்கும் வேறுபாடு காரணமாகச் சின்னகோவிலில் கூட அடி தடி குத்து வெட்டு நடக்கத்தானே செய்கிறது.

சாதாரணமானவர்களின் பிரதிநிதி என்ற முறையில் சமுதாயத்தில் ஆமைகளாகவும் ஊமைகளாகவும் சபிக்கப்பட்டவர்களாகவும், தீண்டத்தகாதவர்களாகவும், தாய்மொழியே ஆலயத்துக்கு உள்ளே வரக்கூடாது என்று சொல்லுகின்ற மொழிக்குச் சொந்தக்காரர் களாய் இருக்கின்றவர்கள் சார்பில் உங்களை நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன். இவர்களையெல்லாம் வாழ்விக்க- உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர ஒரு வழியை- ஒரு நெறியை நீங்கள் காட்டுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

# சிவஞான போதச் சிறப்பு

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

(1) உலகப் பெருநூல்கள் ஆகிய விவிலியம் திருக்குரான் திரிபிடகம் செண்ட் அவெஸ்ட்டா முதலியவைகள் அனைத்திலும், மிகவும் சுருக்கமான நூல், திருக்குறள்! அது 'குறுகியது' எனப் பொருள்படும் 1330 குறட்பாக்களால், 2660 சிறிய வரிகளிலேயே இயன்றுள்ளது. இத்தகைய சுருக்கமான திருக்குறளையும்விட, மிகமிகச் சுருக்கமான, ஆனால் மிக விரிவான, பொருட் சிறப்பு மிக்க நூல், சிவஞானபோதம்!

(2) சிவஞானபோதம், 624 எழுத்துக்களில், 216 சொற்களில், 40 வரிகளில் இயற்றப் பெற்றுள்ளது. இத்துணைச் சுருக்கமான அளவில் இயற்றப் பெற்றிருப்பினும், அஃது உலகின்கண் உள்ள பல்வேறு வகையான சமயக் கொள்கைகளையெல்லாம், தன்னகத்தே உள்ளடக்கிப் பொதிந்து வைத்துக் கொண்டு, சிறந்துயர்ந்த தத்துவ ஞானப் பெருநூலாக மேம்பட்டு விளங்குகின்றது.

(3) இறை உயிர் உலகு (பதி-பசு-பாசம்) என்னும் முப்பொருள்களைப் பற்றி, முன்னுக்குப் பின் முரண்பாடு இன்றி,முறையே தருக்கநெறி பிறழாமல் ஆராய்ந்து, தடைவிடை முறையில், தவறான பிற கொள்கைகளை மறுத்தும், தன்கொள்கைகளை நிறுவியும், சமய தத்துவ உண்மைகளைத் திறம்பட விளக்குதலில், சிவஞானபோதம் எல்லையில்லாத சிறப்புடையதாகத் திகழ்கின்றது.

(4) இறைவன் உயிர்களோடு கலப்பினால் உடலின் உயிர்போல் ஒன்றாகியும், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன் போல வேறாகியும், உயிர்க்குயிராதற் றன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம் போல உடனாகியும் நின்று, உயிர்களுக்குக் காணும் உதவி, காட்டும் உதவிகளைப் புரிந்து வரும் முறைமையினை, 'அத்துவிதம்' என்னும் சொற்றொடரின் பொருளால், வெற்றித்திறம் விளங்கும்படி தெளிவித்தருள்கின்ற சிவஞானபோதம், அறிஞர்களுக்கெல்லாம், ஓர் ஒப்புயர்வற்ற ஆராப் பெருவிருந்தாகும்.

(5) சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது, தமிழர்களின் பேரறிவின் பெருவிளைவு என்று போற்றப்படுவது; அறிவு நூல்களின் முடிபெலாம் அகத்தடக்கியது; அருமை பெருமைகள் பலவும் நிறைந்தது. இத்தகைய சிறந்த சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையினைத் தருக்க நெறிமுறைகளுக்கும், அறிவியல் உண்மைகளுக்கும், அருள்ஞானியரின் அனுபவ நலங்களுக்கும், உலகியல் நடைமுறைகளுக்கும் சிறிதும் முரண்படாதபடி, சிவஞானபோதம் அழகுற விளக்கித் தெளிவிக்கும் நிலை, அறிஞர் அனைவரும் மிகப் பெரிதும் வியந்து போற்றுதற்குரியது.

(6) சமய தத்துவ உண்மைகளைப் பிற அயல் மொழியினால்தான், தக்கபடி விளக்குதல் இயலும்; 'வீடுபேறு தமிழாற் கூறார்' என்று பரவலாக,ஒரு வலிவானகருத்து நிலவியிருந்த காலத்து, அக்கருத்து மிகவும் தவறானது; சமய தத்துவ உண்மைகளை அவரவர்களின் தாய்மொழியின் வாயிலாக விளக்குதலே சாலவும் பொருத்தமும் சிறப்பும் உடைய செயலாகும் என்பதனை வலியுறுத்தி, நம்முடைய அருந்தமிழ்ப் பெருஞ்சான்றோர் ஆகிய மெய்கண்டதேவர் பெருமான், தித்திக்கும் செந்தமிழில் செய்தருளிய, தத்துவ ஞானப் பெருநூலே சிவஞானபோதம்!

(7) சங்கரர் இராமாநுசர் மத்துவர் சீகண்டர் நிம்பார்க்கர் வல்லபாசாரியர் சைதன்யர் முதலிய சான்றோர்கள் பற்பலரும் 'அத்வைதம்' பற்றிய தம்முடைய பேருரைகளையெல்லாம், வடமொழியிலேயே இயற்றிப் போந்தனர். அங்ஙனம் இன்றி, அமிழ்தினும் இனிய நமது தாய்மொழியாகிய தமிழ் மொழியிலேயே,

''பொய்கண்டார் காணாப்
புனிதம்எனும் அத்துவித
மெய்கண்ட நாதன்அருள்
மேவும்நாள் எந்நாளோ''

என்று, வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகராகிய தாயுமான சுவாமிகள், பெரிதும் புகழ்ந்து போற்றிப் பாராட்டித் துதித்த, மெய்கண்டதேவரால் அருளிச் செய்யப் பெற்ற ஒப்புயர்வற்ற திப்பிய நூல், சிவஞானபோதம் ஆகும்.

(8) உயர்ந்த பெருநூல்கள் விளக்கத் தகுந்த, சிறந்த பயனுடைய பொருள்கள், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்கள் ஆகும் என்பர் அறிஞர்; அவற்றுள் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பொருள்களை மட்டுமே, திருக்குறள் விளக்கியது. இங்ஙனம் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் தாமும், விளக்க முற்படா

மல் விட்டுச் சென்ற, வீடுபேறு பற்றிய மிக மேலான சிறந்த உண்மைகளையெல்லாம் தெளிவுற விளக்கியருளிய சிறப்புமிக்க நூல், சிவஞானபோதமேயாகும்.

(9) சிவஞானபோதம் பற்பல அதிகரணப் பாகுபாடுகளை யுடையது. ஒவ்வோர் அதிகரணமும், தன்னாற் கூறப்படும் பொருள் (விஷயம்), அதன்கண் ஐயப்பாடு (சம்சயம்), அதற்குப் பிறர்கூறும் கருத்து (பூர்வபட்சம்), அதனை மறுத்துரைக்கும் கொள்கைத் துணிவு (சித்தாந்தம்), ஒன்றோடொன்றற்குள்ள இடையீடில்லாத இயைபு (சங்கதி), என்னும் ஐந்து வகைக் கூறுகள் கொண்டது. இத்தகைய அரிய இனிய அதிகரணப் பாகுபாட்டின் அமைப்பு முறையில் இயன்றுள்ளதனால், சிவஞான போதம் மிக்க நுட்பமும், திட்பமும், ஒட்பமும் செறிந்து, அறிஞர்கள் பெரிதும் வியந்து நயந்து போற்றுதற்கு உரியதாக விளங்குகின்றது.

(10) சிவஞானபோதம், பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களையும் பற்றிச் செவ்விதின் விளக்குகின்றது; அது பன்னிரண்டு நூற்பாக்களையுடையது; பொதுஅதிகாரம், உண்மை (சிறப்பு) அதிகாரம், என்னும் இரண்டு பகுதிகளாக இயன்றது; பிரமாணவியல் இலக்கணவியல் சாதனைஇயல் பயனியல் என்னும் நான்கு இயல்கள் கொண்டது. அதன்கண் முப்பத்தொன்பது அதிகரணங்கள் அமைந்திருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றின் அமைப்பும் இயல்பும், அறிஞர்களுக்கு வியப்பும் விம்மிதமும் விளைவிக்கவல்லன.

(11) அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின்கண் உள்ள திருக்குறள் போன்ற நீதி நூலும், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூலும், சிவஞானபோதம் போன்ற தத்துவ நூலும், திருவாசகம் போன்று உருக்கம் மிக்க பக்தி நூலும், உலகிலேயே வேறு எந்த மொழியிலும் இல்லை !

எல்லா நூல்கள் தம்முள்ளும்
இனிதே சுருங்கித் திகழ்வதெனச்
சொல்லா நிற்பர் திருக்குறளைச்;
சூழ்ந்து கருதின், அதனினுமே.
பல்லாற் றானும் சிவஞான
போதம் சுருங்கிப் பயன்பெருக்கும்!
நல்லோர் புகழ்அம் மெய்ந்நூலின்
நலங்கள் பெரிதும் வரம்பிலவாம்! (1)

நாற்ப தடியால், இருநூற்றுப்
பதினா றெளிய நற்சொல்லால்,
ஏற்ற அறுநூற் றிருபான்நான்(கு)
எழுத்தால், சமயக் கொள்கையெலாம்
தேற்றித் தெருட்டும் சிவஞான
போதச் செழுநூல் போல், எங்கும்
வேற்றோர் நூல்இன் றெனவுரைப்பின்,
மிக்க அதன்சீர் விளம்புவர்யார்? (2)

இறையே உலகே உயிர்என்றே
இலங்கும் மூன்று பெரும்பொருளும்
முறையே தருக்க நெறிநின்று
முன்னும் பின்னும் முரணாமே,
நெறியே ஆய்ந்து தடைவிடையால்,
நிறுத்தும் மறுத்தும் மெய்ந்நிறீஇக்,
கறையின் றுணர்த்தும் சிவஞான
போதம், கடல்போற் பெருஞ்சீர்த்தாம்!(3)

ஒன்றாய் வேறாய் உடனாக
உயிர்கள் தம்மோ டொருங்கியைந்து,
நன்றே அருளால் அவற்றினுக்கு
நயந்து கண்டும் காட்டியும்தான்
நின்றே உதவும் இறைவனருள்
நிலையை, அத்து விதப்பொருளால்
வென்றே விளக்கும் சிவஞான
போதம் அறிவுக் குயர்விருந்தாம்! (4)

அறிவின் முடிந்த முடிபாக
அருமை பெருமை பலநிறைந்து,
செறியும் சைவ சித்தாந்தம்
என்னும் சிறந்த கொள்கையினை,
நறிய அளவும் அறிவியலும்
நல்லோர் அடைவும் நடைமுறையும்
நெறியின் அமையச் சிவஞான
போதம் விளக்கும் நிலை, சிறப்பாம்! (5)

தத்துவப் பொருள்கள் தம்மைச்
சங்கத மொழியி னால்தான்,
மெத்தவும் விளக்கல் கூடும்,
என்றிருந்த விதியை மாற்றி,
வித்தகர் மெய்கண் டார், நம்
வியன்பெருந் தமிழ்நற் சான்றோர்,
தித்திக்கும் தமிழிற் செய்த
நூல், சிவ ஞான போதம்! (6)

சங்கரர், இராமாநுசர், மத்வர், சிகண்டர்,
சைதன்யர், நிம்பார்க்கர் எல்லாம்
சங்கத மொழியில் தான், தத்தம் நூல்கள்
தகவென இயற்றினர் போந்தார்!
இங்கந்த நிலையை மாற்றி, மெய் கண்டார்
எனும்அருட் பெருந்தமிழ்ச் சான்றோர்,
தென்றமிழ் மொழியிற் செய்தளித் தருள்நூல்,
சிவஞான போதநூல் ஆகும். (7)

அறம்பொருள் இன்பம் வீடு,
நான்கும்நூற் பயனாய்ச் சொல்வர்!
திறம்பட அவற்றுள் மூன்றே,
திருக்குறள் கூறா நிற்கும்;
உறழ்ந்தசீர்ப் புலமைத் தெய்வத்
திருவள்ளு வனாரும் ஓதாச்
சிறந்தநற் பொருளைச் செப்பும்,
சிவஞான போத நூலே! (8)

தன்னாற் கூறப் படும்பொருளும்,
அதன்கட் சாரும் ஐயப்பாடும்,
முன்னி அதற்குப் பிறர்கூறும்
முடிபும், அவற்றை மறுத்துரைத்துத்
துன்னி நிறுவும் சித்தாந்தத்
துணிபும், இயைபும், அதிகரணம்
என்ன அமையச், சிவஞான
போதம் தொடர்புற் றினிதிலங்கும். (9)

பதிபசு பாசம் என்னும்முப் பொருளும்
பற்றிநற் பன்னிரு நூற்பா,
பொதுசிறப்பு என்னும் இரண்டதி காரம்,
பிரமாணம் இலக்கணம் பொருந்து
விதிசெய்சா தனமே பயனியல் என்னும்
நான்கியல் ,வியன்முப்பத் தொன்பான்
அதிகரணம் அமையச், சிவஞான போதம்
அறிஞர்கள் வியந்திடத் திகழும் (10)

திருக்குறள்போல் நீதிநூல், சிறந்துயர்தொல் காப்பியம்போல்
பொருத்தமிகும் இலக்கண நூல், சிவஞான போதம்போல்
சுருக்கமிகும் தத்துவநூல், தூயதிரு வாசகம்போல்
உருக்கமிகும் பக்திநூல், உலகினில்வே றொன்றுமில்லை! (11)

— ந. ரா. முருகவேள்

# கம்பர் கண்ட நரசிங்கம்

"செந்தமிழ்ச் செல்வர்"

திரு. ரெ. இராமசாமி, காரைக்குடி.

உலகப் பெரும் இலக்கியங்களில் ஒன்றெனக் கொள்ளத்தக்கதாய், உலப்பிலா இன்பம் நல்கும் உயர்தனிச் செம்மொழியாம் ஒண்மை மிகும் நம் தமிழ் மொழியின், தலை சிறந்த இலக்கியங்களில் தலையாயதான, மகாகவி கம்பன் கண்ட இராமகாதை என்னும் இராமாயணத்தில் ஒரு கட்டம்தான், கம்பர் கண்ட நரசிங்கம் என்பதாகும்.

## வீடணன் அறிவுரை :

இராம இராவண யுத்தத்தின் காரணமாக இராவணனின் மந்திரி சபையில் ஆலோசனை நடைபெறுகிறது. அறவுரை ஆய்ந்து உணர்த்தும் அறிஞன் வீடணன், தன் அண்ணன் இராவணனுக்கு; அவன் மிக்கூர்ந்த ஆசையினால் அக்கிரமமாகக் கவர்ந்து வந்த சீதையை இராமன் பால் சேர்ப்பித்துவிடுவீர் என நியாயத்தின் பெயரால் நிரம்ப எடுத்துரைத்தும், அவன் உணரா நிலையில், "அண்ணா! மகாவிஷ்ணுவே மாற்றுருவில் மாவீரன் இராமனாக வந்துள்ளான். அந்த நாராயணனைப் பகைத்துக் கொண்டு அழிந்தொழிந்தோர் பலராவர். அத்தகையவர்களில் இரணியன் என்பவனும் ஒருவன். அவன் அழிந்த வரலாறு உரைக்கின்றேன். அது கேட்டு உணர்ந்தேனும் உம்முடைய அழிவினின்றும் அறிவு திருந்தி உய்வீராக" என நன்கு விளக்கி உணர்த்துகின்றான்.

## பிரகலாதனின் இறை உணர்வு :

இரணியாசுரன் என்பான் மிகக் கடுமையான பல தவங்கள் செய்து வரம்பெற்று ஏறக்குறைய இறைவனுக்கொத்த எல்லாத் தன்மைகளையும் எய்தி இறைவனாகவே இலங்கினான், "இரணியாய நம" என்று சொல்லி, எல்லோரும் தன்னையே கடவுளாக வணங்க வேண்டுமென்று உலகத்தவர்க்கு உத்தரவிட்டான். அதுபோல் நடந்து வருங்கால், கல்விப் பருவமெய்திய தன் ஒரே புதல்வனான, பிறவியிலேயே ஞானவானாகப் பிறந்த பிரகலாதன் என்பானை, அரச குருவிடம் ஒப்புவித்துக் கல்வி கற்கச் செய்தான். குரு முதன் முதலில் சொல்லி ஆரம்பிக்க வேண்டிய இறைவன் பெயருக்குப் பதில், "இரணியாய நம" என்று பிரகலாதனைச் சொல்லச் சொன்னார். அவனோ, தன் தந்தையின் பெயரைக் கூறாது "நமோ நாராயணாய நம" என்ற இறைவன் பெயரை எழில் மிகுந்த கம்பீரத்தோடு உச்சரித்தான். குரு எவ்வளவோ எடுத்தியம்பியும் அவன் அப்படியே தான் உறுதி குலையாது உரைத்தான்.

## இரணியன் இயற்றிய இடர் :

இச்செய்தி கேட்ட இரணியன் தன் மகனுக்கு ஆரம்பத்தில் பக்குவமாகவும், பிறகு கோபத்தோடும் தன் பெயரையே முதலில் சொல்லிக் கல்வி கற்கத் துவங்கும்படி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், பிரகலாதன் அவன் பெயரைக் கூறாது, இறைவன் பெயரையே இன்பமாக மீண்டும் மீண்டும் கூறி இசைத்தான். அத்தோடு அவ்விறைவன் பெருமையையும் பீடுறத் தன் தந்தைக்குப் பெரிதும் விளக்கினான். அப்போது இரணியன் முன்னிலும் பன்மடங்கு முனிந்து, "இவன் என் பிள்ளையாய்ப் பிறந்தும் தகப்பன் பேர் சொல்லாத தான்தோன்றியாய் இருப்பதோடு, என் குல விரோதியைக் கொண்டாடி அவனுக்கு அடியவன் என்று சொல்லி எனக்குப் பகை ஆகிவிட்டான். எனவே இவனை இப்பொழுதே இழுத்துக் கொண்டுபோய் இடருறுத்திக் கொல்லுங்கள்" என அருகிருந்த அசுரர்கட்கு ஆணையிட்டான்.

உடனே அவர்கள் அவனைப் பல கொடிய ஆயுதங்களால் துன்புறுத்தியும், எரிகிற நெருப்பில் இட்டும், ஐராவதம் என்ற பெரிய யானையைக் கொண்டு மிதிக்கச் செய்தும், நஞ்சுணவை ஊட்டியும், அவன் ஒரே உறுதியாக இறைவன் திருப்பெயரைச் சொல்லி எவ்வித இடரும் தீண்டா நிலையில் அப்படியே இனிது இருந்தான்.

## தந்தை தனயன் வாதம் :

மகன் மாயாது உயிர் பிழைத்ததை மன்னன் இரணியன் எண்ணி மனங் கொதித்து "இனி இவனை நானே கொல்வேன்" என்றான். அதுபோது பிரகலாதன், இறைவன் பெருமையை இன்னும் விளக்கமாக எடுத்தியம்பியும் இரணியன் ஏற்காது, இறுதியாக இதயம் கோபாக்கினியால் கொதிக்கும் நிலையில் கோரைப் பற்கள் தோன்ற நகைத்து பிரகலாதனை நோக்கி, "பரந்தாமன் ஒருவனே உலகப் பொருள்கள் எல்லாவற்றிலும் கலந்து நிற்பதாகக் கூறுகிறாயே? அது இயலுமா? அப்படியாயின் அவனை, இங்கே உள்ள தூணில் எனக்குக் காட்டு. நான் அவனைப்

பார்த்த பின் செய்ய வேண்டியதைச் செய்கிறேன்'' என்று செம்மாந்து செப்பினான். அப்பொழுது அருமைச் சிறுவன் அனைத்துணர் அறிஞர்போல் அண்டம் முழுதும் நிறைந்துள்ள ஆதி மூலமாம் இறைவன் நிலையை வெகு அழகாக எடுத்து அறிவுறுத்துகின்றான்.

## மெய்ப்பொருளின் தன்மை :

''ஆம் அவ்விறைவன் சாணிலும் உள்ளான். சராசர அணுவிலும் உள்ளான். அந்த அணுவைக் கோடானுகோடி கூறுகளாகப் பகுத்திட்ட பரமாணுவிலும் உள்ளான். பென்னம் பெரிய மேருவிலும் உள்ளான். அம்மட்டோ! அவனைக் காட்டு என்று முன்பு நீ சொன்ன அச்சொல்லினும் உள்ளான். ஆகவே, இதனை நீர் விரைவில் காணுவீர்'' என்று மிடுக்காகப் பிரகலாதன் முன்வினைத் தொடர்பால் கிட்டிய பேரறிவாற்றலால் அம்மெய்ப்பொருளின் தன்மையை இரத்தினச் சுருக்கமாக எடுத்தியம்பியதும், ''மிக்க நன்று'' என்று இரணியன் கோப நகை கொக்கரித்த தன்மையினை, கவித்துவப் பெருந்தகையாம் கவிக்கொரு வேந்தென்னும், உலக மகாகவி கம்பர் வாக்கிலே உலவி வருவதை இதோ கேளுங்கள்.

சாணினும் உளனோர் தன்மை
அணுவினைச் சதகூறு இட்ட
கோணினும் உளன்மா மேருக்
குன்றினும் உளன்இந் நின்ற
தூணினும் உளன்நீ சொன்ன
சொல்லினும் உளன்இத் தன்மை
காணுதி விரைவின் என்றான்
நன்றெனக் கனகன் நக்கான்

## உடலையுந் தின்பேன் :

உடனே இரணியன் பெருஞ்சினங்கொண்டு இடியின் ஒலியைப்போல முழங்கிப் பிரகலாதனை நோக்கி, அவனுக்கு எதிரே உள்ள ஒரு தூணைக் காட்டி, ''அட பயலே! நீ சொன்ன அந்த அரியை இந்தத் தூணிற் காட்டு! அப்படி நீ காட்டாமற் போனால் ஒரு யானையை வலிய சிங்கம் உறுமிக் கொல்லுவதுபோல் உன்னைக் கொன்று, உன் உதிரத்தைக்குடித்து, உடலையுந் தின்று விடுவேன்'' என்று அவனைத் தீர்த்துக்கட்டும் முடிவில் ஆர்ப்பரித்த நிலையை, அறிவினுக்கு அறிவினை அறிபவன் என்னும், செறிபெரும் கேள்விச் செல்வனாம் கம்பனின் கலைநிலை உருவாம் கவிதைக் கண்ணாடி வாயிலாக இதோ காணுங்கள்!

உம்பர்க்கும் உனக்கும் ஒத்துஇவ்
வுலகெங்கும் பரந்து ளானைக்
கம்பத்தின் வழியே காணக்
காட்டுதி காட்டி டாயேல்
கும்பத்தின் கரியைக் கோண்மாக்
கொன்றென நின்னைக் கொன்றுன்
செம்பொத்த குருதி தேக்கி
உடலையுந் தின்பேன் என்றான்

## என்னுயிர் யானே மாய்ப்பேன் :

இவ்வாறு இரணியன் கூறிய சொற்களைக் கேட்ட பிரகலாதன், ''தந்தையே! நீர் என்னைக் கொன்றுவிடுவதாகப் பலமுறை சிறிதும் கூசாமல் கூறிவிட்டீர். அப்படிச் செய்ய உம்மால் இயலாது என்று நான் சொல்லியும், அதனை மறந்து விட்டீர். இப்பொழுது நான் சொன்ன அக் கடவுள் நீர் காட்டிய இந்தத் தூணில் நிச்சயமாகத் தோன்றுவார். நீர் அவரைக் காணத் தகாதவராயினும், என் மெய்யன்பினால் உமக்கு எதிரில் வருவார். அவ்வாறு அவர் தோன்றவில்லை எனில், என்னை நீர் கொல்லுவதற்கு முயற்சிக்க வேண்டியதில்லை. நானே என் உயிரை மாய்த்துக் கொள்வேன். நான் உயிருடன் இருப்பேனாயின் எம்பெருமானுக்கு மெய்யடியன் ஆகேன்'' என்று அறுதியிட்டு உறுதி கூறிய ஆணையுரை இதோ வருகிறது. தமிழ் தவம் செய்த மாதவப் பயனே என்னும் அமிழ்தினும் இனியசொல் அடங்கிய உருவாம் அமரகாவியம் அருளிய கம்பன் கவி ஓவியமாக :

என்னுயிர் நின்னால் கோறற்கு
எளியதொன்று அன்றி யான்முன்
சொன்னவன் தொட்ட தொட்ட
இடந்தொறுந் தான்றா னாயின்
என்னுயிர் யானே மாய்ப்பன்
பின்னும்வாழ் வுகப்பல் என்னின்
அன்னவற்கு அடியேன் அல்லேன்
என்றனன் அறிவின் மிக்கான்

## சிரித்தது செங்கட் சீயம் :

அவ்வுரை கேட்ட இரணியன் கோபச் சிரிப்புச் சிரித்து மனம் கொதித்து ஆரவாரித்தெழுந்து மகன் காட்டிய தூணைத் தன்கையால் அறைந்தான். அக்கணமே ஆதிமூலமான மெய்ப்பொருள் நரவடிவமும் சிங்கமுகமும் கொண்ட நரசிங்க வடிவாய் அத்தூணிற்குள்ளிருந்து அண்டங்கள் யாவும் அதிர்ந்து பிளந்து போகும்படி ஆர்ப்பரித்துச் சிரித்ததை ஓவியக் கவிதைக்கு ஒருவனோ என்னும் காவிய வானக் கதிரவனாம் கம்பன் வாக்கிலே கண்டுண்டு களியுங்கள்.

நசைதிறந்(து) இலங்கப் பொங்கி
நன்றுநன்(று) என்ன நக்கு
விசைதிறந்(து) உருமு வீழ்ந்த(து)
என்னஓர் தூணின் வென்றி
இசைதிறந்(து) உயர்ந்த கையால்
எற்றினான் எற்ற லோடும்
திசைதிறந்(து) அண்டங் கீறிச்
சிரித்தது செங்கட் சீயம்

## புறப்படு புறப்படென்றான் :

அத்தருணத்தில் இரணியன் அகங்காரங் கொண்டு அதிகோபமாய் அதட்டி, ''ஆரடா! இந்தத் தூணிற்குள் இருந்து கொண்டு சிரித்த

வன்? இச் சிறுபயல் சொன்ன அரி என்பவன் நீதானா? எனக்கு அஞ்சி ஓடிக் கடலில் தஞ்சம் புகுந்த நீ, அங்கு நான் வரக்கூடுமென்று எண்ணி, இங்கு இந்தத் தூணிற்குள் வந்து ஒளிந்துள்ளாயோ? அடே! நீ என்னுடன் போர் செய்ய வல்லவன் ஆயின், இப்பொழுதே வெளிக் கிளம்பி வா! வா!'' என்று அக்கினிக் குழம்புபோல் ஆத்திரம் பொங்க அரற்றி, அரிமா ஒலிபோல் ஆரவாரித்து, அகந்தை மிகுந்த நிலையில், அதி அலட்சியமாக அத் தூணைத் தன் காலடியால் உதைக்கச் சென்ற அக்காட்சியை, கவிஞரின் ஓங்கிய கலைஞன் யாத்த கவியினுக் கணியாம் கண்ணே என்னும் கம்பனின் கவிச் சித்திரத்திலே இங்கே இதோ காணுங்கள்.

ஆரடா சிரித்தாய் சொன்ன
அரிகொலோ அஞ்சிப் புக்க
நீரடா போதாது என்று
நெடுந்தறி நேடி னாயோ
போரடா பொருதி யாயில்
புறப்படு புறப்ப டென்றான்
பேரடா நின்ற தாளோ
உலகெலாம் பெயரப் போவான்

## கம்பன் கண்ட நரசிங்கம் :

இவ்வாறு இரணியன் ஆத்திரத்தால்ஆர்ப் பரித்து அத்தூணைத் தன் காலடியால் உதைக்க நெருங்கிய அளவிலே அண்டங்கள் யாவும் அதிரும்படி அத்தூண் படீரென்று இருபிள வாகப் பிளந்தது. அதனுள்ளிருந்து எங்கும் நிறைந்தொளிரும் அடியவர்க்கெளியனாம் ஐயன், உக்கிர நரசிங்கராக வெளியே தாவிய உருத்திரத் தோற்றத்தைப் பொன்னித்துறை தவழ் புனிதனாம் நமது கன்னித் தமிழ்த்திறம் காட்டிய கவிச் சக்ரவர்த்தி கம்பநாடனின் கவி யினுக்கு அணிபோல் செவிநுகர் கனி எனும் காவியக் கோவிலின் சீற்றமே உருவாய்த் தோற்றுமோர் கவிதைச் சிற்பத்திலே இதோ கண்டு களியுங்கள் :

பிளந்தது தூணும் ஆங்கே
பிறந்தது சீயம் பின்னை
வளர்ந்தது திசைகள் எட்டும்
பகிரண்டம் முதல மற்றும்
அளந்ததுஅப் புறத்துச் செய்கை
யாரறிந்து அறைய கிற்பார்
கிளர்ந்தது ககன முட்டை
கிழிந்தது கீழும் மேலும்.

---

# செய்திச் சுருக்கம்

## பைந்தமிழ்ச் சொற்பொழிவு அறக்கட்டளைத் தொடக்க விழா :

வடாற்காடு மாவட்டம் இரத்தினகிரி (திருமணிக்குன்றம்), திருமுருகன் திருமணக் கூடத்தில், தவத்திரு பாலமுருகன்அடிமை பைந்தமிழ்ச் சொற்பொழிவு அறக் கட்டளைத் தொடக்கவிழா, 12-5-81 அன்று, குடியேற்றம் இலக்கிய வளர்ச்சிமன்ற அறக்கட்டளைத் தலைவர் திருமிகு பி.ஆர். ஸ்ரீஹரி எம்.ஏ., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள், அறக்கட்டளையைத் துவக்கிவைத்து வாழ்த்துப்பேருரை வழங்கினார்கள். ஆற்காடு தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ஏ. எம். சேதுராமன் எம். எல். ஏ., புலவர் திரு. இ. கோ. பொன்முடி, எம். ஏ., புலவர் திரு. சி. கோவிந்தசாமி, எம். ஏ., பி.எட்., புலவர் திரு. வெ. பதுமனார், எம். ஏ., புலவர் திரு. க. எதிராசனார் எம். ஏ., பி.எட்., முதலிய அறிஞர் பெருமக்கள் பலர் விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## திருப்புகழ் உரைநூல் வெளியீட்டு விழா :

பொன்னேரி வட்டம், பெரியபாளையத்திற்கு அருகிலுள்ள சின்னம்பேடு அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி இராசகோபுரத் திருப்பணியும், கும்பாபிடேக விழாவும் அண்மையில் சிறப்புற நிறைவுபெற்றதனையொட்டி, அக்கோயிலைக் குறித்து அருணகிரிநாதர் பாடியருளிய திருப்புகழ்ப் பாடல்களும், அவற்றிற்குச் சித்தாந்தச் செம்மல்-இராவ்சாகிப் திரு. நல்முருகேச முதலியார் அவர்கள் எழுதிய உரை விளக் விளக்கமும் கொண்ட நூலின் வெளியீட்டுவிழா, அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன் ஐ. ஏ. எஸ்., அவர்கள் தலைமையில் 23-4-81 அன்று மிகவும் சிறப் புற நடைபெற்றது.

# சைவம்

திருமதி டாக்டர் ராதா தியாகராஜன், M.A., Ph.D.,

மதுரை.

உலகம் இன்பமாகவும் அமைதியாகவும் நடைபெற வேண்டிச் சிந்திப்பதும், பேசுவதும் செயல்படுவதுமே உலகப்பேரறிஞர்களின் இயல்பாக இருந்து வருகிறது. மனத்தில் தூய்மையும், சொல்லில் வாய்மையும், செயலில் மெய்மையும் ஒவ்வொருவரிடத்தும் அமைவதே "பொய்தீர் ஒழுக்கம்'' என்றும், அதனை அவரவர் அறிவுக்கு ஏற்றவாறு ஆராய்ந்து காட்டுவதே சமயம் என்றும், பற்பல சமயச் சான்றோர் கூறும் நூல்களால் அறிகின்றோம்.

சமயச் சான்றோர்களில் பலர் தங்களுடைய அறிவுரையாலும், ஒழுக்கத்தாலும் தலைவர்களாகி ஏனை மக்களைத் தம்வழி நின்று, தாம் கண்ட உண்மைகளைஉணர்ந்து இன்புற்று வாழுமாறு செய்திருக்கிறார்கள். சிலர், மக்கள் அறிவைத் தூண்டி, உள்ளதன் உண்மையை அவர்களே ஓர்ந்து உணர்ந்து ஒழுகுமாறு செய்துள்ளார்கள். இவ்வகையில் சமயங்கள் நூலறிவு காட்டி வற்புறுத்துவனவும், மெய்யுணரும் நெறி காட்சி வற்புறுத்துவனவும் என இரு திறப்படுகின்றன. இவற்றுள் மெய்யுணரும் வழிகாட்டி நிற்கும் சமய நெறிகளில் சைவம் ஒன்றாக நிற்கிறது.

சைவம் என்ற சொல்லுக்கு, சிவசம்பந்தம் என்று பொருள் கூறப்படுகிறது. ''சைவம் சிவத்தோடு சம்பந்தமாவது ''என்று திருமூலர் திருமந்திரம் உரைக்கின்றது. அப்படியானால் சிவம் யாது? அதனோடு சம்பந்தப்படுவது யாது? என்ற கேள்விகள் எழுகின்றன.!

காணப்படும் உலகத்தில் காணப்படாதவை இரண்டு; அவை உயிரும், கடவுளும் என்ற இரண்டுமாகும் என்று சைவர்கள் கூறுவர். உயிர்களாயினும் அவை நின்ற உடம்பைக் கொண்டு உணரப்படும்; கடவுளோ எனின், அது உடம்புதானும் இன்றி, எல்லாப் பொருளையும் கடந்து நிற்பது. அது பற்றிக் கூறவந்த ஞானசம்பந்தர், ''இன்னவுரு இன்ன நிறம் என்று அறிவதேல் அரிது'' என்பர்.

ஒருவாறு காணப்படும் உயிரும் உலகமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. உடம்பு தன்னிலையில் அறிவில்லாதது; உலகப் பொருள்களால் வளர்ச்சி பெறுவதால், அது உலகியற் பொருளோடு சேர்கிறது. உயிர் தன்னிலையில் அறிவும் ஆற்றலும் ஒருங்கேயுடையது. ஆயினும் அது உடம்பின் துணையின்றி, தன் அறிவையோ ஆற்றலையோ செயற்படுத்த முடியாது. உயிரில்லையாயின் உடம்புக்குச் செயவில்லை. உடம்புக்கும் உயிருக்கும் எவ்வகையில் சம்பந்தம் உண்டாகியது? ''என் உடம்புக்குள் என்னுயிர் எவ்வாறு சம்பந்தப்பட்டது?'' ''வந்தவாறு எங்ஙனே? போமாறு ஏதோ?'' என்று திருநாவுக்கரசர் கேட்கிறார். ''நான்ஆர், என் உள்ளமார், ஞானங்கள்ஆர்'' என்று திருவாசகம் வினவுகிறது.

அறிவும் செயலும் இல்லையாதலால், உடம்பு தானாகவே உயிரை நாடி அடையாது. உயிரும், உடம்பின்றி ஒன்றையும் அறியவும் செய்யவும் முடியாதபடியால் அது தானாக ஓர் உடம்பை அடைய முடியாது; முடியுமானால் அழகில்லாமலும், கண் காது கை கால் முதலிய உறுப்புகள் குறைந்துமுள்ள மக்களை நாம் காண முடியுமா? ஆகவே உயிரும் உடம்பும் சம்பந்தப்படுவதற்கு மூன்றாவதாக ஒன்று இருக்கவேண்டும் என்று கண்ட சைவர்கள், அதைச் சிவம் என்றும் கடவுள் என்றும் கொண்டனர்.

சிவபரம் பொருள் இவ்வுலகைப் படைத்து உயிர்களை உடம்போடுசம்பந்தப்படுத்தி வாழச் செய்வதுதான் படைப்பு எனப்படுவது. உடம்பு என்பது தோலும் எலும்பும் சதையுமாகக் காணப்படும் இந்த யாக்கையை மட்டும் குறிக்காது. இதற்கு உள்ளீடாய் நிற்கும், மனம் முதலிய தத்துவ மயமான சூக்கும, காரண வுடம்புகளையும் கொள்ள வேண்டும். மிக மிக நுட்பமான காட்சிகளுக்கும், செயல்களுக்கும் உதவியாக இருக்கும் மனம் முதலிய உட்கருவிகள் இல்லையாயின், நம் உடம்பு, உயிர்க்கு இடமும் துணையுமாக முடியாது. அதனால் உலகைப் படைத்த சிவம், மனம் முதலிய தத்துவங்களைக் கொண்ட மாயா இயந்திரமாகிய உடம்பையும் படைத்துக் கொடுக்கின்றது. அதன்கண் இருந்து உயிர், தன் அறிவு இச்சை செயல் ஆகிய மூன்றையும் செயற்படுத்துகிறது.

ஆகவே உயிர்க்கு உறுதுணையாக இருக்க இவ்வுடம்பு தரப்படுகிறது என்றால், உயிர்க்கும் சிவனுக்கும் என்ன சம்பந்தம்? இந்தச் சம்பந்தத்தைக் கூறுவதுதான் சைவம். உயிர்களுக்

காக இந்த அழகிய உலகம் படைக்கப்பட்ட தென்றால் இந்த உலகத்துக்கும் சிவனுக்கும் உள்ள சம்பந்தம் யாது? அந்தச் சம்பந்தத்தைக் கூறுவது சைவம். இவ்வாறு உயிர்க்கும் உலகுக்கும் சிவத்துக்கும் உள்ள சம்பந்தத்தைக் கூறுவது பற்றித்தான் திருமூலர் ''சைவம் சிவத்தோடு சம்பந்தமாவது'' என்ற திருமந்திரத்தை மொழிகின்றார்.

இவ்வுலகப் பொருள்யாவும் அணுவில் ஒடுங்கி முடிவில் ஆற்றலாய்ச் சக்தியாய் உளது என்பது, இன்றைய சட விஞ்ஞானத்தின் முடிவு. இன்றைய விஞ்ஞானிகள் அதனை அணு சக்தி என்று கூறுகின்றனர். இச்சக்தி எங்கே இருக்கிறது? எங்கேனும்அதற்கோர் இடம் வேண்டும். மேலும் சக்தி தங்கும் இடம் ஒரு சக்தி நிலையமாகும். அந்த நிலையத்தைச் சைவர்கள் அருட்சக்தி என்றும் சிவசக்தி என்றும் கூறுவர். சிவசக்தியில் ஒடுங்கியிருக்கும் சடசக்தியை மாயை என்று கூறுவர்; சிவன் அந்த மாயையைக் கலக்கி இவ்வுலகமாக, உடம்பாகத் தோற்றுவிப்பது சிவனது சிருஷ்டித் தொழிலாகும்; சிவசக்தி ஞான மயமானது; அதனால் அது சேதனமாகும். சடசக்தியாகிய மாயை அசேதனம். அசேதனமாகிய மாயையால் தோன்றும் இவ்வுலகியற் பொருள்கள் ஓர் ஒழுங்கிலும் முறையிலும் இயங்குதற்குச் சைதன்யமாகிய சிவசக்தி உண்ணின்று உதவுகிறது. அவ்வாறு இல்லையாயின் இன்றைய விஞ்ஞானத்துக்குப் பெருமையே இல்லாது போயிருக்கும்.

எனவே சக்தி வடிவாயிருந்த ஒன்றை உலகமாக்கி உயிர்க்கு அளித்த பெருமையால் சிவன் உடையவனும், உலகமும் உடம்பும் அவனுடைய உடைமையுமாகின்றன. இதுபற்றியே மணிவாசகர் ''உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும் கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே'' என்று பாடுகின்றார். இவ்வாறே பல இடங்களிலும் சிவனை ''ஊனார்புழுக்கூடு இது காத்து இங்கு இருப்பதானேன் உடையானே'', ''உடையாய்'' எனப் பன்னிப் பன்னிப் பாடுகின்றார். இதனால் சிவனுக்கும் உலகுக்கும் உள்ள சம்பந்தம், செய்பவனுக்கும் செய்யப்படு பொருட்கும், உடையவனுக்கும் உடைமைக்கும் உள்ள சம்பந்தம் என்பது தெரிகிறது. இவ்வுலகு உடம்புகளைப் படைத்து உயிர்கள் வாழ்வாங்கு வாழ அளித்திருப்பதால் சிவன் உதவுபவனும் உயிர்கள் உதவி பெறுபவர்களுமாகிச் சம்பந்தப்படுகிறார்கள்.

உயிர்களுக்குச்சிவன் இந்த உதவியை ஏன் செய்ய வேண்டும்? உலகு உடம்புகளால் உயிர் அடையும் பயன் என்ன? காணப்படுவன கொண்டு காணப்படாத உண்மை காண்பது சிவநெறி என முன்னே கூறினேன். அந்த நெறியிலேயே இவற்றுக்கு விடைகாண வேண்டும்.

கண் காது முதலிய கருவிகளைக் கொண்டு நாம் உலகியல் வாழ்க்கைக் குரிய அறிவைப் பெறுகின்றோம். அறியும்போதும் எதையும் முழுதும் அறிய முடிவதில்லை. சிலவற்றை நேரில் கண்டும், சிலவற்றை அறிந்தோர் காட்டக்கண்டும் அறிவு பெறுகின்றோம். இதனால் நமது அறிவு குறைவுடையதென்பது தெரிகிறது.

நேற்றும் இன்றும் நிகழ்வதை அறியும் நம் அறிவினால், நாளை நடப்பதை முழுதும் அறிய முடிவதில்லை. தொடக்கத்தில் இன்னது என்று தெரியாமல் மயங்கும் நம் அறிவு, பின்பு தானே தெரிந்து கொள்வதும் அனுபவத்தில் கண்டது. இதனால் நமது அறிவு எதனாலோ மறைப்புண்டிருப்பது தெரிகிறது. அந்த மறைப்பு 'மலம்' என்று கூறப்படுகிறது. இவ்வாறே நம்முடைய மனம் முதலிய கரணங்களும், கண் காது முதலிய கருவிகளும் நினைத்தல், காண்டல், கேட்டல் முதலிய வினைகளைச் செய்தே அறிவு விளக்கம்பெற வேண்டியிருக்கிறது. அறிவு அனுபவங்களுக்கு நாம் செய்யும் ஒவ்வொரு செய்கையும் வினையென்று கூறப்படுகிறது.

இதனால் இந்த மாயையும் வினையும், உயிர்கள் மலத்தின் மறைப்பிலிருந்து நீங்கி அறிவு விளக்கம் பெற்று இன்புறுவதற்கு உதவுகின்றன என்பது தெளிவாம். உடம்பும் உலகமுமாகிய மாயையால், வினைசெய்து அறிவு விளக்கம் பெறுமுகத்தால் உயிர் மலமாசு நீங்குகிறது. மல மறைப்பு நீங்கும் வரையில் உயிர் உடம்போடு சம்பந்தப்பட்டு வினைசெய்து அதன் பயனாகிய இன்ப துன்பங்களை அனுபவிக்கும்;வினையும் உடம்பும்ஒன்றோடொன்று பின்னிக் கிடப்பதால் பௌத்தர்களும் உடம்பை, ''வினையின் வந்தது வினைக்கு விளைவாயது'' என்று கூறுகின்றனர். வினையும் உடம்பும் நீங்கும் போது உயிர் ஞான வொளி பெற்றுப் பேரின்பம்பெறுகிறது. இதனால் நமக்கு உடம்பையும், அதற்கு உரிய வினையையும் இறைவன் உதவியது, நாம் மலமாகிய இருள் நீங்கி இன்பம் பெறும் பொருட்டு என்பது விளங்கும். இதுபற்றியே சைவப் பெரியோர்கள் ''வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்'' என்று சிவனைக் கூறுகின்றனர்.

ஆகவே இருள் நீங்கி இன்ப ஞானம் பெறுவதே நமது வாழ்வின் குறிக்கோள் என்பது துணியப்பட்டது. இதற்கு நாம் செய்ய வேண்டியது யாது? நம் உடம்பின் நலத்தையும், நம்மைச் சூழவுள்ள அற்புதமான உலகியற் பொருள்களின் நலங்களையும் அறிந்து, அவற்றின் இடையில் இருந்து வினை செய்து வாழும் நமது நிலைமையை உணர்தல் வேண்டும்; இது தம்மை உணர்தல் அல்லது ஆன்மஞானம் எனப்படும்.

இந்த ஆன்ம ஞானமானது இவ்வுலகில் தோன்றும் ஒவ்வொரு உயிரும் நம்மைப்போல இருள்நீங்கி, இன்பம் பெறுவதற்கென்றே தோன்றியுள்ளன என்று உணர்த்தி, அவற்றின் பால் அன்பும் அருளும் கொண்டு இனியன செய்தற்கு வேண்டிய நல்லறிவையும் நல்லொழுக்கங்களையும் நம்பால் அளிக்கின்றது; ஒருகால் பிறவுயிர்கள் அறியாமையால் துன்பம் செய்யினும் அவற்றைப் பொறுத்து அவற்றுக்குத் தீங்கு

செய்யாத செம்மை நிலையை நல்கும். இதைத் தான் தவம் என்று திருவள்ளுவர் முதலியோர் கூறுவர். தாயுமானவர், ''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே'', ''அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே'' என்றும் கூறுகிறார்.

எல்லா உயிர்க்கும் நல்லதே செய்ய முற்படும்போது அது தரும் புகழ்தோன்றி, நம்மை மயக்குகிறது. அதன் வழியாகத் தீவினையும் துன்பமும் புகுவதற்கு இடமுண்டாகிறது. இந்த இடையூற்றை நீக்குவதற்குக் கோயில் வழிபாடும், இறைவழிபாடும், திருநாம பஜனையும் மேற்கொள்ளப்படுகின்றன. வழிபடும்போது மனம் இறைவன் செய்த உதவியை நினைந்து புகழ்கிறது. வாய் அவன் திருப்பெயரை ஓதி இன்புறுகிறது. உடம்பு பூவும் நீரும் பெய்து அருச்சிக்கிறது. இவ்வகையில் நம்முடைய மனமும் மொழியும் மெய்யும் இறை வழிபாட்டில் ஒன்றுவதால் வினைகள் நீங்குகின்றன. ஞானம் விளங்குகிறது. இதை மெய்கண்டதேவர் ''வினையால் அசத்து விளைதலால் ஞானம் வினை தீரினன்றி விளையா-வினைதீர ஞானத்தைத் நாடித் தொழவே அது நிகழும். ஆனத்தால் அன்பின் தொழு'' என்று கூறுகின்றார்.

—தொடரும்.

---

# " கடவுள் இல்லையா ? எங்ஙனம் கூற இயலும் ? "

'கடவுள் இல்லை' என்று சொல்லுவதை, ஒரு சிலர் தமக்கேயுரிய நாகரிகப் பாங்காகவும் முற்போக்கு நெறிக் கொள்கையாகவும் கருதிக்கொண்டு, கடைப்பிடித் தொழுகுவதை நாம் காண்கின்றோம். உலகில் தோன்றிக் கடவுள் நெறியைப் பரப்பிய சமயச் சான்றோர்கள் அனைவரும், பழுத்த நல்ல பகுத்தறிவாளர்களாகவும், முழுக்க முழுக்க முற்போக்கு நெறியாளர்களாகவும், சிறந்த தூய சீர்திருக்காரர்களாகவும், உயரிய ஒழுக்க சீலர்களாகவும், பிறர்நலம் பேணும் பெருந்தகையாளர்களாகவுமே, விளங்கி வந்துள்ளனர். இயேசுநாதர், புத்தர் பெருமான், முகம்மது நபிகள் போன்ற பண்டைப் பெருஞ்சான்றோர்களும், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இராமலிங்கர், காந்தியடிகள் போன்ற இஞ்ஞான்றைச் சான்றோர்களும், கடவுளுணர்வில் தலை சிறந்தோங்கிக், கடவுள் நெறியைப் பரப்பி, உலக மக்களுக்கெல்லாம் பலப்பல பெருநலங்களைப் புரிந்துள்ளனர்.

**சர். சார்லஸ் எலியட்** என்னும் பேரறிஞர், ''யாராவது கடவுள் இல்லை என்று என்னிடம் கூறினால், இறந்தொழியக்கூடிய, பரமாணுவினும் மிகச் சிறிய, ஓர் அற்ப மனிதன், இவ்வுலகின் ஓர் அணுத்துணைப் பரப்பில், ஒரு நொடி நேர அளவு மட்டுமே வாழ்ந்து கொண்டு, அழகும் வியப்பும் ஒழுங்கமைப்பும் நிறைந்து, எல்லையின்றி விரிந்து 'விளங்கும் பேரண்டத் தொகுதிகளையெல்லாம் நன்கினிது கண்டுணர்ந்து வைத்துங்கூட, மெய்ப்பிக்கப்பட முடியாத இந்த ஒரு கருத்தை, இத்துணை உறுதியாகக் கொள்ளுதல் எவ்வாறு இயலும்? என்றுதான், நான் வினவுகிற்பேன்.'' என்று குறிப்பிடுகின்றார்.

''If you say 'There is no god', I can only ask you, how a speck of a mortal, living for a moment, on an atom of an earth, in plain sight of an infinite universe, full of beauty, wonder and design, can confidently hold so improbable a view ? ''.

—Sir Charles Eliot

''கடவுள்இல்லை'' என்றொருவன் கட்டுரைப்பின்
''சிற்றுணர்வை; கணமே வாழ்வை;

படர்உலகில் அணுவனையை; பரந்தஅண்டப்
பரப்பமைப்பும், அழகும், பண்பும்,

உடனாய இயங்குமுறை ஒழுங்கனைத்தும்,
கண்களிற்கண் டுணர்ந்து வைத்தும்,

திடனாய்நீ, பொருத்தமில்இத் தெளிவில்உரை
செப்பல்எங்ஙன்?'' என்றே கேட்பேன்!''

— தமிழாக்கம் : ந. ரா. முருகவேள்

ஆதலின் நாம் அனைவரும், எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும், கடவுள் ஒருவர் உண்டு என்று உணர்ந்து கடைப்பிடித்து, வையத்து வாழ்வாங்கு நலமுற வாழ்ந்து மகிழ்ந்து, உய்திபெற முயலுவோமாக!

# தொல்காப்பியம் சுட்டும் சமய உண்மைகள்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

நமது தமிழ் மொழியிலுள்ள நூல்கள் அனைத்திலும், மிக மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்தது, தொல்காப்பியமே யாகும். இதன்காலம் சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளர்கள் உடன்பட்டுள்ளனர் (1). இத்தகைய பழம் பெரும் தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலேயே, சமய தத்துவக் கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன.

''தொல்காப்பியம் என்னும் பழமை மிக்க இலக்கண நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கணக் குறியீட்டுச் சொற்கள், வாழ்க்கை இயலின் இலக்கணத்தை விளக்குவதற்குத் தேவையான, தத்துவக் குறியீட்டுச் சொற்களுடன் கலந்த நிலையில், ஒன்றுபட்டுத் திகழ்கின்றன. தமிழ் இலக்கணத்தில் கூறப்படுகின்ற எழுத்துக்கள் சொற்கள் சொற்றொடர்கள் ஆகியவற்றின் இடத்தில், அவைகளுக்கு ஒப்புமையுடைய தெய்விகத் தத்துவச் சொற்களைமாற்றிஅமைத்தால், தொல்காப்பிய விதிகள் அல்லது நூற்பாக்கள், தமிழ் மொழியின் அமைப்பியலை விளக்குவது மட்டுமின்றி, மக்களின் வாழ்க்கையினையும் விவரித்து விளக்குவனவாகத் திகழ வந்தக் காணலாம். இவ்வுண்மை, தொல்காப்பியத்தினை மேல்நோக்காக ஒரு சிறிது காண்போர்க்கும் கூடத் தெற்றென விளங்கும்'' (2).

(1) "As regards the age of Tholkappiam, I have investigated almost all the divergent views expressed by notable scholars and concluded that its composition could not have taken place later than 2,500 B.C. That this assignment of a Tamil work to so high an antiquity may not be deemed extravagant, when this is compared with the age of 4.500 B.C., ascribed to the Rig Veda by such eminent oriental scholars and historians as Prof. Hermann Jacobi, Bal Gangadhar Tilak and Dr. Bloomfield".
—Maraimalai Adigal.

(2) "Even a cursory glance of that ancient grammar Tholkappiam, will convince that the grammatical terminology employed in it are identical with philosophical terminology necessary for dealing with the grammar of the phenomena of life. If in space of the alphabet, words and sentences, treated in the grammar, their corresponding mystic equivalents in philosophy are substituted, the Sutras or the rules of Tholkappiam expound the phenomena of life instead of the phenomena of the Tamil Language''.
—P. V. Manickam Naicker, B.E.
(The Tamil Alphabet, Its Mystic Aspect)

உயிர், மெய்

ஆசிரியர் தொல்காப்பியர், தமிழிலக்கணத்தில் எழுத்துக்களுக்குப் பெயரமைத்திருக்கும் முறையே, தமிழ் மக்களின் நுண்மாண்நுழைபுலத்தினை நுனித்துணர்த்த வல்லதாயுள்ளது. தாமே தனித்தியங்கவல்ல எழுத்துக்களுக்கு 'உயிர்' என்றும், உயிரோடு கூடியல்லது இயங்கலாற்றாத எழுத்துக்களுக்கு 'மெய்' என்றும், உவமை ஆகுபெயராற் காரணம் பற்றிச் சமய தத்துவக் கருத்தின் அடிப்படையில் பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் தலைசிறந்த தத்துவ ஞானத்தினை இப் பெயர்கள் தகவுற விளக்குகின்றன (3).

இதனால் உயிர் என்பதொரு பொருள் இல்லை என்னும் சூனியான்மவாதம்; உடலின் வேறாக உயிர் என்பதொன்று இல்லை, உடலே உயிர் என்னும் தேகான்ம வாதம்; கனவுநிலையில் போக்குவரவு புரிந்து இயங்குகின்ற நுண்ணுடலே உயிர் என்னும் சூக்கும தேகான்மவாதம்; மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளே உயிர் என்னும் இந்திரியான்மவாதம்; மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கு உட்கருவிகளே உயிர் என்னும் அந்தக்கரணான்மவாதம்; விழிப்பு உறக்கநிலைகளிலும் ஒருதன்மைத்தாக இயங்கிக் கொண்டிடிருக்கும் பிராணவாயுவே உயிர் என்னும் பிராணான்மவாதம்; உடலின்கண் உள்ள எல்லாக் கருவிகளும் ஒருங்குசேர்ந்த தொகுதியே உயிர் என்னும் சமூகான்மவாதம்; பிரமம் ஆகிய பரம் பொருளே உயிர் என்னும் பிரமான்மவாதம், ஆகிய பல்வேறு கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டு, உடல்வேறு, உயிர்வேறு, உடலுக்குள்ளே இருந்து உடலை இயக்குவது உயிர், என்பன போன்ற கருத்துக்கள், எழுத்துக்களுக்கு உயிர் என்றும், மெய் என்றும், உயிர்மெய் என்றும் உவமை ஆகுபெயராகப் பெயர்கள் அமைக்கப் பெற்றிருத்தலினாலேயே, தெள்ளிதிற் புலப்படுத்தப்பட்டுச் செவ்விதின் விளங்குகின்றன.

(3) ''Tamil grammarians designate vowels by a beautiful metaphor, as Uyir or the life of a word, consonants as Mey or the body and the junction of a vowel and a consonant as Uyirmey or an animated body''.
—Rev. Dr. Robert Caldwell,
A Comparative Grammar of the Dravidian Languages, p. 132.

(2) இப்பெயர்களின் குறிப்புகளுக்கு முன்னொடுபின் சிறிதும் முரணாமலே, தமிழில் எழுத்திலக்கணம்வகுக்கப்பெற்றுள்ளது. க்ருபைத்யானம் என்னும் வட சொற்களைப்போல, மெய்யெழுத்துக்கள் தமிழில் மொழி முதற்கண் வருவதில்லை.

''உயிர் மெய் யல்லன
மொழி முதலாகா''

என்பது தொல்காப்பியச் சூத்திரம். சொற்களில் மெய்யெழுத்துக்கள் முதலாக வருதல் கூடாது, உயிர் எழுத்துக்களே முதலாக வருதல் வேண்டும் என்னும் வரையறை, அழிந்துபடும் இயல்பிற்றாகிய உடம்பின் இழிதகவையும், அழியா இயல்பிற்றாகிய உயிரின் மேம்பாட்டினையும் உணர்த்தும் வகையில், அறிவிற்குப் பெரிதும் பொருத்தமானதாகச் செய்யப்பட்டிருப்பதொன்றாகும்.

(3) ''உயிர் மெய் எழுத்துக்களுள், உயிர் எழுத்துக்கள் பின்னும் ,மெய் எழுத்துக்கள் முன்னும் ஒலிக்கும்'' என்பது இலக்கணம். உயிரின் அறிவும் இயல்பும் அது சாரும் உடம்பிற்கு ஏற்பவே அமையும். ஓர் ஆளில் அல்லது உயிர்ப் பொருளில், உடம்பு உயிர் என இருபொருள்கள் கலந்திருப்பினும், காண்பார்க்கு உடம்பே முற்பட்டுத்தோன்றும். அதன்பின்னரே அதற்குள் உயிர் இருப்பது அறியப்படும். அதுபோல உயிர்மெய் எழுத்திலும், மெய்யெழுத்தே முன் ஒலிக்கும்; அதன் பின்னரே உயிர் ஒலிக்கும். இவ்வுண்மையினை,

''மெய்யின் வழியது
உயிர்தோன்றும் நிலையே''

என்று இலக்கண நூலார் வகுத்துரைத்தனர். இந்நூற்பா இலக்கண நூற் கருத்தும், தத்துவநூற் பொருளும் ஒருங்கமையச் சிறந்து விளங்கும் திறம், பெரிதும் போற்றுதற்குரியது. எல்லா மொழிகளிலும் மெய்யும் உயிருமாய் வரும் எழுத்துக்கள் இணைந்தே ஒலிக்கும். இதனை மேலைநாட்டார் கூர்ந்து நோக்காத காரணத்தால், உயிர்மெய்க்குத் தனி வடிவம் வகுக்காமல், மெய்யையும் உயிரையும் அடுத்தடுத்து வெவ்வேறாக எழுதுவாராயினர். இஃது ஒரு வகையில் எளிதாயினும், தமிழ் இலக்கண நூலாரின் மெய்ப்பொருள் உணர்ச்சித் திறத்தின் சிறப்பு, ஏனையோர்க்கு வாய்த்திலது என்பதனைப் புலப்படுத்தும்.

(4) உயிர்மெய்யெழுத்து, தன்னுடன் கூடிய உயிரானது புணர்ச்சியின்கண் நீங்கிய போது, தன் புள்ளி வடிவு பெறும் என்னும் இலக்கணக் கருத்து,

''மெய் உயிர் நீங்கில்
தன் உரு ஆகும்''

எனவரும் நூற்பாவால் உணர்த்தப்பெறும். இதன்கண் ''உடம்பை விட்டு உயிர் நீங்கி விடுமாயின், அங்ஙனம் உடலாகிய சிறையினின்று விடுபட்ட உயிரானது, தனக்குரிய முழு நிறைவான இயல்புகளை எய்தி நிற்கும்'' என்னும் தத்துவ ஞான நூற்பொருளும் கொள்ளுதற்கு இடமுள்ளது.

(5) புள்ளியீற்றுச் சொற்களின்முன் உயிர் தனித்து நடவாது; தான் தனித்து நின்ற அவ்வியல்பினைக் கெடுத்து, அப்புள்ளியோடு கூடும் என்பது,

''புள்ளி யீற்றுமுன் உயிர்தனித்து இயலாது
மெய்யொடு சிவணும் அவ்வியல் கெடுத்தே''

என்னும் இந்நூற்பாவின் பொருள். இதற்கே, ''உயிர் தனது வினைப்பயன்களை நுகர உடலின் சேர்க்கையை அடையும்; உடலின் சேர்க்கையின்றி வினைப் பயன்களை உயிர் தானே தனித்து நின்று நுகரப் பெறாது'' என்னும் தத்துவ நூற் பொருளும் கொள்ளலாம். இவ்வுண்மையினை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார், தமது மணிமேகலையில், ''வினையின் வந்தது'' ''வினைக்கு விளைவாயது'' என்றும்; பட்டினத்து அடிகள் ''வினைப்போகமே ஒரு தேகங் கண்டாய், வினைதான் ஒழிந்தால் தினைப் போதளவும் நில்லாது கண்டாய்'' என்றும் பாடித் தெளிவுறுத்தியிருத்தல், சிந்திக்கத்தக்கது.

(6) உயிரீறு நிலைமொழியாய் நிற்க, அதன்முன் உயிர்முதற் சொல்வரின், அவ்விரண்டு உயிர்கட்கும் இடையே உடம்படு மெய் வரப்பெறும். மணி அழகு மணியழகு என்புழியும், சே அடி சேவடி என்புழியும், முறையே யகரவகர உடம்படு மெய்கள் வரப் பெறுதல் காணலாம்.

''எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்''

என்பது இதற்குரிய நூற்பா. ''உயிரும் உயிரும் தம்முள் ஒன்று சேரமாட்டா. ஆதலின் அவற்றிற்குப் பற்றுக்கோடாக ஓர் உடல் இன்றியமையாது வேண்டப்படும். உயிர் சேர்தற்கு உடல் இன்றியமையாதது; ஓர் உடலைப் பற்றி நின்றே உயிரானது இயங்கும்'' என்னும் தத்துவ நூற்பொருளும், இலக்கணச் செய்திகளுடன் இந்நூற்பாவிற் கொள்ளப்படக் கிடக்கின்றது.

நிலைமொழியின் ஈற்றில் நிற்கும் உயிரும், வருமொழியின் முதலில் நிற்கும் உயிரும், தம்முள் தாமே சேரமாட்டாமல், தமக்கிடையில் ஓர் உடம்படு மெய்யினை இன்றியமையாது அவாவி நிற்றல், சீவான்மாவும் பரமான்மாவும் தம்முள் ஒன்று சேர்தற்கு ஞானாசிரியன்ஆகிய குருவின் துணை பெரிதும் வேண்டற்பாலது என்னும் உண்மையினைக் குறிப்பாலுணர்த்துகின்றது எனலாம்.

(7) உயிர்மெய்யாவன, மெய்களோடு உயிர் எய்துதலாற் பிறந்த எழுத்துக்கள் ஆகும். உயிரையுடைய மெய், உயிர் மெய்யாகும். இதனை 'உயிரும் மெய்யும் சேர்ந்த எழுத்து' என்று உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகக் கருதுவது தவறு. ஆயினும் அவ் உயிர் மெய்கள், அவ்வியைபின்

ண்ணே உயிரும் மெய்யுமாகிய இவ்விரண்டும் அல்லாத வேறோர் எழுத்தாய் நிற்கும். இங்ஙனம் பன்னீருயிரும் பதினெட்டு மெய்யுடன் கூடி உயிர்மெய்யாய் நின்றனவாயினும், தம் அளவும் குறியும் எண்ணும் திரிந்து நில்லா. இதனை,

> ''மெய்யொடு இயையினும்
> உயிரியல் திரியா''

என்னும் தொல்காப்பிய நூற்பா சுட்டுகின்றது. இதன்கண், ''உயிரானது உடம்போடு கூடிநிற்பினும், அவ்வுயிரின் இயல்பும் உடம்பின் இயல்பும் ஒன்றாகமாட்டா. உயிரின் இயல்பு, உடம்பினது இயல்பினின்று வேறுபட்டுத் தனித்தே நிற்கும்'' என்று வேறொரு பொருளும் புலப்படுதல் காணலாம்.

(8) நிலைமொழி ஈறு மெய்யாய் நிற்க, வருமொழியின் முதல் உயிராய் இருக்குமாயின், நிலைமொழி ஈற்றின் மெய்யின்மீது, வருமொழி முதலின் உயிரானது ஏறி, இரண்டும் ஒன்று சேர்ந்து உயிர்மெய்யாகி நிற்கும். சிவன் அருள் என்னும் இரு சொற்களும் ஒன்றாகப் புணருங்கால், சிவனருள் எனப் புணர்தல் காணலாம். இதற்குரிய விதி,

> ''உடல்மேல் உயிர் வந்து
> ஒன்றுவது இயல்பே''

என்னும் நூற்பாவாகும். இவ்விலக்கண நூற்பாவின் கண்ணேயே, ''உருவமாய் அறிவிலவாய் அழியும் இயல்பினதாகிய உடலின் மீது, அருவமாய் அறிவுடையதாய் அழியா இயல்புடையதாகிய உயிரானது வினைவயத்தால் புணர்ந்து ஒன்றாய் நிற்கும்'' என்னும் உயரிய தத்துவப் பொருளும் ஒருங்கே அமைந்திருத்தல் உணர்ந்து இன்புறுதற்குரியது.

## (9) அகரம்

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில், மொழி மரபியலில் ''உயிர் எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் ஆகிய எல்லா எழுத்துக்களும் ஒலிக்கப்படுதற்கு ,அகரமாகிய முதல் எழுத்தின் துணையும் கலப்பும் இன்றியமையாததாகும்'' என்னும் உண்மையினை விளக்கும் நிலையில் ''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' எனவரும் நூற்பாவிற்கு, ''இறைவன் இயங்கு திணைக் கண்ணும், நிலைத்திணைக் கண்ணும், பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற் போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னும் குறளால், 'அகர மாகிய முதலையுடையன எழுத்துக்களெல்லாம்; அதுபோல இறைவனாகிய முதலையுடையது உலகம்' என வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே' எனக் கூறியவாற்றானும் பிற நூல்களானும் உணர்க'' என நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் விளக்கவுரை, இங்கு நாம் அறிந்து இன்புறற்பாலது.

## (10) திணைகள்

தமிழ் மொழியின் எழுத்துக்களைத் தத்துவ அடிப்படையில், உயிர்எழுத்து என்றும், மெய்யெழுத்து என்றும் பிரித்துப் பெயர்வழங்கினாற் போலவே, உலகியற் பொருள்களையும், உயிர்களையும்கூடத் தத்துவ அடிப்படையிலேயே உயர்திணை அஃறிணை எனப்பாகுபாடு செய்து, தமிழ்ச் சான்றோர்கள் வழங்கியிருக்கின்றனர்.(4).

> ''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
> அஃறிணை என்மனார் அவர்அல பிறவே
> ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே''

எனவரும் தொல்காப்பிய நூற்பா,மக்கள்வேறு, மக்கட்சுட்டு வேறு எனப் பாகுபாடு செய்து, 'மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் அதுவே மக்கட் சுட்டாகும்' என்று வரையறைப்படுத்தி விளக்கியிருக்கும் நுட்பம் ,பெரிதும் போற்றற்பாலது.

> ''தக்க இன்ன தகாதன இன்னவென்று
> ஒக்க உன்னலர் ஆயின்,உயர்ந்துள
> மக்களும் விலங்கே; மனு வின்நெறி
> புக்கவேல், அவ் விலங்கும் புத்தேளிரே''
> —கம்பர்

எனவரும் சிறந்த நல்ல பாடல், இந்நூற்பாவின் பொருளையே அடிப்படையாகக் கொண்டு அமைவதாயிற்று. உடம்பு ஒன்றே பற்றியன்றிப் பண்பும் உணர்வும் பற்றியே, மக்கள் அல்லது மாக்கள் என்பது துணியப்படும் என்றதனால், தொல்காப்பிய நூலின் சமய தத்துவ அடிப்படை தெற்றென விளங்கும்.

## (11) வினைக்கொள்கை

இவ்வாறே, ஆசிரியர் தொல்காப்பியர், வினைச்சொல் குறித்து வகுத்துள்ள இலக்கணமும் பெரிதும் வியந்து போற்றற்பாலதாக இருக்கின்றது. சொற்கள் ;பெயர்-வினை-இடை-உரி என நான்கு வகைப்படும். ஆயினும் இவற்றுள் பெயரும் வினையுமே மிகவும் முதன்மை வாய்ந்தவை. பெயர்ச்சொல்லின் அடியாக வினைச் சொற்களும், வினைச் சொல்லின் அடியாகப் பெயர்ச் சொற்களும், தம்முள் ஏற்றபெற்றி தோன்றும். வினைச் சொற்களுக்கும் பெயர்ச் சொற்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை,

---

(4) ''The classification of nouns in Tamil is decidedly more philosophical; for the difference between rational beings and beings or things which are destitute of reason is more momentous and essential than any difference that exists between the sexes. The peculiar Dravidian law of gender which has now been described would appear to be a result of progressive intellectual and grammatical cultivation..''

—Rev. Dr. Robert Caldwell.

''We think it very inconvenient, and even hardly fair, that, in learning French and German, we are called upon to burden ourselves with arbitrary and unpractical distinctions of grammatical gender''.

—Otto Jespersen,
(The Philosophy of Grammar).

''வினைஎனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்''

எனத் தொல்காப்பியம் விளக்குகின்றது. இதன்படி, முருகனை-முருகனால்-முருகனுக்கு என்றாற்போலப் பெயர்ச் சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏற்றுவரும். ஆனால் வினைச் சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏற்றுவருவதில்லை. வந்தான்-வருகின்றான்-வருவான் என்றாற்போல வினைச்சொற்கள் காலம்காட்டி வரும். பெயர்ச் சொற்கள், காலம் காட்டும் இயல்பு உடையன அல்ல. எனவே, வினைச் சொற்கள் வேற்றுமையுருபுகளை ஏலாமல், காலம் காட்டிவரும் இயல்புடையன என்பது இந்நூற்பாவின் திரண்டபொருள்.

இனி, இதனைக் கூர்ந்து நோக்கின், வேறு ஒரு சிறந்த பொருளும் இதன்கண் அமைந்திருத்தல் காணலாம். நாம் செய்யும் ஒவ்வொரு செயற்கும் அதற்குரிய பயன் திண்ணமாக உண்டு. நற்செயல் புரிவோர் அதற்குரிய பயனாகிய நன்மையையும், தீச்செயல் புரிவோர் அதற்குரிய பயனாகிய தீமையையும் அடைந்தே தீருவர். ''வினை எனும் சொல் செயலையும், அதன் பயனையும், அப்பயனைத் தரும் தெய்வத்தையும் முறையே குறிக்கும். அவரவர் செயலுக்கு ஏற்பப் பயன்களை எய்துவிக்கும் பால்வரை தெய்வமானது (சொல்-57), வினைப் பயன்களை எய்துவிக்குங்கால், செல்வர், வறியர், கற்றார், கல்லார், உயர்ந்தோர், தாழ்ந்தோர், என்பனபோன்ற வேற்றுமைகளைச் சிறிதும் கருதுவதில்லை. வினைப்பயன் வினைசெய்தோரை அடைந்தே தீரும். ஆயினும் வினைப் பயன்கள் ஒரு போழ்தத்தேயோ உடனடியாகவோ அன்றி, அவ்வவற்றிற்குரிய காலங்களிலேயே முறைப்படி வந்தெய்தும் ....''(5) எனப் பிறிதொரு சிறந்த தத்துவ நூற்பொருளும் இந்நூற்பாவின்கண் அமைந்து விளங்குதல் காணலாம்.

(12) வழிபாடு

உணவும் நீரும் காற்றும் நீராடலும் மருந்தருந்தலும் உடல்வாழ்விற்குப் பலவகை நலங்களை விளைவித்தலைப் போல, நமது உயிர் வாழ்விற்கு ''வழிபாடு'' மிகப்பெரிதும் இன்றியமையாததாகப் பெருநலங்களைப் புரிகின்றது. அதுபற்றியே, இற்றைக்குச் சற்றேறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே,

''வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே''

என்ற நூற்பாவில், ஆசிரியர் தொல்காப்பியர் வழிபாடு பற்றி, மிகவும் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலக மக்களாயினார் ஒவ்வொருவர்க்கும் வழிபாடு மிக மிக இன்றியாமையாததொன்று என்பார் ''வழிபடு'' என்றும்; அது மனிதரையோ பிறபிற பொருள்களையோ பற்றி நிகழாமல், ஒப்புயர்வற்ற தெய்வத்தைக் குறித்தே நிகழ்த்தப்படுதல் வேண்டும் என்பார் ''தெய்வம்'' என்றும்; வழிபடுவோரை வழிபடப்பெறும் தெய்வம் காத்தருள்தல் திண்ணம் என்பார் ''நிற்புறம் காப்ப'' என்றும்; வழிபாட்டின் பயனாக, எல்லா வகையான-எத்தகைய விழுமிய செல்வங்களையும் எய்தப் பெறுதல் இயலும் என்பார் ''பழிதீர் செல்வமொடு'' என்றும்; ''மூவேழ் சுற்றம் முரண்உறு நரகிடை ஆழாமே அருள் அரசே போற்றி'' என மணிமொழியார் பாடியதற்கு ஏற்ப, வழிபடுவோர் மட்டுமேயன்றி, அவர்தம் வழிவழியாக வரும் உற்றார் உறவினரும்கூட, வழிபாட்டின் பயனாகச் சிறப்புற்றுப் பொலிந்து இன்புற்று வாழ்வார்கள் என்பார் ''வழிவழிச் சிறந்து பொலிமின்'' என்றும், நுண்ணிதின் எண்ணியுணரும்படி ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்வாராயினர்.

(13) ஆசிரியர் தொல்காப்பியர், தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பொருள்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றாகப் பகுத்தார். அவற்றுள் நிலத்தையும் காலத்தையும் 'முதற்பொருள்' எனக் குறித்தார். நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்காகப் பகுத்து, அவற்றிற்கு முறையே மாயோன் (திருமால்), சேயோன் (முருகன்), வேந்தன் (இந்திரன், சிவன்), வருணன் என்னும் தெய்வங்களைக் குறித்தார். முதற்பொருளாகிய நிலத்தைக்கூற வந்த இடத்திலேயே, கருப்பொருளாகிய தெய்வ வழிபாட்டையும் சேர்த்து வலியுறுத்தியே, தொல்காப்பியர் கூறியருளியுள்ளார். காலத் தெய்வம், பால்வரை தெய்வம் முதலிய வேறு பிற தெய்வங்களையும் கூட, அவர் குறிப்பிட்டிருத்தல் காணலாம். (தொல் சொல்-58).

(14) அறுவகை வாழ்த்து

இனி பொருளதிகாரப் புறத்திணையியலினுள் 81ஆம் சூத்திரத்தில் 'அமரர்கண் முடியும் அறுவகையானும்' என்றமையால், வானவர் உட்பட ஆறு வகையினரை வாழ்த்துதல் பண்டைய மரபாக இருந்தது. அவர்கள் முறையே வானவர் முனிவர் ஆனினம் மழை அரசன் உலகம் எனப்படுவர். இத்தொல்காப்பிய நூற்பாவை ஒட்டியே,

''வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையக மும்துயர் தீர்கவே''

என்னும் திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல் அமைந்திருக்கக் காண்கின்றோம்.

''கருகுகுழல் மடவார்
கடிகுறிஞ்சி யதுபாடி,
முருகன்னது பெருமைபகர்
முதுகுன்று அடைவோமே.''

(5) "The Philosophic meaning of the Sutra is distinct. The Karma does not transform with transmigration of souls but remains intact and lies dormant waiting for the proper time according as the Karma is Akamiya or Prarathva or Samchitha".
The Tamil Alphabet, Its Mystic Aspect,
—P. V. Manickam Naicker

எனவரும் சம்பந்தர் தேவாரப் பாடற் பகுதியும், ஈண்டு நினைவு கூர்ந்து மகிழத்தக்கது.

(15) கொடிநிலை, கந்தழி, வள்ளி

பண்டைக் காலத் தமிழ்மக்கள் கடவுள் நம்பிக்கையும், கடவுள் வழிபாடும் உடையவர்களாக விளங்கியிருந்தனர். அவர்கள் முழுமுதற் கடவுள் வழிபாடு செய்து போந்ததுடன், அவரொடு தொடர்பு படுத்தி, இயற்கைப் பொருள்களாகிய ஞாயிறு திங்கள் தீ என்பனவற்றையும் ஏற்ற பெற்றி வழிபட்டு வந்தனர். இவ்வுண்மையினை,

''கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே''

எனவரும் புறத்திணை இயல் 88ஆம் நூற்பாவினால் அறியலாம். கொடிநிலை (ஞாயிறு), கந்தழி(தீ), வள்ளி (திங்கள், மழை) என்ற மூன்றும், கடவுள் வாழ்த்தோடு சேர்த்துக் கருதப் பெறும் நிலையிற் பொருந்தி வரும் என இத் தொல்காப்பிய நூற்பாக் குறிப்பிடுகின்றது. இக்கருத்தினைத் தழுவியே சிலப்பதிகாரத்தில் 'ஞாயிறு போற்றுதும், திங்களைப் போற்றுதும்' 'மாமழை போற்றுதும்' என்னும் வாழ்த்துக்கள் அமைந்தன ஆகும்.

இனி, இந் நூற்பாவுக்கே ''கடவுள் வாழ்த்து, முதற்கண் அமையும். பின்னர் அதனையடுத்துக் கொடிநிலை (வான்சிறப்பு), கந்தழி (நீத்தார் பெருமை), வள்ளி (அறன் வலியுறுத்தல்) என்னும் வடு நீங்கு சிறப்பின மூன்றும், கடவுள் வாழ்த்துடன் சேர்த்துக் கருதப் பெறும் நிலையில் வரப்பெறும்'' என வேறொரு வகையிலும் பொருள் கொள்ளலாம். இங்ஙனம் பொருள் கொள்ளுதல், ஆசிரியர் திருவள்ளுவர் அருளிய திருக்குறள்நூலின் அமைப்பிற்கு மிகவும் பொருந்தி நிற்கின்றது.

(16) கோயில்கள்

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழகத்திற் கோயில்கள் இருந்தன. ''இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்'' எனவரும் எழுத்ததிகார நூற்பா, ''கோயில்'' என்னும் சொல்லுக்கு இலக்கணம் வகுத்திருத்தலால், இவ்வுண்மை செவ்விதின் உணரப்படும். அக் கோயில்களில் தெய்வத் திருவுருவங்கள் இருந்து வந்தன; அவற்றிற்குப் பூசைகளும் விழாக்களும் நிகழ்ந்து வந்தன. அவைகள் முறைப்படி தவறாமல் நிகழ்த்தப் பெற்று வருகின்றனவா? என்று, அரசர் அல்லது தலைவர்கள் கண்காணித்து அறப்புறங் காவல் புரிந்து வந்தனர். இவ்வுண்மைகள்,

''மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே''

எனவரும் நூற்பாவில்''படிமை (பிரதிமை-Idol) ஆவது, தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்தமைத்த தேவர்மேல் வந்தது. அவருடைய பொருளாவன பூசையும் விழாவும் முதலியன'' என ஆசிரியர் இளம்பூரணர் விளக்கவுரை வரைந்திருத்தல், கடவுளரின் திருவுருவ வழிபாடு முதலியன, தொல்காப்பியர்க்கு உடன்பாடேயாம் என்பதனை வலியுறுத்தும்.

(17) விநாயகர் வழிபாடு

இந்நாளில் சித்திரையை முதல் மாதமாகக் கொண்டு, ஓர் ஆண்டின் மாதங்கள் கணிக்கப் பெற்று வருகின்றன. இங்ஙனமின்றி மிகப் பழங் காலத்தில் ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு, ஓர் ஆண்டின் மாதங்களைக் கணித்தல் அறிஞர்களின் வழக்கமாக இருந்து வந்தது. ஞாயிற்றுக்குரிய ஓரை சிங்கவோரை என்றும், அதற்குரிய திங்கள் ஆவணி யாதலின், ஆவணி தொடங்கி மாதங்களை எண்ணுதல் ஒருமுறை என்றும், பண்டையோர்கள் கொண்டிருந்தனர். இவ்வுண்மை, ''கால உரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்கவோ வோரை(ஆவணி)முதலாகத், தண்மதிக்கு உரிய கற்கடகவோரை(ஆடி) ஈறாக வந்து முடியுந் துணையும், ஓர் யாண்டு ஆகும். ஆதலின், அதனை இம்முறையானே அறுவகைப்படுத்து இரண்டு திங்கள் ஒரு காலம் ஆக்கினார்'' என ஆசிரியர் நச்சினார்க்கினியர் ''காரும் மாலையும் முல்லை'' எனவரும் தொல்காப்பிய நூற்பாவின் உரையிற் கூறியுள்ளதுகொண்டு தெளியப்படும். இவ்வாறு ஆவணியை முதல் மாதமாதக் கொண்டு கணிக்கும் முறை, சுமார், 7,000 ஆண்டுகட்கு முன்பு நிலவி யிருத்தல் வேண்டும் என்று வானநூல் ஆராய்ச்சி வல்லார் கருதுகின்றனர்.

ஆவணி மாதம், ஆண்டின் முதல் மாதமாகக் கருதிக் கணிக்கப்பெற்று வந்த அப்பழங் காலம் முதலே, விநாயகர் வழிபாடும் தோன்றி நிலவி வரத் தலைப்பட்டிருத்தல் வேண்டும். விநாயக சதுர்த்தி விழா என்பது, இன்றும் ஆவணி மாதத்திலேயே, எல்லா விழாக்களுக்கும் முதலாவதாகக் கொண்டாடப்பெற்று வருதல், இங்குச் சிந்திக்கற்பாலது.

(18) அறுவகைச் சமயம்

அம்மை வழிபாடு, விநாயகர் வழிபாடு, முருகன்வழிபாடு, சிவவழிபாடு, திருமால்வழிபாடு, கதிரவன் வழிபாடு என்னும் அறுவகை வணக்கம், பிற்காலத்திற் பேசப்பெற்ற 'அறுவகைச் சமயம்' என்னும் வழக்கிற்கு அடிப்படையாக அமைவதாயிற்று. இந்த அறுவகைத் தெய்வங்கட்குப் பூசனை புரிவோரையே ''அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்'' எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டிருத்தல்கூடும். ''ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழில்களைச் செய்பவர்கள்'' என்னும் நச்சினார்க்கினியர் உரைக்கு வேறான, புதிய நல்ல பொருள் இது எனலாம்.

## (19) அட்டாங்க யோகம்

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பெற்றதாகிய தொல்காப்பியப் புறத்திணை யியலின்கண் உள்ள வாகைத் திணைப் பிரிவில், ''நாலிரு வழக்கில் தாபதப் பக்கம்'' என ஒரு பகுதி கூறப்பட்டுள்ளது. அதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், ''நாலிரு வழக்கில் தாபதப் பக்கமாவது, முக் காலமும் உணர்ந்த முனிவரர் அருளிய ஆகமத் தின் வழிநின்று, வீடுபெற முயல்வோருக்கு உரி யவாகிய, எண்வகை மார்க்கத்துத் தவம்புரியும் கூறுபாடு. இவ்வெட்டும் தவஞ் செய்வோருக்கு உரியன என்றும், தவஞ் செய்து யோகம் செய் வோருக்கு உரியன என்றும் இருவகைப்படும். அவற்றுள் தவஞ் செய்வார்க்கு உரிய எட்டா வன: ஊண் நசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை என் பன. இவற்றிற்கு உணவிலும் நீரிலும் சென்ற மனத்தைத் தடுத்தல், செந்தீநாப்பணும் நீர் நிலையிலும் நிற்றல், கடலும் காடும் மலையும் முதலியவற்றில் நிற்றல், தாமரையும் ஆம்ப லும் ஆமையுமாகிய ஆசனத்திருத்தல், உண்டற் காலை உரையாடாமை, வாய்வாளாமை எனப் பொருள். இனி யோகஞ் செய்வோர்க்கு உரிய எட்டாவன; இயமம், நியமம், ஆசனம், வளி நிலை (பிராணாயாமம்), தொகைநிலை (பிரத்தி யாகாரம்), பொறைநிலை (தாரணை), நினை தல் (தியானம்), சமாதி என்பன'' என்று, மிக வும் விரிவாக விளக்கியுள்ளார், அவர்! இதனால், தொல்காப்பியர் காலத்திற்கும் எத்துணையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே, தவஞ்செய்வோ ரும், தவஞ்செய்து யோகம் புரிவோரும், தமி ழகத்தில் இருந்தனர் என்பது தெரிகின்றது(6).

## (20) முப்பொருள்கள்

இனி, தலைவன் தலைவியை விட்டுப் பிரி யும் கல்வியிற் பிரிவு பற்றிய காலவரையறை யினை யுணர்த்துவது,

''வேண்டிய கல்வி
யாண்டுமூன்று இறவாது''

என்னும் தொல்காப்பிய நூற்பா. இதன்கண் உள்ள ''யாண்டு'' என்னும் சொல்லைக் காலப் பெயராகக் கொண்டு, கல்வியிற் பிரிவுக் குரிய காலம் மூன்று யாண்டுகளைக் கடவாது என்று பொருள் கூறுவர் இளம்பூரணர். ஆனால் நச்சினார்க்கினியரோ, திருவள்ளுவர் சாந்துணையும் கற்குமாறு பணித்தலின், கல்வி யிற் பிரிவுக்குக் காவலரையறை செய்தல், பொருந்தாது; கல்விக்குக் காலவரையறை யில்லை எனக் கருதி, 'ஆண்டு' எனப் பிரித்துக் 'கல்வியிற் பிரிவாகிய அவ்விடத்தே' எனப் பொருள்கொண்டு, அக் கல்வியெல்லாம் மூன்று பதத்தை அல்லது பொருளைக் கடவாது எனப் பொருள் விளக்குகின்றார். தலைவன் ஓதற்பிரி வின்கண் இறை -உயிர்-தளை (பதி-பசு-பாசம்; சித்து-அசித்து-ஈசுவரன்; சகம்-சீவன்-பரம்; அது-நீ-ஆனாய்; தத்-துவம்-அசி) என்னும் முப் பொருள்களைப் பற்றிய தத்துவ ஆராய்ச்சியில் தலைப்படுவான் எனக் குறிப்பிடுகின்றார்.

''சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள; மறையெலாம் மொழிய நின்றன;
ஆன்ற தொல்பதி, ஆரு யிர்த்தொகை;
வான்திகழ் தளைஎன வகுப்பர் அன்னவே''
—கந்தபுராணம்.

## (21) தவநெறி வாழ்க்கை

இங்ஙனமே, முன்னர் இல்லறம் நிகழ்த்திய தலைவனும் தலைவியும், பின்னர் இறை யருட் பேற்று முயற்சியில், தலைப்படும் திறம் இது என்று, பண்டைத் தமிழ்ச் சான் றோர்கள் தெளிவுறக் கண்டுணர்ந்து வரையறை செய்திருந்தனர்.

''காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி,
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

என்பது தொல்காப்பியக் கற்பியற் சூத்திரம். ''காதல் அன்பால் துய்த்த காமஇன்பம் நிறைந்து கடைக்கொண்ட வாழ்நாள் எல்லை யின் நடுக்காலத்தே, தமக்குச் சார்பாய் அமைந்த தம்புதல்வரோடு கூடியிருந்து, தாம் அதுகாறும் செய்துபோந்த அறத்தை இனித் தாம் செய்ய லாகாமையின், தமக்காக அவ்வறத்தைச் செய் யும் சுற்றத்தாருடன் அமர்ந்து, குடும்பத் தலை மகனும், தலைமகளும் சிறந்ததாகிய தவத்தில் தமது உணர்வினைப் பயிலச் செய்தல், தாம் அதுகாறும் செய்து போந்த காதல் மனை வாழ்க்கையின் பயனாகும்'' என்பது, இந்நூற் பாவின் பொருள். சமண பௌத்தர்களின் செயற்கை நெறித் துறவொழுக்கத்திற்கும், பண்டைத் தமிழ் மக்களின் பண்பட்ட இயற் கைத் தவநெறி வாழ்க்கைக்கும் உள்ள இடை யீடு மிகப் பெரியதாதலை, இவ்வாற்றால் நாம் இனிதுஉணரலாம்.

இதனாலேயே, திருவெண்ணெய்நல்லூ ரில், சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப் பெற்ற சுந்தரர், திருத்துறையூரில், ''தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே'' என்று வேண்டிப் பெற்றனராயினும், பண் மயத்த மொழிப் பரவையாரையும், மான்திக ழும் சங்கிலியாரையும் மணந்துகொண்டு,

(6) "At the very dawn of Tamilian civilisation of which we catch a glimpse through the Tholkappiam, the oldest Tamil work extent, we find the views about God, soul and matter and salvation to have become thoroughly sound and complete.

As our knowledge of these facts deepens, and as our ideas about their relations expand, we find the conclusions reached by our forefathers about their nature and relations daily receiving corroborations not only from the modern biological, geological and other scientific discoveries but also from the philosophical views worked out and held by such eminent thinkers as William James, Bergson, Lodge, Ward and others".

—Maraimalai Adigal.

பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசில்,

''செல்வநல் ஒற்றி யூரன்
செய்யசங் கிலியால் ஆர்த்து,
மல்லலம் பரவை தன்கண்
மாழ்குற அமிழ்த்து மேனும்,
அல்லும்நன் பகலும் நீங்கா
தவன்மகி ழடியில் எய்தி,
நல்லஇன் படைந்தி ருப்பன்,
நம்பி ஆரூரன் தானே''

என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புகழ்ந்து போற்றிப் பாடும் நிலையில், வாழ்ந்திருந்த பான்மை, நுண்ணிதின் எண்ணியுணரற்பாலது.

**(22) கடவுள் இலக்கணம்**

ஆசிரியர் தொல்காப்பியனார் இறைவனுக்குரிய இலக்கணத்தினை மிகச் சிறப்பாகவும் நுட்பமாகவும் விளக்குகின்றார். ''பிறவிகள் தோறும் சிறிது சிறிதாய் அறிவு விளங்கப் பெறும் சிற்றுயிர்கள் போலாது, இயல்பாகவே விளங்கப் பெறும் பேரறிவு உடையவனாகிய இறைவன் ஒருவன், இவ்வுயிர்களின் வேறாய் உள்ளான்; அவன் இயல்பாகவே விளங்கி மிளிரும் அறிவினனாய்த் திகழ்கின்றான். அதற்குக் காரணம், உயிர்கள் போல், வினைக்கு ஏதுவாகிய மலத்தாற் பற்றப்படாமல், பெருந்தூய்மையும் நுட்பமும் மேன்மையும் உடையவனாய் அவன் இருத்தலேயாகும்.'' என்று பற்பல கருத்துக்களும் தெற்றென விளங்க, ஆசிரியர் தொல்காப்பியனார்,

''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்''

என்று அருளிச் செய்திருத்தல், நாம் நம்முடைய கருத்திற் பெரிதும் பதிக்கற்பாலது.

சிற்றுயிர்களும் இறைவனும் ஒன்றே என்றும்; அற்றன்று சிற்றுயிர்கள் பொய், இறைவனே மெய்யென்றும்; அதுவும் அன்று இறைவன் ஒருவனே குடங்கள் தோறும் காணப்படும் திங்களின் சாயல்போல உடம்புகள்தோறும் உயிர்களாகக் காணப்படுகின்றனன் என்றும்; அதுவும் பொருந்தாது நெருப்பினின்று பொறிகள் தெறித்தாற் போல இறைவனிலிருந்து சிற்றுயிர்கள் உண்டாயின என்றும்; அதுவும் பொருத்தமின்று ஒன்றுமில்லா வெறும் பாழே (சூனியமே), உயிரும் இறைவனுமாம் என்றும்; பிற்காலத்துச் சமயத்தார் பற்பலரும், இறைவனின் இயல்பையும் உயிரின் இயல்பையும் உலக வழக்கோடும் நூல்வழக்கோடும் சார்த்தி வரையறுத்து உணரமாட்டாமல், பெரிதும் மயங்கிக் கலந்து கூக்குரலிட்டுக் காதி மோதி வாதாடித் தம்முள்ளே பூசலும் போரும் கலாமும் விளைத்து நிற்பர். ஆனால், இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே உயிரின் தன்மையையும், இறைவனின் தன்மையையும் இத்துணைப் பொருத்தமாக வரையறுத்துத் தெளிவுற விளக்கியருளிய நம் தொல்காப்பியனார்தம் அஃகியன்ற அறிவின் திறத்தை நாம் எங்ஙனம் புகலவல்லோம்!

இனி இந்நூற்பாவில், இறைவன் மக்களுக்கு மெய்யுணர்வு தோற்றுவித்தற்பொருட்டு அவர்கள்மேற் கொண்ட அருளிரக்கத்தால், முதல்நூல் அருளிச் செய்தான் என்று தொல்காப்பியர் இனிது உரைத்தலால், இறைவன் பேரிரக்கம் உடையவன் என்பதும், அவன் முற்காலத்தே தெய்வத் தமிழ்மொழியின்கண் முதல் நூல் அருளிச் செய்தான் என்பதும், அதனைப் பின்பற்றி அவன்றன் அருள்பெற்ற சான்றோர்கள் பற்பலரும் வாழையடி வாழையாக வந்து தோன்றி, அவ்வக் காலத்திற்கு ஏற்பப் பலவகை நூல்களை அருளிச் செய்து வருகின்றனர் என்பதும், பிறவும் விளங்காநிற்கும்.

**அறம் பொருள் இன்பம் வீடு**

இங்ஙனம் பண்டை நாளில் இறைவன் தமிழின்கண் முதல்நூல் அருளிச் செய்து, அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றின் இயல்புகளை அறிவுறுத்தியருளியமை,

''அருந்தவருக்கு ஆலின்கீழ்
அறம்முதலா நான்கினையும்
இருந்தவருக்கு அருளுமது
எனக்கறிய இயம்பேடி;
அருந்தவருக்கு அறம்முதல் நான்கு
அன்றருளிச் செய்திலனேல்
திருந்தஅவர்க்கு உலகியற்கை
தெரியாகாண் சாழலோ''

என மணிவாசகரும்,

''அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு
அறம் பொருள் இன்பம்வீடு
மொழிந்த வாயான் முக்கண்ஆதி
மேயது முது குன்றே''

எனத் திருஞானசம்பந்தரும் போல்வார் அருளிச் செய்துள்ளவாற்றால், தெற்றெனப் புலனாகும்.

''ஆரணம் ஆக மங்கள்
அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளா னாகில்
கதிப்பவர் இல்லை யாகும்;
நாரணன் முதலாய் உள்ள
சுரர்நரர் நாகர்க்கு எல்லாம்
சீர்அணி குரு சந்தானச்
செய்தியும் சென்றி டாவே!''
—சிவஞானசித்தியார்.

**ஊழ் (நியதி)**

(23) இவ்வுலகின்கண் எல்லோரையும் எல்லாவற்றையும் மேலிருந்து இயக்கி வருகின்ற, இறையருள் ஆணையாகிய நியதி தத்துவம் என்னும் ஊழ் என்பதொன்று இருந்து வருகின்றது. (''There is a Divinity that shapes our ends—Sh.'') ''ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்; அன்றி அது வரினும் வந்தெய்தும்; ஒன்றை நினையாத முன் வந்துநிற்பினும் நிற்கும்; எனையாளும் ஈசன் செயல்'' என்பது ஔவைப் பிராட்டியின் அருளுரை. ''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்று இளங்கோவடிகளும், தம் நூலின்கண் ஆங்காங்கே வற்புறுத்திச் செல்வர். கலை வித்தை

அராகம் என்னும் மூன்றும் முறையே விளங்கிப் போகநுகர்ச்சிக்கண் செல்லும் ஆன்மாக்கள் பலவும், உயர்ந்த போகத்தின் விழைவும், இழிந்த போகத்தின் வெறுப்பும் உடையனவாகத் திகழும். அதனாற் பிறரால் ஈட்டப்படும் நல்வினைப் பயனை நுகரவும், தம் தீவினைப் பயன்களை நீக்கவும், அவ் உயிர்கள் எண்ணா நிற்கும்; ஆனால் அங்ஙனமாக நிகழவொட்டாமல், அவரவரால் ஈட்டப்படும் வினையின்பயனை அவரவரே நுகருமாறு, அரசர் ஆணைபோல் நியமித்து நிறுத்தும் இறையருள் இயற்கை ஆணையே, நியதி தத்துவம் ஆகிய ஊழ்எனப் படும். ஒருபாற் கோடாது நடுநின்று செங்கோல் செலுத்தும் அரசின் ஆணையில்வழி, எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து செல்லுதல்போல், நியதி தத்துவம் ஆகிய ஊழ் என்னும் இயற்கைச் சட்டம் இல்லாத வழி, ஒருவர் செய்த வினைப்பயன் மற்றொருவர் நுகர்வதாய் முடியும். ஆதலின் நியதி தத்துவம் என்னும் ஊழாகிய இயற்கைச் சட்டம் ஒன்று உண்டு என்பது, பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் கண்ட முடிவு. இதனைப் ''பால்வரை தெய்வம்'' என்று தொல்காப்பியரும், 'வகுத்தான் வகுத்த வகை' என்று திருவள்ளுவரும் சிறப்பாகக் குறிப்பிட்டிருத்தல்காணலாம். தலைவன் தலைவி ஆகிய இருவரும், பல பிறவிகளில் ஒருவர்க்கொருவர் உரிமையுடையவராய்த் தொடர்ந்தியைந்து மணந்து மகிழ்வர் என்பது, திறவோர் காட்சியில் தெளிந்த செய்தி. அதனைக் குறித்தற்கே தொல்காப்பியர், தலைவன் தலைவியரை ஆங்காங்கே 'கிழவன்' 'கிழத்தி' என்னும் சொற்களால் விதந்து சுட்டிக் கூறுவர்.

> ''அண்டர்பிரான் திருவருளால்
> அயலறியா மனம்விரும்பப்
> பண்டைவிதி கடைக்கூட்டப்
> பரவையாரும் கண்டார்''

எனச் சேக்கிழார் பெருமான் பாடுதல்போல, தலைவனும் தலைவியும், பால்வரை தெய்வமாகிய ஊழியலின் வழியிலேயே தம்முள் ஒருவரையொருவர் சந்தித்துக் கண்டு கலந்து மகிழ்கின்றனர் என்பது, நம் பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர்கள் கண்டுணர்ந்த வாழ்வியற் சமய தத்துவக் கொள்கையாகும்.

> ''ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
> ஒன்றி யுயர்ந்த பாலது ஆணையின்
> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
> மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே''

எனவரும் தொல்காப்பியச் சூத்திரம், இத்தகைய பற்பல தத்துவ நுட்பக் கருத்துக்களைத் தன்னகத்தே பொதிந்து கொண்டு நிற்றல், யாவரும் காணலாம்.

## (24) சமயப் பொதுச் செய்திகள்

சமய தத்துவநூல்கள், உலகத் தோற்றமும் அமைப்பும் இயக்கமும் பிறவும் பற்றியெல்லாம் ஆராயும் தன்மையுடையன (Cosmogony, Cosmology). சமய தத்துவ ஞானிகள், இவ்வாராய்ச்சியிற் பெரிதும் தலைப்பட்டு நுண்ணிய உண்மைகளைக் காண முயல்வர். மண் திணிந்த நிலனும், நிலன் ஏந்திய விசும்பும், விசும்பு தைவரு வளியும், வளித் தலைஇய தீயும், தீமுரணிய நீரும் ஆகிய ஐம்பெரும் பூதத்தியற்கையும், செயலும் பற்றி, நம் முன்னோர்கள் நுண்ணிதின் ஆராய்ந்து கண்டுணர்ந்திருக்கின்றனர். ''சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்வகை தெரிவான் கட்டேயுலகு'' என்பது திருக்குறள். இன்னோரனைய பலப்பல தத்துவ நுண்பொருள் ஆராய்ச்சிகளுக்கு உரிய அடிப்படை வித்துப் போல,

> ''நிலம்நீர் தீவளி விசும்போடு ஐந்தும்
> கலந்த மயக்கம் உலகம் ஆதலின்,
> இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
> திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்''

எனவரும் தொல்காப்பிய மரபியற் சூத்திரம் அமைந்திருத்தல், அறிஞர்கள் கருதியுணர்ந்து பெரிதும் மகிழத் தகுவதாகும். இந்தத் தொல்காப்பிய மரபியல் நூற்பாவினால், பண்டைத் தமிழ்மக்கள் சமய தத்துவ ஆராய்ச்சிகளில் ( Metaphysics ) தலைசிறந்து திகழ்ந்தமை புலனாகின்றது. ''மூன்றன் பகுதி'' ''அறமுதலாகிய மும்முதற் பொருள்'' என வரும் தொல்காப்பிய நூற்பாத்தொடர்களால், 'அறத்தாற் பொருள் ஈட்டிப் பொருளால் இன்பம் துய்த்து வாழ்தல் வேண்டும்' என்னும் உயரிய குறிக்கோள் நெறி, பண்டைத் தமிழ் மக்களாற் கடைப்பிடிக்கப் பெற்றமை தெற்றெனத் தெரிகின்றது. ''மூவகைக் காலமும் நெறியின் அறியும் அறிவன் தேயம்'' என்பதனால், பண்டைய நம் தமிழ் மன்பதையில், முக்காலமும் உணவரல்ல தக்கோர்கள் (திரிகால ஞானிகள்) பலர் இருந்து வந்தமையும் புலப்படுகின்றது.

> ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப''

எனவரும் தொல்காப்பிய நூற்பாவால், அருளிக்கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் இயல்பு வாய்ந்த, நிறைமொழியையுடைய சிறந்த அருளாளர்களாகிய சமயநெறிச் சான்றோர்கள் பலர், தமிழகத்தில் வாழ்ந்து வந்தனர் என்பதும், தமிழ்மொழியின்கண் மந்திரங்கள் பலப்பல உண்டு என்பதும், பிறவும் விளங்குகின்றன.

## (25) காட்டலாகாப் பொருள்

தொல்காப்பியம், மொழிக்கு இலக்கணம் கூறும் நூலேயாயினும், அதன்கண் ஆங்காங்கே கடவுள் இலக்கணமும் அழகுற நுட்பமாக அறிவுறுத்தப் பெற்றுள்ளது. ''ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா, கற்பும் ஏரும் எழிலும் என்றா, சாயலும் நாணமும் மடனும் என்றா, நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு, ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம், நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது காட்டலா

காப் பொருள என்ப'' எனவரும் தொல்காப் முடிவுரை பியப் பொருளியல் நூற்பா,

''அப்படியும் அந்நிறமும்
அவ் வண்ணமும்
அவன் அருளே கண்ணாகக்
காணின் அல்லால்,
இப்படியன் இந்நிறத்தன்
இவ்வண்ணத்தன் இவன்
இறைவன் என்று எழுதிக்
காட்டொ ணாதே''

எனத் திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்த திருமொழியின் பொருளை வலியுறுத்து தல் காணலாம். அன்பு, அறிவு, ஆற்றல், அருள் முதலிய பண்புகள் எங்ஙனம் நெஞ்சுகொளின் அல்லது காட்டலாகாப் பொருள்களாகத் திகழ் கின்றனவோ, அங்ஙனமே இறைவனும் இலங்கு கின்றான் என்பது, ஒப்புயர்வற்றதோர் அரும் பெறற் சமய தத்துவ உண்மையாகப் போற்றப் படுதற் குரியதொன்றன்றோ?

இங்ஙனம் நுணுகி ஆராய்ந்தால், தொல் காப்பியம் என்னும் நம்முடைய பழம்பெருந் தமிழிலக்கண நூலின்கண், சமய தத்துவ நுண் பொருள்கள் பற்பல காணப்படுதலை யாவரும் உணரலாம். எனவே சமய வுண்மைகளும், தத் துவக் கருத்துக்களும், மிகவும் பிற்காலத்தில் வேற்றுவராலேயே, தமிழ் மக்களிடையிற் புகுத் தப்பெற்றன என்று ஒருசிலர் கூறி வருவது உண்மைக்குப் புறம்பானதென்பதும்; உயரிய சமயவுண்மைகளும், நுண்ணிய தத்துவக் கருத்துக்களும், மிகப் பழங்காலத்திலேயே தமிழ் மக்களிடையே நிலவி வந்தன என்பதும்; அவைகள் நம்முடைய தமிழினத்தின் நுண் மாண் நுழைபுலனையும், கலைநாகரிகப் பண்பாட்டு நலங்களையும், மலையிலக்கென விளக்கும் அரும்பெரும் சான்றுகளாம் என்ப தும், பிறவும் ஐயுறவின்றித் தெளியப்படும்..

---

# தொல்காப்பியச் சிறப்பு

தொல்காப் பியம்என்னும் தொன்மைப் பெருநூலின்
ஒல்காப் பெருஞ்சிறப்பை உய்த்துணரின்,—அல்கா
தறிதோ றறியாமை ஆழ்ந்தகன் றோங்கித்
தொடுவானம் போற்செல்லும் சூழ்ந்து (1)

பழமை பெருமைநூற் பண்பனைத்தும் வாய்ந்து,
விழுமியர்கள் எல்லாம் வியப்ப,—முழுமணியாய்ச்
செந்தமிழ்க்கே ஓர்சிறந்த தெய்விகநூ லாய்விளங்கும்,
நந்தம்அருந் தொல்காப் பியம் (2)

மொழிகள் பலப்பலதாம் மூதுலகில் உண்டு!
ஒழிவில் இலக்கணமும் உண்டு!—வழிமுறையே
என்றாலும், தொல்காப் பியம்போல் இலக்கணநூல்,
ஒன்றேனும் இவ்வுலகத் தில்! (3)

வழுத்துபெரு மாண்புடைய மல்றை மொழிகள்,
எழுத்தொடு சொல்லின் இயல்பே—முழுத்தும்
எடுத்துரைக்க மாட்டா திளைப்பப், பொருளும்
தொடுத்துரைக்கும் தொல்காப் பியம்! (4)

எழுத்தொடுநற் சொல்லியல் பெல்லாம் இனிதே
முழுத்தும் விளக்கி மொழிந்து,—விழுப்பமிகத்
தள்ளாப் பொருளியல்பும் சாற்றியதொல் காப்பியம்போல்
எள்ளாச்சீர் நூல், யாண்டும் இல்! (5)

பாணினியார் நூற்செறிவும், பண்பார் பதஞ்சலியார்,
காணினிய திட்பக் கருத்தியலும்,—சேணினராம்
சீர்அரித்தாட் டில், சொற் றெளிவும், அளவையுஞ்சால்
பேரெழிற்றாம் தொல்காப் பியம். (6)

— ந. ரா. முருகவேள்

# திருமுருகாற்றுப் படையும் தமிழிசையும்*

*பேராசிரியர்* திரு. அ. சங்கரநாராயணன், M.A , M.Litt.,

தியாகராசர் கல்லூரி, மதுரை.

[ * பழநி அருள்மிகு பழநியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியில் நிகழ்ந்த திருமுருகாற்றுப்படைக் கருத்தரங்கிற்கு வழங்கப்பெற்ற ஆய்வுக் கட்டுரை ]

திருமுருகாற்றுப்படை ஒரு ஞானப்பனு
ல். அதனைப் பாடிய தெய்வப் புலவர் நக்
ர் என்பார். அவர் இரண்டாயிரம் ஆண்டு
டகு முன்வாழ்ந்த சங்கப் காலப் புலவர்.
வர் இறைவன் திருவருளால் பேரறிவும்,
ரானந்தப் பெருவாழ்வும் பெற்ற சீவன்
த்தர். அவர் ஞானானந்த வாழ்வு பெற்றவர்
ன்பதை அவர் கையாளும் சொற்றொடர்களி
ருந்து கண்டு கொள்ளலாம், 'ஓவறஇமைக்கும்
ம் சேண் விளங்கு அவிரொளி'.

'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்'
'உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்'
'செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை'
'உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்'

றைவனது திருவருளை 'அரும் பெருஞ்சோதி'
ன்னும் சொற்றொடரால் அருளாளர் குறிப்
. அச்சோதி ஆன்மாவைப் பொத்தியிருந்த
ருளை நீக்கும். நக்கீரர் தன் ஆன்மாவில் அவ்
ருளொளியை இடைவிடாது கண்டவர்.
வ்வருளொளி உலகத்துள்ளும் அதற்கப்புற
ம் இகந்து நிற்கும். இத்தகு கடவுட் காட்சி
பக் கண்ட நக்கீரர், 'ஓவற இமைக்கும் சேண்
ளங்கு அவிரொளி' என்று குறிப்பிடுவார். இவ்
வாளியினை,

டர்கெடுத்து என்னையாண்டு கொண்டு என்னுள்
இருட்பிழம்பற எறிந்து எழுந்த
ர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுள் சோதி'

ன்பர். 'உள்ளொளி விளங்கும் தூய நற்சோதி'
ன்பது ஆன்ம வொளியைக் குறிக்கும். 'சோதி
ட் சோதி' என்பது பரம்பொருளைக் குறிக்கும்.
சாதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்
ணே' என்று ஞான நூற்கள் கூறும். இவ்
வாளி ஆன்ம அறிவினால் காணப்படுவதொன்
ன்று. இறைவன் திருவருள் காட்டக் காணப்
டும் ஒளியாகும். இவ்வாறு ஆன்மாவின்கண்
ருளொளி பதியுமிடத்து, உலகியல் பையப்
பயத் தூர்ந்து அருளியல் வாழ்வியல் தலைப்
வர். இவ்வருளொளியினால் ஏற்படும் அனு
பம், நாம் இறைவனைச் சார்ந்தே வாழும்
மையுடையேம் என்னும் உணர்வும், இவ்
வுலகம் இறைவனால் படைக்கப்பட்டது

என்ற நல்லறிவும் ஆகும். இவ்வொளி காணப் பெற்றால் இருளிலிருந்து ஒளிநிலை வாழ்விற்கும், இறப்பிலிருந்து இறப்பில் பெருவாழ்விற்கும், நிலையாமையினின்று நிலைபேறுடைய வாழ்விற்கும் உரிமையுடையோராய்த் திகழ்வர். இவ்வொளியைச் சேர்ந்தவர்கள் ஒளிமயமாவர். திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் பேரொளியைச் சார்ந்த சூரர மகளிர் சேணிகந்து விளங்கும் செயிர்தீர் மேனியராய் ஒளி வடிவம் பெற்றுத் திகழ்கின்றனர். முருகப் பெருமானாகிய அழகனோடு சார்தலின், கைபுனைந்தியற்றாக் கவின்பெரு வனப்பினராய் விளங்குகின்றனர். இச்சூரர மகளிர் முருகப்பெருமானால் அறியாமை நீங்கப் பெற்ற பேறுடையோர். இச்சூரர மகளிரை ஓர் குறியீடாகக் (Symbol) கொள்வோமாயின், இவர்கள் நன்மையினைக் குறிக்க அறிகுறியாக விளங்குவர். செறுநராக விளங்குகின்ற சூரபதுமன் முதலியோரை அழித்த போர்க்களத்தில் பேய்மகள் துணங்கைக் கூத்து ஆடுகின்றாள். இவள் தீமையினைக் காட்டும் குறியீடாவாள். இவ்விரண்டு குறியீடுகளும் உணர்த்தும் நன்மையும் தீமையும், அழகும் அழகின்மையும், வாழ்வும் இறப்பும் , அறிவும் அறியாமையும் போன்ற இரட்டைகளாகிய ஒத்த ஒவ்வா நிலைமைகள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளின் பரப்பிலே அடங்கியிருக்க, அருளாளர்கள் தம் அருட்காட்சியிற் காண்பர். இறைக்காட்சி பெற்றோர் தீமை, நன்மை ஆக்குதற்கு வாயிலாக விளங்குகிறது என்றும் காண்பர். அப்பர் பெருமானும் 'தீமை தானும் நன்மையாய்ச் சிறப்பதே' என்று வியப்புறுகிறார். இறைவன் இவ்விரட்டைகளைக் கடந்தவனேயன்றி இவற்றிற்குக் காரணன் அல்லன். இவ்விரண்டு முரண்களும் இறைவனிடம் காணப்படும் ஓர் அற்புதம் (Mystery). இம் முரண்பாட்டைமைப்பு பரம்பொருள் மனித அறிவினால் காண்டற்கரியவன் என்பதைச் சுட்டும். இத்தகு அற்புத ஆற்றலைப் பெறவேண்டுமாயின் மனிதன் அவன் வாழும் நிலையிலிருந்து மாறியாக வேண்டும். இம்முரண்பாடுகளைக் கடக்கவேண்டும். இம்முரண்பாடுகளைக் கடப்பதே ஆன்மீகத்தின் கொள்கையாகும். மனத்தையும் உடலையும் ஒருமுகப்படுத்தித் திருகலாகிய சிந்தையைத் திருத்திச் சென்றால் இவ்வற்புதக் காட்சி

யைக் காண முடியும். இவ்வற்புதக் காட்சியாகிய கடவுட் காட்சியைக் கண்ட பின்னர், இங்குக் காணப்படும் இரட்டைகள் பொருளற்று விடுகின்றன. அறிவு விளக்கம் இல்லாததனால், அவை இரட்டையாகக் கண்டோம் என்ற அறிவும் அருளாளர்களுக்குத் தோன்றுகிறது. இவ்விரட்டைகளெல்லாம் தோன்றி நின்று அழியும் மாலையன என்பதையே செயிர் தீர்காட்சியர், மயர்வற உணர்வர். இக்கருத்துக்களையெல்லாம் மணிவாசகப் பெருமான்,

-என்புள்ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக்
கொண்டன்றே

என்னும் பாசுரத்தில் அருளியுள்ளார். இவ்விரட்டைகளிற் கலந்தும், இவற்றை இகந்தும் இருக்கின்ற முருகப் பெருமானின் ஞான நிலை, அவன் ''தானாய்'' விளங்கும் நிலையினைக் குறிக்கும்.

''மறுவில் கற்பின் வாணுதல் கணவன்'' என்னும் சொற்றொடர், இறைவன் அன்பர்களுக்கு அருளும்போது தன்னிற் பிரிவிலாத சக்தியுடன் தோன்றி ஞானத்தையும் பேரின்பத்தையும் வழங்குவான் என்னும் குறிப்பினை விளக்கும். இறைவனும் அவனுடைய ஆற்றலும் பிரிக்க முடியாத பொருளாகும். (Indivisible totality) 'நந்தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான்' என்று அருளாளர் கூறுவர். 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' என்று சங்க நூல் முழங்கும். 'சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக் கோலம்' என்பர் மணிவாசகர். 'அருளும் அவனன்றி இல்லை அருளின்று அவன் அன்றேயில்லை' என்று ஞான நூல்கள் கூறும். ஆணும் பெண்ணும் இணைந்த தெய்வ உருவம் இறைத் தன்மையின் முழுமையையும், இரண்டு முரண்பாடான நிலைகள் ஒருமையுறுவதையும் விளக்கும். இந்நிலைதான் பரம்பொருளின் நிலை என்பதையும் காட்டும். பெண்ணுருவம் ஞானம் அளித்தலையும், ஆண் உருவம் பேரின்பம் நல்குதலையும் காட்டும். முருகப்பெருமானே எல்லாக் கடவுளர்க்கும் மேலானவர் என்னும் பரத்துவத்தைக் காட்டுவது திருப்பரங்குன்றப் பகுதியாகும்.

ஒத்தது ஒவ்வா இரு முரண்கள் குறியீடுகள் மூலம் ஒரு முழுமையில் அடங்கி அவை ஒன்றுக்கொன்று உதவுவனவேயன்றி உண்மையில் முரண்களல்ல என்று காட்டுவதே ஆன்மீக உயர்வாழ்க்கையிற் கண்ட மிகப் பெரும் உயர்ந்த அனுபவமாகும்.

திருச்சீரலைவாய்ப் பகுதி உயிர்களெல்லாம் படிமுறையில் மேனிலை எய்துதற்குரிய நன்மைகளை எல்லாம் இடைவிடாது முருகன் ஆற்றுகின்றான் என்பதைக் காட்டும். ஆறு முகங்களுள் ஒரு முகம் இவ்வுலகத்தில் மாசு சிறிதுமில்லாதபடி பல கதிர்களைத் தோற்றுவிக்கும். ஒருமுகம் அன்பர்க்கு வரங் கொடுக்கும். ஒரு முகம் வேள்விகளில் இடையூறு வராதபடி நோக்கம் செலுத்தும். ஒரு முகம் மக்கள் அறிவினுள் அகப்படாது எஞ்சி நின்ற பொருளையெல்லாம் விளக்கும். ஒரு முகம் போர்க்களத்தை விரும்பும். ஒரு முகம் வள்ளியோடு மகிழ்ச்சியை நாடும். இம்முகங்களைப் போலவே அவனது பன்னிரு கைகளும் தத்தமக்குரிய முறையில் உயிர்கள் மேனிலையடையச் செயல் புரியும். ஈண்டுக் கருணையினால் இறைவன் உயிர்களின் அறிவிச்சை செயல்களைத் தொழிற்படுத்தி வேறாய் நிற்கும் காட்சியைக் காண்கின்றோம். அதனோடு எல்லா முதன்மையும் உடையான் என்னும் கருத்தையும் திருச்சீரலைவாய்ப் பகுதி காட்டுகிறது.

திருவாவினன்குடிப் பகுதியில், முனிவர் கந்தர்வர், கந்தர்வ மகளிர், திருமால் உருத்திரன், இந்திரன், திக்குப்பாலகர்கள், முப்பத்து மூன்று தேவர், பதினெண்கணங்கள் முதலியோர் முருகப் பெருமானைத் தங்கள் குறை முடிக்கவேண்டி வழிபடும் காட்சியைக் காண்கின்றோம். நான்முகன் படைப்புத் தொழிலைப் பெயர்த்தும் தொடங்கி உயிர்கள் முழுமையடைதற்குரிய வாழ்க்கையை அமைக்க அருள்புரியுமாறு முருகப்பெருமானை வேண்டுகின்றனர். இப்பகுதி இறைவனது சர்வானுக்கிரகத்தைக் காட்டுகிறது. இறைவனுக்குரிய எண் குணங்களையும் மேற்சொல்லப்பட்ட எல்லா ஞானம், எல்லா முதன்மை, எல்லா அனுக்கிரகம் என்ற மூன்று குணங்களுள் பெரியோர் அடக்கிக்காண்பர்,

'இறைவனாவான் ஞானமெல்லாம் எல்லா
முதன்மையனுக் கிரகமெல்லாம் இயல்புடை
யான்'

என்று ஞான நூல் இயம்பும். இப்பகுதியில் இறைவன் உயிர்க்குயிராகும் உடனாம் தன்மை விளங்குகிறது.

இதுகாறும் கூறியவற்றால் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி என்னும் மூன்று பகுதிகளிலும் முருகனே எல்லா ஞானமுடைய பரம்பொருள் என்றும், அவன் உயிர்களின் அறிவிச்சை செயல்களை விளக்கிக் கொண்டிருக்கின்றஎல்லா முதன்மையுடையவன் என்றும், அடியார்கள் வேண்டுவனவற்றை வேண்டியாங்கு அளிக்கும் சர்வானுக்கிரகமுடைய பரங்கருணைத் தடங்கடல் என்றும் கண்டோம்.

இனி அந்தணர் ஆற்றும் மலர் வழிபாடும், இழிந்த மக்களாகக் கருதப்படும் குறவர்கள் குன்றுதோறாடும் முருகனை வணங்கும் வழிபாடும், வேட்டுவப் பெண்களின் முருக வழிபாடும், இறைவன் திருவருள் உயிர்களைத் தொடர்ந்து தன்வயப்படுத்தும் திறனும் பற்றி நோக்குவோம்.

திருவேரகப் பகுதியில் அந்தணப் பெருமக்கள் ஈர ஆடை உடம்பிலே கிடந்து உலரும்படி உடுத்து, கைகளை உச்சிமேற் குவித்து, இறைவன் பொருள் சேர் புகழைப்பாடி, ஆறெழுத்து மந்திரத்தை வாய்க்குள் மென்மையாக உச்சரித்து, மணம் பொருந்திய மலர்களை ஏந்தி

வழிபடும் காட்சி குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழர்கள் கண்ட திருவுருவ வழிபாடு, யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள் அடியார் உணர்ந்து உய்யும் பொருட்டு அவர்கள் உள்ளக் கமலத்தில் விரைந்து தோன்றும் உருவமாகும். உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியானைத் திருவுருவக் காட்சியிற் கண்டு மக்கள் மலர் கொண்டு பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி வழிபட்டுத் தாம் பெறவேண்டிய பேற்றினைப் பெற்றனர். இம்மலர் வழிபாடு மக்கட் சமுதாயத்தில் கற்றறிந்த உயர்ந்தோர் செய்யும் வழிபாடாகத் திருமுருகாற்றுப்படை குறிக்கின்றது.

குன்றுதோறாடல் என்னும் பகுதியில் கழிபேருவகை கொண்ட குறவர் சமுதாயம் வேலனை வணங்கும் காட்சியை விளக்குகிறது. இக் குறவர் சமுதாயம் கள்ளங்கபடமற்ற தூய சமுதாயம். பிறரை ஏமாற்ற நினைக்காத சமுதாயம். வளர்ந்து வரும் நாகரிகத்தின் முடை நாற்றத்திலிருந்து தப்பிப் பிழைத்துக்கொண்ட சமுதாயம். குறிக்கோள் சமுதாயம் அமைப்பதற்கு முன்மாதிரியாக இருக்கும் சமுதாயமாகும். அங்கே வேலவனாகக் கோயிற்பூசை செய்வோன் வேலைப் பிடித்துக் குன்றில் வாழ்கின்றான். வேடர் பூசியும் உண்டும் பறை கொட்டியும் குரவைக் கூத்துஆடுகின்றனர். பெண்மக்களும் குரைவக் கூத்தாடுவர். வேலன் இப்பெண்களைத் தன் முழவையொத்த கையினாலே தழுவியெடுத்தாடுவான். இவ்வாட்டம் அவனுடைய தெய்வீக ஆற்றலையும், தாரைப்பெற்ற மாட்சியையும் விளக்கும். தெய்வமேறப் பெற்ற வேலனை முருகனெனவே கண்டு வழிபடும் காட்சி, அம்மக்களின் தூய்மையையும் மகிழ்ச்சியையும் எடுத்துக்காட்டும்.

பழமுதிர் சோலைப் பகுதியில் இறைவனைப் பல முறைகளில் வழிபடும் காட்சிகளை நக்கீரர் தருகின்றார். கோழிக்கொடியை நிறுத்தி ஆட்டை அறுத்து ஊர்கள்தொறும் எடுக்கும் திருவிழாக்களில் முருகன் தோன்றுவான். அன்பர் உகந்த இடங்களில் அவன் உறைவான். வெறியாடு களத்திலும், காட்டிலும், சோலையிலும், ஆற்றிடைக் குறையிலும், ஆறுகளிலும் குளங்களிலும், நாற்சந்தி முதலியவற்றிலும், கடம்பமரத்திலும், மரத்தடியிலும், அம்பலத்திலும், கந்துடை நிலையிலும் அவன் வீற்றிருப்பான்.

மலைக்கோயில்களிலும் முருகன் உறைவான். குறப்பெண்கள் கோழிக்கொடியை அமைப்பர். நெய்யொடு வெண்சிறு கடுகை அப்புவர். மந்திரத்தை உச்சரிப்பர். வணங்கி மலர்களைத் தூவுவர். வெவ்வேறு நிறமுடைய இரண்டு உடைகளை உடுத்துவர். தூபம் காட்டுவர். குறிஞ்சிப் பண்களைப் பாடுவர். பன்னிறப் பூக்களைத் தூவுவர். 'முருகனே', எம்மிடம் வருக! என அழைப்பர். பாடுவர். கொம்புகள் ஊதுவர். மணிகளை ஒலிப்பர். பிணிமுகம் என்னும் யானையை வாழ்த்துவர். இவ்வாறு குறப் பெண்கள் முருகனை வழிபட்டுத் தாங்கள் விரும்பியன பெறுவர். முருகன் அக்கொடியில் ஆற்றலாய்த் தோன்றும் நிலையினை முருகன் இல்லை என்று கருதும் முரண்பாடு உடையோரும் கண்டு அஞ்சுவர்.

இங்குக் குறப் பெண்கள் நுகரும் சமய அனுபவத்தை நோக்குவோம். இவர்கள் இறைவனைத் தங்களைப் போன்று உயிரோடுவாழும் தலைவனாய்க் காண்கின்றனர். அவர்கள் காணும் கடவுள் தத்துவ ஞானத்தாற்காணும் கடவுளல்லன். அல்லது உபநிடதத்திற் சொல்லப்படும் ஒழிவற நிறைந்து அசைவற நிற்கும் பிரம்மப்பொருளும் அல்லன். மாறுக, அவன் அச்சந் தரும் ஆற்றலுடைய அன்புக்கடவுளாவான். அவர்கள் நுகரும் சமய அனுபவம் அறிவோடு பட்டதன்று. அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி எல்லையிலாப் பரம்பொருள் தன்னைச் சுருக்கிக் கொண்டு எல்லையுடைய கொடி கல், மரம், முதலியவற்றில் ஆற்றலாகத் தோன்றுகின்றான். இங்குக் காணப்படும் தெய்வீக ஆற்றல் இயற்கையிற் காணப்படும் ஆற்றலைப் போன்றது அன்று. இவ்வாற்றலைக் குறப் பெண்கள் உணரும்பொழுது அவர்களுக்குப் பயமும் பக்தியும் (Mysterium tremendum) உடன் தோன்றும். ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் அவரவர் மனப்பான்மைக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப இறைவன் காட்சியளிக்கின்றான். அவன் உயிர்களை ஆட்கொள்ள மேற்கொள்ளும் வழிகள் மனித அறிவினுற் காண்டற்கரியன.

'வேறுவேறு உருவும் வேறுவேறியற்கையும்
நூறு நூறாயிரம் இயல்பின தாகி
ஏறுடை யீசன் இப் புவனியை உய்யக்
கூறுடை மங்கையும் தானும் வந்தருளி'

என்று மணிவாசகப் பெருமான் அருளுவதிலிருந்து இறைவன் உயிர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தி அவ்வுயிர்களைத் தன்பால் ஈர்த்து ஆட்கொள்ளும் பெற்றியினை நாம் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்து இப்பகுதியில் அவன் பொருள் சேர் புகழை வாழ்த்துமுகத்தான் 26 முறை முருகப் பெருமானை ஏத்திப் புகழ்கின்றார். இங்கு முருகப் பெருமானின் வரலாறும், அவன் பெருமைமிகு செயல்களும், அற்றார்க்கும் அலந்தார்க்கும் அவன் நல்கும் பெருங்கருணைத் திறமும் பேசப்படுகின்றன. பிற்காலத்தில் தோன்றிய அருளாளர்களுக்கு நக்கீரர் பெருமான் ஞானாசிரியராக விளங்கி இறைவனைப் பாடும் முறைமையினைக் காட்டுகின்றார் என்று கொள்ளலாம். இப்பகுதியில் இறைவனை அளந்தறிதல் உயிர்களுக்கு இயலாத செயல் என்னும் உயர்ந்த உண்மையினை எடுத்துச் சொல்லினும், அவன் அன்பர்களுக்கு எளியவனாய்க் காட்சியளிக்கின்றான் என்று அன்பு நெறியினைக் காட்டுகின்றார்.

வீடு பேறு பெற விரும்புவோன் முருகப் பெருமானது திருவடி நினைவோடும், நன்மை பொருந்திய கொள்கையோடும், அவன் திருவடியை நீள நினைத்தல் வேண்டும். அவ்வாறு செய்தால், நன்மை பொருந்திய நெஞ்சகத்தில் தோன்றிய ஆர்வம் அப்பொழுதே கைகூடும். இந்நினைவுகளோடு இறைப் பயணம் கொண்ட

அன்பனை முன்னரே இறையருளைப் பெற்ற குளிர்ந்த குணமுடைய தூய ஆன்மாக்கள் முருகனிடத்தில் அறிமுகம் செய்து வைக்கின்றனர். அப்பொழுது யாண்டும் நிறைந்துள்ள முருகன் அடியார் முன் தோன்றும் பொருட்டுத் தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவினனாய், மண்ணிடையும் விண்ணிடையும் நிவந்து நிறைந்து நிற்கும் காட்சியுடன் தோன்றுகிறான். இவ்வச் சந்தரும் பேருருவக் காட்சியைத் தம் அடியார் காணின் வெருவுவர் என்றெண்ணி, முருகப் பெருமான் பண்டைத்தன் மணங்கமழ் உருவத்து இளநலம் காட்டுகின்றான். 'அன்பனே உன் அச்சத்தை விடுக. உனது வரவை முன்னரே அறிவன்' என்று அன்புடை நன்மொழி பலகாலும் அருளுவன். இவ்வுலகில் உனக்கொப்பவர் ஒருவரும் இல்லையென்று பெறுதற்கரிய சிறந்த பரிசிலாகிய ஞான ஆனந்தப் பெருவளத்தை அவன் கொடுத்தருளுவான். இப்பகுதியில் இறைவனது பேராற்றலின் திறமும், அவன் பெருங்கருணைத் திறமும் நன்கு வெளிப்படுகின்றன.

இறைவனை நாடினர்க்கும், நாடாது நிற்பவர்க்கும் அவன் பொதுமையாக விளங்குகின்றான். அவனது திருவருள் எல்லா ஆன்மாக்களையும் பின் தொடர்ந்து ஈர்த்துத் தன் ஞான வெள்ளத்துள் அழுத்தித் தன் உலப்பிலா ஆனந்தத் தேனை அருளுகின்றான். பழமுதிர்சோலைப் பகுதியின் இறுதியில் அச்சோலையில் இழுமென இழிதரும் அருவி காட்டப்படுகிறது. அவ்வருவியில் வாழும் உயிரினங்களுக்குரிய நுகர்பொருள்கள் மிதந்துவந்த போதும் உயிர் வாழ் விலங்குகளும் பறவைகளும் அவை தாம் இருக்குமிடம் நோக்கி வந்தபோதும் அவற்றைத் துய்க்க விரும்பாமல் வெருவி ஓடுகின்றன. இக்காட்சி ஓர் உள்ளுறையைக் கொண்டுள்ளது. இறைவன் உயிர்களை ஆட்கொள்ளச் செங்கமலப் பொற்பாதம் தந்தருள வருகின்றான். எனினும், உயிர்கள் தம் உள்ளகத்தைச் சிறையிட்டு அவனை ஏற்றுக்கொள்ளாது உயர்வாழ்வினை இழக்கும் நிலையினையே விரும்புகின்றன. உலகியல் வாழ்வே உயிர்களுக்கு இன்பம் நிறைந்ததாகக் காணப்படுகிறது. ஆயினும் இறைவன் திருவருள் அவ்வுயிர்களைத் தொடர்ந்து பிடித்து ஈர்த்து ஆட்கொண்டு ஞானத்தையளித்துப் பேரானந்தப் பெருவாழ்வையளிக்கிறது. பழமுதிர்சோலை இவ்வரிய பெரிய உண்மையினை எடுத்துக்காட்டுகிறது.

அருணகிரியார் 'கீத இசை கூட்டி வேத மொழி சூட்டு கீரர்' என்று நக்கீரரைப் போற்றிப் பரவுகின்றார். 'கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப் பாதத்தைத் தொழ நின்ற பரஞ்சோதி பயிலுமிடம்' என்றும் 'அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே' என்றும் திருமறைகள் கீதத்தின் பெருமையை உயர்த்திக் கூறும். இசையை இறைவனோடு இயைத்துக் கூறுவது நம் பெருமக்கள் வழக்காம். இசையினால் சித்த விருத்தி ஒடுங்கி உணர்வு ஒன்றாய்க் குவியும். இசை இறைவனிடத்தில் ஒன்றுவிக்கும் கருவியாகும். தேவாரம் அருளிய மூவர் பாடல்களுக்கு அமைந்துள்ள பண்போல் திருமுருகாற்றுப் படையைப் பாடுதற்கு இசையாசிரியர்கள் பண் வகுக்கவில்லை. எனினும் அருணகிரிநாதர் 'கீத இசை கூட்டிய நக்கீரர்' என்று குறிப்பிடுதலின் அவர் காலத்தில் சாமகானம் படித்தற்குரிய பண்போல் திருமுருகாற்றுப்படையையும்பாடும் பண் அமைந்திருக்கவேண்டும். பண் என்றும் திறம் என்றும் சங்க இலக்கியங்களிற் காண்கின்றோம். கீதம் என்ற வழக்குப் பக்தி இயக்கக் காலத்தில் தோன்றிய தொன்றாம். அவர்கள் கீதத்தைப் பண் என்ற பொருளில் அமைத்திருக்கவும் கூடும். அல்லது இக்காலத்தில் குறிக்கப் படும் வர்ணம், கீதம் என்பவற்றின் இலக்கணங்களை நோக்கின், கீதம் பொருளொடு புணர்ந்த இசைப்பாட்டாகத் தோன்றும். வர்ணம் என்பது பொருளுக்குச் சிறப்புத் தராமல் இராக நிரவலுக்குப் பெருமிடம் கொடுப்பதாகும். ஆசிரியர் விபுலானந்த அடிகள் இத்தகு பாடல்களைக் காந்தார ராகத்தில் அக் காலத்தில் பாடியிருக்க வேண்டும் என்று குறிப்பர். காந்தாரப்பண் இக்காலத்து மோகன ராகத்துடன் ஒப்ப வைத்துப் பாடவேண்டும் என்பர் ஒரு சாரார். *மற்றொரு சாரார் முருகாற்றுப் படை அகவற்பாட்டு ஆகையினால் சங்கராபரணத்திற் பிறந்த திறமாகிய ஆரபியில் பாட வேண்டும் என்பர். இன்னும் ஒரு சாரார் ஒரே ராகத்திற் பாடினால் சோர்வு உண்டாகும் என்றுஇராகமாலிகையில் பாடவேண்டும் என்பர். இவ்வாறு பல கருத்துக்கள் தோன்றுதற்கு நாம் பழைய இசைநெறியை மறந்துவிட்டமையே காரணமாகும். முருகாற்றுப்படையில் மக்கள் ஆர்வம் செலுத்த எத்தகைய முறையினை மேற்கொண்டால் நன்மை தருமோ அத்தகு முறையினைக் கையாளலாம். இங்கு முருகப் பெருமான் உயிர்களிடத்தில் அருள் காட்டும் திறமும், உயிர்கள் அவனிடத்தில் ஆரா அன்பு காட்டும் திறமும், அடித்தளமாக விளங்குகின்றது. அதனை உணர்த்து முகத்தான் ஏற்ற பெற்றி பாடி, மக்கள் நன்னெறியை அடைய மேற்கொள்ளவேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால், திருமுருகாற்றுப்படையில் உள்ள முதல் மூன்று வீட்டுப் பகுதிகளில் முருகன் எல்லா ஞானமும் எல்லா முதன்மையும் எல்லா அனுக்கிரகமும் உடைய முழுமுதற் பரம்பொருள் என்ற கருத்தும், பின்னர் உள்ள மூன்று படைவீட்டுப் பகுதிகளில் சமுதாயத்தில் காணப்படும் கற்றறிந்த பெருமக்கள் செய்யும் ஞான வழிபாடும், குறவர்கள் தம் குன்றில் உறையும் தெய்வமேறப் பெற்ற வேலனையே முருகனாக வணங்கும் வழிபாடும், மலைவாழ் குறவர்கள் முருகனைத் தங்களிடத்தில் ஆற்றுப்படுத்திக் கொள்ளும் வரலாறும், இறைவனை அவன் பொருள்சேர் புகழினால் பரவும் முறைமையும், முருகன்அடியார் முன்பு தோன்றி ஞானானந்த வாழ்வு கொடுக்கும் பெற்றியும், முருகனை நாடினார்க்கும் நாடாதவர்க்கும் அவன் பொதுவாய் நின்று அவர்களைத் தன்பால் ஈர்த்து ஆட்கொள்ளும் இயல்பும், அம்முருகாற்றுப்படையைஇத்தகைய பண்களாற் பாடவேண்டும் என்ற குறிப்பும் அமைந்துள்ளமை இனிது புலனாகும்.

***

*எனவே, திருமுருகாற்றுப்படை முழுவதும் மோகன ராகத்தில் பாடவேண்டும் என்பர் ஒரு சாரார்.

# அகிலாண்டநாயகி மாலை

திரு. புலவர் மு. வைத்தியநாதன், திருச்சி.

## தமிழ்க்கடல்:

தமிழ்நாடு செய்த தவப்பயனாகக் கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த அருங்குணச்சீலர், பொறுமைமலை, செம்பொருட் களஞ்சியம், தமிழ்க்கடல் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், சிதம்பரம் பிள்ளை என்னும் நல்லார் ஒருவர் வேண்டிய தன்பொருட்டுத் திருஆனைக்கா உறை அகில நாயகியின் மீது இயற்றிய அருள்நூல் அகிலாண்டநாயகிமாலை: சைவத்தின் பயனாகிய பிள்ளையவர்கள், மிகவும் எளிதில் அரிய செய்திகளை எடுத்துக்கூறும் ஆற்றலுடையார் என்பதை அந்நூலைப் பயில்வார் உணர்வர்.

## பாராட்டுரை:

''சுவையற்ற பாடல்களைச் செய்யும் உலைக் கூடமாகப் பிள்ளையவர்களின் மனம் இராமல், வளம் பெற்ற செய்யுட்களின் விளை நிலமாகவே இருந்தது'' என்று தன் ஆசிரியப் பெருந்தகையின் ஆற்றலைப் போற்றுவார் 'தமிழ்த்தாத்தா' உ.வே. சர்மிநாத ஐயர் அவர்கள் . நினைத்தவுடன் எந்தப் பொருள்குறித்தும் பாடும் அருந்திறனுடைய பிள்ளையவர்கள்'பத்துக்கம்பர்'என்று பாராட்டப்பெற்றவர். ''செய்யுள் இயற்றுவது என்பது, இவர்க்குத் தண்ணீர் பட்டபாடு'' என்கிறார் உ.வே.சா. அகிலாண்ட நாயகிமாலை இந்த உண்மையுரைகளை எல்லாம் மேலும் விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

## இயற்கைப் புனைவு:

கொன்றை ஆற்றங்கரை அருகில் வளரும் தாவரம். இறைவனுக்குகந்த மலர் தருவது. இப்படி ஆற்றருகில் வளரும் கொன்றையைக் காட்டி ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறார் பிள்ளையவர்கள். இறைவனைப் 'பித்தன்'' என்று யாரும் தவறாக எண்ணிவிடாதீர்கள். எதற்கும் பற்றாத கொன்றையைத் தன் சடையில் ஏன் வைத்துள்ளான் தெரியுமா? கங்கையின் தனிமையைத் தவிர்ப்பதற்கேயாகும் என்று பாடியுள்ளார். கங்கை என்னும் ஆற்றையும் அதனருகில் கொன்றையிருப்பதையும் பொருள் நயம் தோன்றச் சுவைத்துச் சொல்லியுள்ளார்.

## மறை பொருள் விடை:

அகிலாண்ட நாயகியைப் பார்த்து, உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் ஈன்று, அவைகளை இருநாழி நெல் கொண்டு ஊட்டி வளர்த்து, அவைகளின் துன்பங்களை எல்லாம் அகற்றிக் காக்கும் அம்மையே! நீ, மலைமகளாய்த் தோன்றிப் புறவு, கிளி, பூவை, மயில் போன்ற பறவைகளைப் போற்றி வளர்ப்பது ஏன்?' என்று கேட்கின்றார். விடையை மறைபொருளாக வைக்கின்றார். தன் நடை போன்று நடப்பன புறவாதலாலும், தன் மழலைச் சொற்கள்போன்று பேசுவன கிளியும் பூவையும் ஆதலாலும், தன்சாயலை மேற்கொண்டது மயில் ஆதலாலும், அன்னை இவைகளை எல்லாம் பேணிவளர்த்தாள் என்பது மறைபொருள் விடையாகும்.

## உருவக அழகு

திருமணக்காலத்தில் அம்மிமிதித்தல் என்ற ஒரு செயல் நடைபெறுவது உண்டு. அதை நினைவுகூர்ந்து, அம்மையே! உன் திருமணக் காலத்தில் உன்பாதம் கல்லானியன்ற அம்மியின்மீது பொருந்திப் பழகியது. அப்படிப் பட்ட உன்திருவடி, என் மனக்கல்லின்மீது இயைதற்கு என்ன தடையுள்ளது? என்று கேட்கின்றார். தன் உருகாத மனத்தைக் கல்லாக உருவகித்து, அதனைக் கரைவிக்கவேண்டுகின்றார். ''கருங்கல் மிசையுறு நின்தாள் உற்ற என்கரமலர் மேற்கொண்டு இழிவற அடியேன் மனக்கல்லிடத்தும் இயைந்து உறும் என்று உன்னைத் துதித்தேன்'' என்பது அவர் வேண்டுதல்.

## உவமையழகு:

புல் அற்பமானதாக இருக்கலாம். ஆனல் அது வலிய குற்றியைச் சார்ந்து வளருமானால், உழவரின் உழுகருவி அதை எதுவும் செய்ய வியலாது. அதுபோல, வரம்பில் ஆற்றல்உடையவனாகிய இறைவனைப் புகல் அடைந்தோரை அந்தகனால் எதுவும் செய்ய இயலாது என்று பாடுகின்றார்.

''குற்றியை யடைந்த பசும்புல்லை உழுநர்
கொடிய வன்நாஞ்சில் என்செய்யும்?
பிறையெயிற்று அந்தகன் கரத்துப்
பற்றிய தண்டப் படைசெயல் என்னே?
அப்பெற்றியின் நின்னை அடைந்த நாயேனை''

என்று கேட்கின்றார். ஆம்!'கண்டாயடா! அந்தகா! வந்துபார்! சற்று என் கைக்கு எட்டவே!' என்பது கந்தர் அலங்காரத்தொடர்.

## சொல்லாட்சி:

அம்மையே! தமிழ் ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்க

வாசகர் போன்ற உண்மையான அன்புடைய அடியார்களின் அருட்பாடல்களுக்கு முன்பாக வினைவயப்பட்ட யான் பாடும் பாடல்கள் இனிய குயிலின் மெல்லிய குரலுக்கு எதிராகக் காகம் கரைவது போலாகும் என்று, தன் இழி வினை எடுத்துரைக்கின்றார். ''தேமாங்குயில் எதிர்ஓர் அரிட்டம் கதறுதல் பொருவும்'' என்பது அவர்பாடல்.

## சாத்திர ஆட்சி:

சிவம் சக்தியாகிய இரண்டும் பிரித்தறிய இயலாத ஒன்றாகும் என்னும் சித்தாந்தக் கருத்தை விளக்கும் வகையில், அம்மையையும் அப்பனையும் விளித்துப் பாடுகின்றார். ''சிவம் சக்தி தன்னை யீன்றும், சக்திதான் சிவத்தை ஈன்றும், உவந்து இருவரும் புணர்ந்திங்கு, உலகு உயிர் எல்லாம் ஈன்றும்'' (சித்தி-166) என்னும் சித்தாந்தக் கருத்தை அப்படியே அமைத்து,

''நீயெனப் பெருமான் விரும்பியோர் தினத்து
நிகழ்தரப் பொலிவதும் ,புவிக்குத்
தாயெனப் படும்நீ அவன்எனப் பொலியும்
தன்மையும் வேறுஅல, என்றும்
சேயெனப்படு பல்லுயிர்க் கெலாம் உண்மை
தெரிப்பது போலும்''

என்று சாத்திர ஆட்சியைப் பொன்னேபோல் போற்றுகின்றார்.

## முழுப் புகழுக்கு வழி:

கண்டு நேர்மொழி அம்மையே! இறைவன் மலையரசன் மகளாகிய உன்னைப்பார்த்து, உன் துணை நகில்களிலிருந்து பொழிகின்ற பாலடிசிலைப் பொன் வள்ளத்து வாங்கி ஆளு டையபிள்ளைக்கு நீ பண்டுஞானம் (பரஞானம் அபரஞானம்) பெற ஊட்டுகஎன ஏவ, அளித் தனை. அதனால், பாதிப்புகழ் தான் உனக்கு உண்டு. அடியேற்கு நீயாகவே அருள் செய் வாயாயின் பாதிப்புகழ் இன்றி முழுப்புகழே நினக்காகும் என்று, வேண்டுவது பொருளழகு உடையதாகும்.

''பண்டுநீ பெருமான் அருள்வழிப்
புகலிப் பாலனுக்கு அளித்தனை
மண்டு ஞானம்மற்று அதனால்
முழுப்புகழ் நினக்கே ஆயதோ?
தொண்டு கொண்டு அடியேற்கு அளித்தனை
தாயநிற் கேமுழுப் புகழாம்
கண்டுநேர் மொழியார்பயில் திரு
ஆனைக்கா அகிலாண்ட நாயகியே''

## அருளது ,சக்தி:

அம்மை அருள்வடிவானவள், 'அருளது சக்தியாகும்' என்பது சைவநெறி. இறைவன் அருள்வடிவான சக்தியைக் கொண்டுதான், தன் அன்பர்களுக்கு அருள்புரிகின்றான். சிவன் எங்கு அருள்வழங்கச் சென்றாலும் தேவியுடன் சென்று மன்னுபேர் அருள்புரிந்தான் என்று தான் அருள்நூல் ஆசிரியர்கள் கூறுவர். தேவி யாகிய நீ உன் கணவனுடன் சென்று அருள்

புரிந்ததாகக் கூறமாட்டார்கள். இது என்னே
வியப்பு! ''சிவன் தேவியோடு இனிதுவந்து அ
யார்க்கு அருள்புரிந்தான் என்பதன்றி, ஆ
நேர் கொழுநனோடு வந்து ஆண்டாள் அம்மை
என்பாரிலை, அன்னே! மேவிய கீர்த்தி நினக்கு
உறாவிதம் ஏன்? விளம்பிட வேண்டு
நாயேற்கு'' என்று பாடுகின்றார்.

## இரும்புகழ் நினக்கு:

அம்மையே! சிவபிரான் நுதல்விழி நாட்
டம் உடையவன். உனக்கும் நெற்றிக்கண்
உண்டு. அப்பன் நெற்றிக்கண்ணால் மன்மதனை
எரித்தான். நீயாரையும் எரிக்கவில்லை. இப்
பொழுது நீ என் வினையை எரிக்க வேண்டும்
அவ்வாறு செய்தால், உருவம் உடைய மன்
மதனை எரித்த உன் கணவன் செயலைவிட
உருவம் இல்லாத என்வினையை எரித்த உன்
செயல் மிகுந்த பெருமைதரும் என்று தன்
வேண்டுதலைத் தெரிவிக்கின்றார். ''சம்புலிங்க
நாயகர்போல் உடையையால் நுதல்விழி. அள
மிகும் ஆனையார் மாரனை எரித்தார். யாரை
எரித்தனை அம்மா? விளிமிகு நாயேன் வினை
யினை எரித்தீரல், இரும்புகழ்வரினும், நினக்
காம்'' என்று அம்மையின் சிறப்பினைக் கூறு
கின்றார்.

## கண்வழிபாடு:

ஒருமுறை திருமால் மலர்வழிபாடு செய்
தார். ஆயிரத்திற்கு ஒருமலர் குறைந்தது. அப்
பொழுது, சிறிதும் தாமதியாமல் தன் கண்
மலர் கொண்டு வழிபாடு செய்தார். அவ்
வாறு செய்ய அம்மையே! என்னால் இய
லாது. நீ வந்து அருள்செய்ய வேண்டும் என்று
கேட்கின்றார்.''முழுமலர் அருச்சனை ஆற்றின்
மதுமலர் ஒன்று குறையினும், அதற்கு மாறு
கண் இடந்திடல் வேண்டும். அது செய மா
யோன் அல்லன் யான். நின் பொன்னடி அருச்
சனை புரிந்தேன் அருள்வாய்'' என்று முறை
யிடுகின்றார்.

## மலைமேலிட்ட விளக்கு:

சிவன் எதற்கும் பற்றாத கொன்றையைத்
தன் தலையில் ஏற்றான். நீ என்னை ஏற்க
வேண்டும். என்மீது கருண காட்டுதல் வேண்
டும். அவ்வாறு செய்தால், உன்புகழ், 'மலை
மேலிட்ட விளக்குப்போல் தோன்றும். அருள்
வாய் அம்மா! என்று வேண்டுகின்றார். ''பூங்
கொன்றையவன் என நீயும் விருப்பொடுசெலுத்
தியிடல் வேண்டும். புரைசெய் அன்பாலே,மற்
றது செலுத்தில் பொருப்பின்மேல் இடுசுடர்
போலாம்'' என்பது அவர் திருப்பாடல்.

## கதிர்மதி புனைவு:

இரவி மேல்கடலில் மறைவான். சந்திரன்
கீழ்க் கடலில் மறைவான் என்று உலகோர்
கூறுவர். ஆனால், உன் மலர்போன்ற கைகளில்
அவை ஒடுங்கும் என்றும், உன் கணவனாகிய
பரமனின் முகபங்கயத்தில் தோன்றும் என்றுப்
கூறமாட்டார்கள். இங்கே சூரிய சந்திரர் தேவ்

யின் கைகளில் ஒடுங்குவர் என்று கூறுவது சிந்தனைக்குரியது. ஒருகால், இறைவி தன் இரு கரங்களால், இறைவனுடைய கதிர்மதியமாகிய இருகண்களையும் பொத்தியதைக் குறித்தல் கூடும். 'நின் கொழுநன், நின் ஒருகைப் பங்கயத்துள் ஒடுங்கும்' என்று கூறி அம்மையின் சிறப்பினை வியந்து போற்றுகின்றார்.

### முரண்நயம்:

இறைவன் உலகைக் 'காத்தும்படைத்தும் கரந்தும் விளையாடி' மகிழ்கின்றான் என்பார் மாணிக்கவாசகர். ஆனால், இங்கு முரண் நயம் தோன்ற வரும்பகுதி சிறப்பாக உள்ளது. இறைவி புவனங்களை அமைத்து ஆடுகிறாளாம்! இறைவன் அழித்து ஆடுகிறானாம்! "அம்மையே! அண்டகோடி என்று உரைத்திடும் சிற்றில் அமைத்தாடிடுவாய் நீ. துண்டவான் மதியம் சூடிய சடிலச் சுந்தரன் அழித்தாடும்; இஃது என்னே!'' என்று வியக்கின்றார்.

### வாழ்விற்கு வழி:

'அகப்புறப்பற்றுக்களாகிய யான், எனது என்பது அறுப்பவர் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகுவர்' என்று கூறுவர் வாழ்வு நூல் அருளிய தெய்வப்புலவர். ஆனால், அந்த இரு வகைப் பற்றினை இழந்தவர், மற்று உன்னை இழப்புறார். இது உண்மை என்கின்றார். மறை நூல் கூறிய இந்த உண்மையை மறந்து நான் துன்புறுகின்றேன். ''மீன் என வழங்கும் கண்ணினாய்! கொடியேன் வினைக்கும் ஓர் இறுதியுண்டாங்கொல்! கானென அரம்பை சூழ் திரு ஆனைக்கா அகிலாண்டநாயகியே?'' என்று குறள்வழி வாழ்விற்கு வழிகூறுகின்றார்.

### அருட்செய்தி:

அகிலாண்டநாயகி மாலை என்னும் இந் நூல் ஆயுந்தொறும் அருட்செய்திகளை வற்றுமல் வழங்குகின்றது என்பதை உணரலாம்.

## திருமுருகாற்றுப்படைக் கருத்தரங்கம்

பழநி அருள்மிகு பழநியாண்டவர் இலக்கியப் பண்பாட்டுக் கல்லூரியில், திருமுருகாற்றுப்படைக் கருத்தரங்கம், 31.3.1981 அன்று சிறப்புற நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் தே. சு. இரா. இராமதாசன், M.A., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள், M.A., M.O.L. அவர்கள் தலைமை தாங்கினார். துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி திரு கி. சிதம்பரம், B.A. அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். மதுரைத் தியாகராசர் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் திரு அ. சங்கரநாராயணன், M.A. M.Litt., ''திருமுருகாற்றுப்படையும் தமிழிசையும்'' என்பது பற்றியும்; பூண்டி புட்பம் கல்லூரி முதுகலைப் பேராசிரியர் டாக்டர் திரு அ. மா. பரிமணம், M.A., M.Litt., Ph.D., ''திருமுருகாற்றுப்படையும் தமிழர் சமயமும்'' என்பது பற்றியும்; மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் திரு. தமிழண்ணல், M.A., Ph.D. ''திருமுருகாற்றுப் படையும் அழகியலும்'' என்பது பற்றியும்; ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர். திருக்குறளார் திரு வீ. முனுசாமி, B.A.,B.L., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் திரு அ. பரமசிவம், M.A., அவர்கள் நன்றியுரை நவின்றார். திரு எம். குமாரசாமிதேசிகர் தேவார இசையும், திரு சந்நியாசிச் சுவாமிகள் திருப்புகழ் இசையும் பாடி மகிழ்வித்தனர். முற்பகல் பிற்பகல் இரண்டு வேளைகளிலும், கருத்தரங்கம் சிறப்புற நிகழ்ந்து நிறைவு எய்தியது.

# "நல்லாரைக் காலன் நணுககில் லானே"

திரு. டாக்டர் ஆர். கோபாலகிருட்டிணன், M.A., Ph.D.,

பழநியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, பழநி.

உலகில் வாழும் மனிதன் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டான் என்று கூறமுடியாது. எவ்வளவு நாள் இப்புவியில் வாழப்போகிறோம் என்பதும், என்று இறக்கப் போகிறோம் என்பதும் புரியாத புதிராகவே உள்ளது. திருஞான சம்பந்தர் இதுபற்றியே தினமும் சிந்திக்கச் சொல்கிறார். அவ்வாறு சிந்தித்தால்தான் இறைவனை வழிபட்டு அவன் புகழ்பாடி வல்வினையின் வலிமை நீங்கப்பெற்று வாழ்வில் உய்யலாம்.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெரு
மாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

'செல்வம் நிறைந்த உலகம் முழுவதையும் இறைவனாம் குயவன் மண் கொண்டு படைத்தான். சாதாரண குயவன் செய்த பாண்டங்கள் உடைந்தால் ஓட்டுக்குப் பயன்படும் என்று எடுத்து வைப்பார்கள்; நம் உடலாகிய பாண்டத்தை உயிர் விட்ட பின்னர் ஒருநொடியிலும் வைக்கமாட்டார்கள்' என்பது திருமந்திரம்.

சாதாரண மக்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். ஆனால் மரண எண்ணம் தோன்றி விட்டால் அதைவிடப் பயம் ஏதுமில்லை. எனினும் காலகாலனாகிய கறைக்கண்டனது அருளில் திளைப்பவர்கள் மரணத்தை வென்று மரணமில்லாப் பெருவாழ்வில் வாழ வழிகாட்டுகின்றனர். உள்ள உறுதியுடன் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' எனும் உணர்வோடு 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனையஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம்' என்று இறைவனுக்கு ஆட்பட்ட பின்பு மரணத்திற்கு அச்சப் படத் தேவையில்லை என்பதை அப்பர் பெருமானின் வாழ்வும் வாக்கும் தெளிவுபடுத்துகின்றன. அற்புதத் திருவந்தாதியில் காரைக்காலம்மையார்,

காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேரறுத்தோம்-கோல
அரணார் அவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

என்று திருவடியைச் சரணடைந்தால் எமபயம் தேவையில்லை என்று விளக்குகின்றார்.

பட்டினத்தடிகளும் மனத்திற்கு நன்மருந்தாகக் கூறுகின்றார். தில்லையம்பலத்தில் நடனமாடும் கூத்தப்பெருமானின் திருவடிக் கமலத்தை மறவாதிருந்தால் இறவாமலிருக்க மருந்து அதுவேயாகும். இவ்வாறாயின் பிறவாதிருக்க வரம் பெற்றுவிடலாம்'. இறப்பை நீக்கிப் பிறப்பைத் தடுக்க வேண்டுமாயின் காலனது செயலைச் செயலற்றதாக ஆக்க வேண்டும். 'வினையோம் இறந்தால் ஒருபிடி சாம்பருங் காணாது மாய உடம்பிதுவே' என்று உலகிற்குக் கூறும் அருணகிரிப் பெருமான் 'கொடுங்கூற்று என்செயும்' என உறுதிபூண்டு 'மரணப்ர மாதம் நமக்கில்லை' என்ற தெளிவுடன்.

தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கிஉன்னைத்
திண்டாட வெட்டி விழவிடுவேன் செந்தில் வேல
னுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத ஞானச சுடர்வடி
வாள்
கண்டா யடாஅந்த கா! வந்து பார்சற்றென் கைக்
கெட்டவே

என்று எமனையே பயமுறுத்துகின்றார். மேலும் மயில் ஏறிய மாணிக்கத்தைக் கீழ்க்கண்டவாறு அழைக்கின்றார்.

படிக்கும் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்
தினால்
பிடிக்கும் பொழுது வந் தஞ்சல் என்பாய்........

சார்மா மிசைக்கா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் துஎதிரப் படுவாய்

சாகா துஎனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே

உலகப்பற்றை விட்டொழித்துப் பற்றற்றான் பற்றினைப் பற்றியிருப்போருக்குக் காலன் பாசக்கயிற்றால் கட்டியிழுக்கும் போது உறுதுணையாக வந்து காத்தருள்வான், காலனைக் காலால் உதைத்த கடவுள் என்பது மார்க்கண்டேயரது கதை காட்டும் உண்மை. அதையே உதாரணம் காட்டிக் காலன் வரும்போது காத்தருளவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றனர், உண்மை ஞானம் உணர்ந்தோர். திருப்புன்கூர்த் திருப்பதிகத்தில் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடுகின்றார்:

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆயிரு ரதனை
வவ்வினாய்க் குன்தன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்னடி யான்என விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.

'சிவயோகிகளே காலத்தை வென்றிருப்பார்; மரிப்பார் வெறுங் கர்மிகளே' என்ற உண்மை வாக்குப்படி கர்மாக்களில் உழல்பவர்களுக்குத்தான் மரண பயம் உண்டு. பக்தியால் ஏத்திநின்று பணிபவர் நெஞ்சுள்ளே இறைவன் இருப்பதால் அவரிடம் செல்ல எமதூதர்கள் அஞ்சுவர் என்பர். 'காலனும் காலம் பார்க்கும்' என்பது முதுமொழி.

அட்டவீரட்டானத்தைப் போற்றி வழிபடுவோரிடம் நணுகச் சென்றால் நமன்தமருஞ் சிவன் தமரென்று அகல்வர் நன்கே, என்கின்றார் அப்பர்பெருமான். திருஞானசம்பந்தப் பெருமானும்,

'இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயமவந் தோவல லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே'

என்று எடுத்தியம்புகின்றார். திருமூலநாயனார் அரசாட்சி முறையில் காலனையும் கல்லா அரசனையும் ஒப்பிடுகின்றார். 'கல்வியறிவில்லாத அரசனும் எமனும் வேறல்லர். இன்னும் கூறப்போனால், கல்லாத அரசனைவிட எமன் மிக நல்லவன், கல்லாத அரசன் அறநெறியை ஆராயான்; காரணமின்றியே 'கொல்' என்பான். காலனோ இறை அன்புடைய நல்லோரை வருத்துவதற்கு நெருங்கான்'. கருத்துச் செறிவு நிறைந்த பாடல் இது.

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லஎன்பான்
நல்லாரைக் காலன் நணுககில் லானே.

# நூல்கள் அறிமுகம்

(1) **அப்பர் பெருமானின் வாழ்வும் வாக்கும் :** இந்நூல், திருநாவுக்கரசரின் வரலாற்றினையும், மாட்சிமைகளையும சிறப்புற விளக்குகின்றது. பெரியபுராணத்தின் மூலச் செய்யுட்களும், அவற்றிற்குரிய எளிய, இனிய, தெளிவான பொழிப்புரையும், அவ்வத் தலங்களில் அப்பர் பெருமான் பாடிய திருப்பதிகங்களும், முழுவதாக வரிசையுறத் தொகுத்துச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. தேவாரத் திருப்பதிகங்களின் கருத்துக்கள், சிறந்த முறையில் தெளிவாக எழுதப்பெற்றுள்ளன. பூம்புகார் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியின் தமிழ்த்துறைப் **பேராசிரியர்கள் அறுவர்** சேர்ந்து, இந்நூலை உருவாக்கும் பணிபுரிந்துள்ளனர். அப்பரடிமை திரு. நா. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் ரூபா ஐயாயிரமும் (5000), டாக்டர் திரு. வெ. த. மாணிக்கம் அவர்கள் ரூபா இரண்டாயிரமும் (2000) வழங்கி, இந்நூல் வெளியீட்டுக்காக மிகவும் அன்புடன் உதவி புரிந்துள்ளனர். இந்நூலுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர், பூம்புகார்க் கல்லூரியின் தாளாளர் திரு. **கை. கனகசபைப்பிள்ளை** அவர்கள். இதனை நல்ல முறையில் பதிப்பித்து வெளியிட்டவர், பூம்புகார்க் கல்லூரியின் முதல்வர் திரு. **அரு. இலக்குவன்,** எம்.ஏ. அவர்கள். மிகவும் சிறந்த, பயன்மிக்க இந்நூலின் விலை : காலிக்கோ கட்டு ரூபா 36, காகிதக்கட்டு ரூ. 24. கிடைக்கும் இடம்: ''**திரு. நா. கோவிந்தசாமிப்பிள்ளை,** மே/பா. திரு. கோ. சௌரிராஜன், கிளை மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் பேங்க், திருவானைக்கா-620 005.''

(2) **நாகேசுவரர் நான்மணிமாலை :** இந்நூல், சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூர், வடதிரு நாகேசுவரம் அருள்மிகு நாகேசுவரசுவாமியின் மீது, கவிஞர் திரு. **கே.** பி. அறிவானந்தம் அவர்களால் பாடப்பெற்ற சிறந்த இனிய கவிதை நூல். இந்நூலுக்கு அரசவைக் கவிஞர் மாண்புமிகு கவிஞர் கவியரசு கண்ணதாசன், வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன், அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார், தருமையாதீன குருமகாசந்நிதானம் திருப்பெருந்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் ஆகியோர், சாற்றுக்கவிகளும், வாழ்த்துரைகளும் வழங்கியிருக்கின்றனர். தில்லிப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் திரு. க. ஆறுமுகனார், M.A., M.Litt. Ph.D. அவர்கள் விரிவான ஆய்வுரை ஒன்று வழங்கியிருக்சின்றார். கவிஞர் கே. பி. அறிவானந்தம் அவர்களின் கவிதைத் திறனும், புலமையும், பக்தியுணர்வுமிக்க சமய ஒழுக்கப்பண்பாடும், பெரிதும் போற்றுதற்குரியன. இந்நூல், மேற்படி கோயிலின் அறங்காவலர் பெருமக்களால், திருக்கோயிலின் கார்பில், சிறந்தமுறையில் கண்கவர் வனப்பில் வெளியிடப்பெற்றுள்ளது. விலை ரூபா 4/- கிடக்குமிடம் : ''அருள்மிகு நாகேசுவர சுவாமி திருக்கோயில், குன்றத்தூர், சென்னை-600 069''.

(3) **தமிழகக் கவின்கலை மாட்சி:** இந்நூல், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேருரையாளர் (Reader) திரு. செ. வைத்தியலிங்கம், M.A., M.Litt. அவர்களால், எழுதப்பெற்றது. அழகுணர்வின் மாட்சி, மலர் நாகரிகம், சங்ககால அழகனுபவக் காட்சிகள், தெய்வநல அழகனுபவம், கணபதி வழிபாடு, திருக்கோயிலின் மாட்சியின் அமைப்பு, சிற்பக்கலை மாட்சி, அழகுச் சிற்பங்களில் அருளாளர்கள் ஈடுபாடு, இறைவழிபாட்டில் இசையும் இசைக்கருவிகளும், முத்தமிழ்ப் பாகுபாடு, மணிமேகலையில் கவின்கலைகள், சிந்தாமணியில் கூத்துத்திறன், பெருங்கதையில் கவின்கலைகள் என்னும் அரிய இனிய சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் கொண்டது. இதன்கண் இடம்பெற்றுள்ள கட்டுரை ஒவ்வொன்றும், ஆசிரியரின் பரந்து விரிந்த பெரும்புலமையினையும், சிறந்த ஆராய்ச்சித் திறனையும், புலப்படுத்த வல்லதாகத் திகழ்கின்றது. ஆசிரியரின் கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும், பல்கலைப் பயிற்சியும், வியந்து நயந்து போற்றுதற்குரியன. பயன்மிக்க நல்ல சிறந்த அரிய ஆராய்ச்சி நூல். திருத்தமான சிறந்த கண்கவர் வனப்பு மிக்க பதிப்பு. விலை ரூ. 9/-. கிடைக்குமிடம் : ''திரு. செ. வைத்தியலிங்கன், 7, சந்திரா ரெட்டிச் சாலை, அண்ணாமலை நகர்-608101. (தெ.ஆ.மா.).''

— **ஆசிரியர்**

# வள்ளலாரின் கடவுட் கொள்கை

திரு. புலவர் மா. க. காமாட்சிநாதன், சென்னை.

இராமலிங்க வள்ளலார் தமது கடவுட் கொள்கையினைத் தமது திருவருட்பாப் பாடல்களில் மட்டுமின்றி, தமது உரைநடை உபதேசப் பகுதிகளிலும், சுருக்கமாகவும் சிறப்பாகவும் வெளியிட்டுள்ளார். தம்முடைய அன்பர் ஒருவர் வினவிய ஐய வினாக்களுக்கு வள்ளலார் அவர்கள் சுருக்கமாகப் பின்வருமாறு விடைகூறியிருப்பது, நாம் அறிந்து மகிழ்தற்குரியது. அப்பகுதி வருமாறு :—

''கடவுள் உண்டா? உண்டு. கடவுள் எங்கிருக்கிறார்? எங்கும் இருக்கின்றார். எப்படி இருக்கின்றார்? எப்படி நினைக்கின்றோமோ அப்படி இருக்கின்றார். உருவம் உள்ளவரா? இல்லாதவரா? கடவுள் உருவம் உள்ளவராகவும், உருவம் இல்லாதவராகவும், உருவமும் அருவமும் கலந்த நிலையினராகவும் இருக்கின்றார். கடவுள் ஒருவரா? பலரா? ஒருவரே கடவுள். அவர் எங்கும் நிறைந்து, எல்லாம் ஆகி, எல்லாருடைய உயிருக்கும் உயிராகி, அறிவுக்கு அறிவாக விளங்குகின்றார். ''உருவராகியும், அருவினர் ஆகியும், உருவருவினராயும், ஒருவரேயுளார் கடவுள் கண்டு அறிமினோ'' என்பது திருவருட்பா.

ஒன்றே சிவம் என்று உணர்ந்தேன், உணர்ந்தாங்கு
நின்றேமெய்ஞ் ஞான நிலைபெற்றேன்-நன்றே
மெய்ச்
சித்தியெலாம் பெற்றேன் திருவம் பலத்தாடி
பத்தியெலாம் பெற்ற பயன்

என்றும் வள்ளலார் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார். மேலும் அவர் உலக மக்களை நோக்கி,

சத்தியஞ்செய் கின்றேன் சகத்தீர் அறமின்கள்
சித்தியெல்லாம் வல்ல சிவம்ஒன்றே-நித்தியம்
என்று
எண்ணும்எண்ணத் தாலேநம் எண்ணமெலாம்
கைகூடும்
நண்ணும்இன்பத் தேன்என்று நான்

''உலகத்தீரே! நான் உண்மையாகச் சொல்லுகின்றேன்; எல்லாம் வல்ல சிவபரம்பொருள் ஒன்றே, எங்கும் எல்லாமாய் என்றைக்கும் நிறைந்து நிலைபெற்றுள்ளது. அதனை உறுதியுடனும் ஒருமையுடனும் உருகி நினைத்தால், நமது எண்ணமெல்லாம் ஈடேறும். பேரின்பத் தேன்வந்து பெருகும்'' என்பது மேற்குறித்த பாடலின் பொருள்.

இராமலிங்க வள்ளலார் மேலும் பின்வருமாறு இனிய உபதேசம் செய்கின்றார்: அழகே நெடிய உலகமாகவும், உலகிலுள்ள உயிர்களாகவும், உயிர்களின் மனவிருள் மாற்றிப் பெருவாழ்வு தருகின்ற பிரமனாகவும், திருமாலாகவும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாகவும், அகண்டஞானத்தை அருளும் செல்வனாகவும், வேலேந்து சேயாகிய முருகக்கடவுளாகியும், யானைமுகம் கொண்ட விநாயகப் பெருமானாகவும், பாம்பணையில் பள்ளி கொண்ட பரந்தாமனாகவும், இன்னும் பல்வேறு கடவுளர்களாகவும், கடவுளரெல்லாம் வணங்குகின்ற பெரும் தலைவனாகவும், எமது பரமேசுவரியாகவும், மிக மேன்மையான ஞானசொரூபியாகவும், நாதமாகவும், முத்திச் செல்வமாகவும், அம்முக்தியை அருளும் அனுபூதியாகவும், அருளாகிய பெருஞ்சோதியாகவும், எங்கும்நிறைந்து விளங்கும் சிவமாகவும் இருப்பது ஒரே பரம்பொருள். அது இதய வெளியாகிய சிதாகாய ஞானவெளியில், எப்பொழுதும் இன்பநடனம் புரியும் பரம்பொருள் என்று, வள்ளலார் அறுதியிட்டு உறுதியுடன் கூறுகின்றார்.

''மணிகொண்ட நெடியஉல காய்அதில் தங்கும்ஆன்
மாக்களாய், ஆன்மாக்களின்
மலம்ஒழித்து அழியாத பெருவாழ்வினைத் தரும்
வள்ளலாய், மாறாமிகத்
திணிகொண்ட முப்புராதிகளெரிய நகைகொண்ட
தேவாய், அகண்டஞானச்
செல்வமாய், வேலேந்து சேயாய், கஜானனச்
செம்மலாய், அணையாகவெம்
பணிகொண்ட கடவுளாய்க் கடவுளரெலாந்
தொழும்
பரமாதியாய் எங்கள்தம்
பரமேட்டியாய் பரம போதமாய் நாதமாய்
பரமமோட் சாதிக்கமாய்
அணிகொண்ட சுத்த அநுபூதியாய் சோதியாய்
ஆர்ந்து மங்கள வடிவமாய்
அற்புத சிதாகாச ஞானஅம்பலமாடும்
ஆனந்த நடனமணியே!''

—திருவருட்பா
தனிப்பாசுரப்பகுதி

ஆகவே, கடவுள் ஒருவர், உலகம் அவருடைய தோற்றம், உயிர்களுக்குச் செய்யும் சேவை, கடவுளுக்குச் செய்யும் பூசை என்பது வள்ளலாரின் கடவுட் கொள்கையாகும். ***

# "ஊழி முதல்வன்"


*வழக்கறிஞர்*

**திரு. நா. வேணுகோபால் நாயகர், பி.ஏ., பி.எல்.,**

செயலாளர் : ஸ்ரீவைணவ மகாசங்கம், சென்னை


''வேதம் அனைத்திற்கும் வித்தாகும்'' என்ற சிறப்புடையது திருப்பாவை. வேதம் என்றால் அறிவுக் களஞ்சியம் என்று பொருள் கொள்ளலாம். வேதம் இரண்டு பாகங்களாக அமைந்துள்ளது. ஒருபாகம் கடவுளைப் பற்றியும், கடவுள் தத்துவத்தைப் பற்றியும், கடவுள் 'உடல் மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்துள்ள' தன்மையைப் பற்றியும், கூறும். இதற்குப் பிரம்ம காண்டம் எனப் பெயர். மற்ற கர்ம காண்டம், மனிதன் கடவுளை அடைவதற்காக மேற்கொள்ள வேண்டிய தொழில்களைப் பற்றிக் கூறும்.

வேதத்தின் அடிப்படையில் அமைந்துள்ள வைணவ தரிசனக் கொள்கைப்படி, இறைவன் தன்னை ஐந்து நிலைகளில் வெளிப்படுத்திக் கொள்ளும் வகைகள், திருப்பாவையில் அழகாகவும், வரிசைக்கிரமமாகவும் அமைந்துள்ளன. பகுத்தறிவுக் கண்கொண்டு பார்ப்பவர்க்கும் இந்நிலைகள் ஏற்கத்தக்கவைகளே. இறைவனது ஐந்து நிலைகளை விவரிக்கும் இம்மெய்ஞ் ஞானம், விஞ்ஞானமும் வெறுக்காமல், வேண்டி ஏற்றுக் கொள்ளும் சிறந்த இயல்புடையதாகும்!

எல்லா உயிரினங்களும், உயிரினங்கள் வாழ்வதற்கான சாதனங்களுமான, மண், நீர் நெருப்பு, காற்று, ஆகாயம் முதலான பஞ்ச பூதங்கள் தோன்றுவதற்குமுன்இருந்தவனையே முதல்வன் எனலாம். இவைகள் எல்லாம் தோன்றுவதற்குக்காரணமானவனையும்''முதல்வன்'' எனலாம். எனவே முதல்வன் என்றால் எல்லாம் தோன்றுவதற்கு முன்பும், அவை தோன்றுவதற்குக் காரணமாகவும் இருந்தவனைக் குறிக்கும். இத்தகைய இறைவன் கால வரையறைக்கு உட்படாதவன். அவனுக்கு ஆதி இல்லை. அவனுக்குப் பின்னால் ஏற்பட்ட எந்த உயிரினமும் தம்தம் நிலையில் மாறி வாழ்க்கையை முடித்துக்கொள்ளும். ஆனால் அவனுக்கு அந்தம் இல்லை. ஆதியும் அந்தமும் இல்லாத நிலையில் உள்ளவனே ''ஊழி முதல்வன்.''

நிமிடங்கள் மணிகளாகும். மணிகள் நாட்களாகும். நாட்கள் மாதங்களாகும். மாதங்கள் வருடங்களாகும். வருடங்கள் யுகங்களாகும். யுகங்கள் ஊழியின் சில அணுக்களே. இப்படியான ஊழியின் காலத்தொடர்ச்சிக்கும் முன்பே விளங்குபவனையும், அவ்ஊழியின் தொடக்கத்திற்குக் காரணமாக இருப்பவனையும் ''ஊழி முதல்வன்'' எனலாம்.

ஆண்டாள் அருளிச் செய்துள்ள திருப்பாவையில், நான்காவது பாசுரமான 'ஆழி மழைக் கண்ணா' என்ற பாசுரத்தில் 'ஊழி முதல்வன்' என்று மங்களாசாசனம் செய்யப் பட்டுள்ள இறைவன் ஐந்து நிலைகளிலே பரவி உலகை உய்விப்பதைக் காணலாம்.

நடுத்தெருவில் போகும் ஒருவனை அடியுங்கள்! ஆமாம் அடியுங்கள்! அவன் 'என்னை ஏன் அடிக்கின்றீர்கள்' என்று கேட்பான். பதில் சொல்லாதீர்கள்! மேலும் அடியுங்கள். அவன் தன் பலத்தை நம்பி எதிர்த்துத் தாக்குவான். மேலும் புடையுங்கள். தன் பலத்தில் நம்பிக்கை குறையவும், பக்கத்தில் செல்பவர்களைக் கூவி, அவர்கள் மீது நம்பிக்கை வைத்து அவர்களிடம் முறையிடுவான். அவர்களும் அவனை அடிக்கவேண்டும்: ஆமாம்! காரியமாகத்தான்! இப்படி எல்லோரும் தன்னை அடிப்பதைக் கண்ட அவன், எல்லோர் மீதும் நம்பிக்கையைக் கைவிட்டு, ஆகாயத்தைப் பார்த்து இரு கைகளையும் விரித்து 'ஐயோ! கடவுளே அடிக்கிறார்களே! உனக்குக் கண் இல்லையா'' எனக் கதறுவான்.

நடுத் தெருவில் போன இவனுக்கு ஆகாயத்தில் கடவுள் இருக்கிறார் என்று எப்படித் தெரியும்? சகல ஜீவாத்மாக்களிடத்தும் பரவியுள்ள பரமாத்மாவின் தொடர்பால் ஏற்பட்டுள்ள உள்உணர்ச்சியே திக்கற்ற நிலையில் இருந்தவனை ஆகாயத்தை அண்ணாந்து நோக்கி அழுது முறையிடச் செய்தது!

கடவுளை இவன் கண்டவனா? என்றாலும் கடவுளை நேரில் கண்டவன்போல்; ''கடவுளே! உனக்குக் கண் இல்லையா''என்று கதறினானே, கடவுளுக்குக் கண்ணும் ஏனைய புலன்களும் அமைந்த திருமேனியும், ஏனைய புலன்களும் அமைந்த திருமேனியும் இருப்பதாக நம்பவில்லையானால், இப்படி நம்பிக்கை இல்லாத ஒரு எண்ணத்தை அடிப்படையாகக்கொண்டு கதறியிருப்பானா?

சாகும் தருவாயில் ஒருவன் அளிக்கும் மரணவாக்கு மூலத்தைச் சத்தியமானதென்று போதிக்க வேண்டுமென்று சட்டமும் கூறுகின் றது. இவ்விதமாக கடவுளுக்குக் கண் உண்டு என் றும், அவர் எல்லா இடங்களிலும்நிகழும் எல்லா நிகழ்ச்சிகளையும் அறியவல்லார் என்றும், அறிந் தும் ஆபத்தில் வந்து உதவும் தன்மையும் சக்தியும் உடையவர் என்றும், எவ்வளவு ஆழமான நம்பிக்கைகள் இந்த அலறலிலிருந்து வெளிப்பட்டன. இந்த நம்பிக்கைகள் எல்லாம் எழுந்தமைக்குக் காரணம் என்ன? பரமாத்மா, ஜீவாத்மாக்களில் பரவி எழுப்பும் உள் உணர்ச் சியே காரணமாகும்.

ஆகாயம் என்பது பூமிக்கு மேலுள்ள அண்ணாந்து பார்த்தாலும் எங்கே முடிகிறது என்று அளவிட்டுச் சொல்லிவிடமுடியாத வெளிப்பரப்பாகும். சூரியன், சந்திரன், நட்சத் திரங்கள் உலாவும் வெளிப்பரப்புகளுக்கும் அப்பால் நீண்டு கிடப்பது என்று மன அமைதி அடையவேண்டும். இம்மண்டலம் காற்றும் உல வாத பாழ் வெளியாகும்.

இந்தப் பாழ்வெளிக்கும் அப்பால் உள்ள மண்டலத்தில்தான், தன்னைக் காப்பாற்றக் கூடிய கடவுள் இருப்பதாக உள் உணர்ச்சியின் உணர்வு கொண்டு தேறினான், ''தெய்வமே துணை'' என்று நம்பிய அத்திக்கற்ற மனிதன். இப்படிச் சாதாரண மனிதனும் உருவகப்படுத் திய மண்டலத்தையே 'பரம்' என்றும் 'பரம பதம்' என்றும் வைணவ தரிசனம் குறிப்பிடு கிறது.

ஆகவே ஊழிமுதல்வனான இறைவன் தன்னை முதலில் வெளிப்படுத்திக்கொண்ட நிலை பரம் அல்லது பரமபதம். இந்த இறை வன் எல்லா உயிர்த் தத்துவங்களிலும், பொருள்களிலும் வியாபித்து, உட்பரவி, 'மலரி னில் மணமும் போல நிற்கின்றான்!

உயிர்த் தத்துவங்களும், ஏனைய உயி ரில்லாப் பொருள்களும் யாவும் அழிந்து விடும் பிரளய ஊழிக் காலங்களில் 'மூலப் பிரகிருதி' என்னும் நுண்ணிய அளவில், தன்னிடம் வந்து அடைக்கலம் ஆகி, மறுபடியும் முன்னைய வடிவில் வியாபிக்கத் தொடங்கும்வரை, தன் திருமேனியிலேயே அடக்கிக்கொண்டுகாத்தருளு கின்றான். அதாவது அசித் சித் (உயிரற்றவை, உயிர்த்தொகுதி) என்ற நாரங்களாகிய கூட்டங் களுக்கு அயனமாக அடைக்கலமாக விளங்குவ தால் நாராயணன் என்ற நாமம் பெறுகிறான்.

இறைவனை அறிமுகப்படுத்தி அநுபவிக்க ஆரம்பிக்கும் கோதை தமிழாம் திருப்பாவை யும், முதல் பாசுரத்தில் அவனை நாராயணன் எனக் குறிக்கின்றது. பரம் என்ற முதல்நிலை யில் எழுந்தருளியுள்ள இறைவன் நாராயணன்! சகல பேறுகளையும் அளிக்கவல்லவன் இவனே! பேறுகளில் உயர்ந்ததான 'எற்றைக் கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் (இறைவன்) அவன் தன்னோடு உற்றோமாய் ஆகி, அவனுக்கு நாம் ஆட்செய்யவைத்து, மற்றை நம் காமங் களை மாற்றி, சர்வ கால சர்வ நிலைமைகளி லும் அமைய வேண்டியதான குற்றவேல் பேற் றையும் நாராயணனே அளிக்கவல்லவன்.

வில்லிபுத்தூர் விளக்கான, ஸ்ரீஆண்டாள் திருப்பாவையின் முதல் பாசுரத்தில் ''நாரா யணனே நமக்கே பறைதருவான்'' என்று அரு ளிச் செய்வதன் மூலம் இந்த அறிவுச் சுடரைக் கொளுத்துகின்றாள்.

''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்,
நீராடப் போதுவீர்! போதுமினோ! நேரிழை யீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்!

பரமபதத் திருநாட்டிலே, தோன்றி வளர்ந்து மறையும் உடலுடன் வாழமுடி யாது. இருளகற்றும் எறி கதிரோன் மண்டலத் திற்கு இப்பாலும் அப்பாலும் ஒருவாறு சிந்தனை செய்து ஊகித்துக் கொள்ளக்கூடிய வெளிப் பரப்பில் காற்று உலவுகிறது. பலஊழிக்கால அளவில் அக்காற்று சூடாகும், குளிர்ச்சிஅடை யும். குளிர்ச்சி அடைந்த நிலையில் மேகமாக மாறுகிறது. மேகம் மழைக்குக் காரணம். மழை கடலாக உருவம் எடுக்கின்றது. உயிரினத்தின் முதல் உணவு பால். உயிரினங்களுக்கு முதன் முதலில், உடலுக்கும் உயிரான ஆத்மாவிற் கும் உணவுத் தத்துவத்தை அளிப்பது பாற் கடலே! இவ்விதமான திருப்பாற் கடலிலே இறைவன் இரண்டாவதாக எழுந்தருளியுள்ளா னாம். திருப்பாற் கடலிலே இறைவன் எழுந் தருளியுள்ளான் எனக் கூறலாமா? சமமட்ட மான திருப்பாற்கடலிலே ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டானாம். எது படுக்கையா? ஜலமண்டல உதவியால் உயிரினங்கள் தோன் றிச் சஞ்சரிக்க முடிவதால்; மலைப்பாம்பைவிட மிகப் பெரிதான கடல்பாம்பின் உருவின் 'ஆதி சேடன்' முதன்முதலில் அடிமை (கைங்கரியத்) தொழில் ஏற்றுப் படுக்கையாகிவிட்டானாம்! சேடன்; அடிமை. ஆதிசேடன்; முதல் அடிமை. திருப்பாற் கடலில் இறைவன் திருக்கண் வளர்ந் தருளுகிற இந்த இரண்டாவது நிலைக்கு 'வியூ கம்' எனப் பெயர்.

தோன்றிமறையும் உடலின் சேர்க்கை இல் லாமல் பரமபதத்தில் திகழும் நித்திய சூரிகட் குக் கவலைகள் இல்லை; குறைகள் இல்லை. ஆனால் உடல் சேர்க்கை யுடன் கடலில் வாழ் கின்ற உயிரினங்களுக்குக் கவலைகள் உண்டு; குறைகளும் உண்டு. எனவே, கஷ்டம் ஆபத்து என்றால், திருப்பாற்கடலின்கண் வளர்ந்தரு ளும் பரமனிடம்தான் கூப்பாடு போடலாம். பரமபதம் அடைந்துவிட்டால், உடலும்அங்கே வராது. அதனால் ஏற்பட்ட துயரமும், தேவை யும் அங்கே நம்மைத் தொடரா! எனவே பரம பதம் கும்பிடு போடும் இடம்; திருப்பாற்கடல் கூப்பாடு போடும் இடம்.

பாவை நோன்பு என்பது, இறைவனுக்குத் தொண்டுசெய்யும்பேற்றை விரும்பி, அடைந்து அவ்விதமே வாழ்வதாகும். இப்பாவை நோன்பையியற்றப் பல தேவைகள் ஏற்படுகின்றன. அதைவிடப் பல தேவைகளை அகற்றிக்கொள்ளவேணும். நாட்காலே நீராட, மழைத்தேவனின் கருணை தேவை. ஐயமும் பிச்சையும் செய்து உய்யும் வகையை எண்ணி இருக்கவேண்டும். உடல் சுகங்களுக்காக நெய்யுண்ணாமலும், பாலுண்ணாமலும், (கண்ணுக்கு) மையிட்டு எழுதாமலும், மலர்இட்டு முடியாமலும், செய்யாதன செய்யாமலும், தீய குறளை (கோள் சொல்லுவதை) சென்று ஓதாமலும் இருக்க வேண்டும்.

இப்படி எல்லாம், நமக்கு வேண்டியதேவைகளையும் ஏற்படுத்திக்கொண்டு, காப்பாற்ற வேண்டிய நியமனங்களையும் நமக்கு அருளும்படி எங்கே போய்க் கூப்பாடு போடலாம்? பட்டர்பிரான் கோதை இரண்டாவது பாசுரத்தில் இதற்கு விடையளிக்கின்றாள்; ''வையத்து வாழ்வீர்காள்! பாற்கடலுள் பையத்துயின்ற பரமன் அடிபாடி'' தேவைகளைத் தரவும், குறைகளை அகற்றவும், பாவை நோன்பினை நிறைவேற்றி அருளவும் ''கேளீரோ'' எனப் பணிக்கின்றாள்! வியூக நிலையைக் காட்டும் அந்த இரண்டாவது பாசுரம்:

''வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்
காலே நீராடி
மையிட் டெழுதோம்! மலரிட்டு நாம்முடி,
யோம்!
செய்யாதன செய்யோம்! தீக்குறளை சென்
றோதோம்!
ஐயமும், பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி,
உய்யுமாறு எண்ணி, உகந்தேலோர் எம்பா
வாய்''

கடல் நீர்ப்பரப்பில் திட்டைகள் ஏற்பட்டு நிலப்பரப்பாகி; நீரிலும், நிலத்திலும் ஜீவராசிகள் உருவெடுத்தபின், அசித் சம்பந்தத்தாலே, அஞ்ஞானமும், அதன் அடியாகப் பாபமும் மலியலாயின. பொய்ந்நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கும். அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை ஏற்பட்ட பிறகு, தன் படைப்பின் பயன் வீணாவதைக் கண்டு வருந்திய இமையோர் தலைவனான இறைவன், எந்நின்ற (எல்லாவித) யோனியுமாய்ப் பிறக்க வேண்டியதாயிற்று! உலகை உய்விக்க இறைவனும் பத்து அவதாரங்கள் எடுத்தான். இப்படி இறைவன் அவதாரங்கள் எடுத்துத் திகழ்ந்த நிலைக்கு விபவம் என்று பெயர்.

மற்றைய அவதாரங்களைவிட, இறைவனுடைய திருவிக்கிரம அவதாரத்திற்குப் பல தனிச் சிறப்புகள் உண்டு. ஆகாயம், நிலம், கடல்பரப்பு இவைகளை எல்லாம் உள்ளடக்கிப் பரவிய அவதாரம் திருவிக்கிரம அவதாரமே. ஆண்டாளும் இறைவனது மூன்றாவதான விபுவ நிலையைப் பாடும்போது 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்று, மங்களாசாசனம் செய்தருள்கிறாள்.

இதோ அந்த மூன்றாவது பாசுரம்:

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்
பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்''

இறைவனது நான்காவது நிலை அந்தர்யாமித்துவம். அதாவது கட்புலனுக்குக்கும் ஏனைய புலன்களுக்கும் எட்டாத நிலை. எங்குமுளன் ஈசன் என்றாலும், நம்மால் எளிதாக அறியக் கூடாத நிலை. இரவில் சூரியனைப் பார்க்காவிட்டால் சூரியன் இல்லை என்று கூறுவதா? விஷ்ணு என்ற சிறப்புப்பெயர் ஸ்ரீமந் நாராயணனுக்கு உண்டு. விஷ்ணு என்றால் எங்கும் நிறைந்தவன் என்று பொருள்.

புலன்களுக்குப் புலப்படாத இறைவனின் இந்த அந்தர்யாமித்துவ நிலையை நமக்குத் தெளிய அறிவிப்பதற்காக, ஒரு அருமையான உதாரணத்தைக் காட்டி விளக்குகின்றாள் ஆண்டாள்.

மழை பெய்கிறது: பார்க்கிறோம். ஆனால் அது எங்கிருந்து வந்தது? மழை வானத்தின் உயரத்தில் உலவும் மேகத்திலிருந்து கொட்டுவதாகக் கொள்ளலாம். இந்த மேகம் எப்படி உருவெடுத்தது? உலகம் முழுதும் பரவியுள்ள நீர்ப்பரப்பிலிருந்து, கண்ணுக்குப் புலனாகாத நீராவிகள் எழுந்து, உயரக் கிளம்பி வானில் மேகங்களாக உலவுகின்றன.

அவதாரம் எடுத்து, அவ்வப்போது மக்கள் காணும்படி எழுந்தருளிய இறைவனும் மக்கள் காணமுடியாத அந்தர்யாமித்துவ நிலையில் அவதாரங்களுக்கு முன்னும் பின்னும் எழுந்தருளிப் பரவியுள்ளான். இறைவனது நான்காவதான அந்தர்யாமித்துவ நிலையை 'ஆழி மழைக் கண்ணா' என்று தொடங்கும் நான்காவது மழைப் பாசுரத்தில், உள்ளுறை பொருளாக வைத்துக் காட்டி, 'தீங்கின்றி நாடெல்லாம், திங்கள் மும்மாரி பெய்து, நீங்காத செல்வம்' நிறையவேண்டுமென வாழ்த்துகின்றாள், போகத்தில்வழுவாத புதுவையர்கோன்கோதை. இதோ அந்த நான்காவது பாசுரம்:

''ஆழி மழைக்கண்ணா நன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல்நின்ற திர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்,
வாழ உலகினில் பெய்திடாய்! நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!

ஆற்றில் வெள்ளம் போகிறது! அனைவருக்கும் மகிழ்ச்சி! இறைவன் விபவ நிலையில் பத்து அவதாரங்கள் எடுத்துக் கூராழிவெண் சங்கேந்தி விண்ணும் மண்ணும் உய்ய வந்த

போது அப்படித்தான் மக்கள் கண்டு களித்தார்கள்! அவதார காலங்களுக்குப் பிறகும் மக்களைத் தவிக்கவிட விரும்பாத இறைவன், நாட்டினான் தெய்வமெங்கும் நல்லதோர் அருள்தன்னாலே. இதனால் பற்பல திவ்விய தேசங்களிலே விக்கிரக உருவ வடிவில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளானாம்! ஆற்றில் வெள்ளம் அற்றுவிட்ட நிலையில் தேங்கின மடுக்கள்போல, இத் திவ்வியதேசங்கள் மக்களுக்கு ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் ஊற்றுப் பெருக்காற்றால் உலகுக்கு ஊட்டுகின்றனவாம்! பக்தி உணவளித்து. எனவே, நாம் .முன்னம் வளரொளி மாயோன் மருவிய கோயில் சேவிக்க வேண்டுமென்று நியமிக்கின்றார் நம்மாழ்வார். இப்படி மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த அருள் மாரியாம் திருமங்கை மன்னனும், முற்ற மூத்துக் கோல்துணையா, முன்னடி நோக்கி வளைந்து, இற்ற கால்போல் தள்ளி மெள்ள இருந்தங்கு இளையாமுன்' வடக்கே வதரியிலிருந்து தென்கோடிக் குறுங்குடிவரை வணங்க வேண்டுமென்று பணிக்கின்றார்!

திவ்விய தேசங்களில் திருக்கோயில் கொண்டு இறைவன் எழுந்தருளியுள்ள நிலைக்கு 'அர்ச்சை' (பூசிக்கப்படும்) நிலை என்றுபெயர். பிறக்கும்போதே மணத்துடன் பிறப்பது திருத்துழாய். இறைவன் எடுத்த பத்து அவதாரங்களிலும், தேவகி-வசுதேவ தம்பதிகளுக்கு மகனாக, திருவாழி, திருச்சங்கு முதலான திவ்விய ஆயுதங்களுடனே ''தானே இறைவன்'' என வெளிப்படுத்திக் கொண்டு அவதரித்த பெருமை வடமதுரையானுக்கேஉரியது. ஆற்று வெள்ளத்தைப் பின்பு அது தேங்கின மடுக்களில் காண்பது போல, விபவத்தில் அவதாரங்கள் மூலம் எழுந்தருளிய இறைவனே ஐந்தாவதான அர்ச்சை நிலையில் பின்புள்ளாரும் காணும்படியாக எழுந்தருளியுள்ளான் என்பதைக் காட்டவே, விபவமும், அர்ச்சையும் (மன்னு) சேர்ந்து மிளிரும் மாயனுடைய வட மதுரையையும், அதனைச் சார்ந்த தூய சமநீர் யமுனைத் துறையையும் மங்களாசாசனம் செய்தருள்கிறாள். ஐந்தாவது பாசுரத்தில், ஐந்துகுடிக்கு ஒரு சந்ததியாய், ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்ப் (பக்தியில்) பழுத்த ஆண்டாள், அர்ச்சை நிலையைக் காட்டும் பாசுரம்:

''மாயனை! மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோத
ரனைத்
தூயோமாய் வந்து, நாம் தூமலர் தூவித்
தொழுது
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும், செப்பேலோர் எம்பா
வாய்''

இங்ஙனமாக, திருப்பாவையில் ஆண்டாள் ஊழிமுதல்வனுடைய பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற ஐந்து நிலைகளையும், முதல் ஐந்து பாசுரங்களில் அருளியுள்ளாள். பாதகங்கள் தீர்க்கவும், பரமன் அடிகாட்டவும், திருப்பாவையை அருள, குன்றாத வாழ்வான வைகுந்தவான் போகந் தன்னை இகழ்ந்து, பெரியாழ்வார் திருமகளாராய் அவதரித்த ஆண்டாளின் தூய மலர்ப் பாதம் துணை நமக்கே!

# திருத்தலங்கள்

நாம் நம் வாழ்க்கையில் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து நினைந்து காண்போமாயின், ஒரு சில இடங்கள் வேறு பிறசில இடங்களைவிட மனத்திற்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் விளைவிப்பதைக் காணலாம். சில இடங்கள் மனம் குவிந்து தியானம் செய்வதற்கு ஏற்றதாக இருக்கும். அவ்விடங்களில் தெய்வ சிந்தனைகளும், நல்ல சமய உணர்வுகளும், பக்திநெறிப் பாவனைகளும் இயல்பாக உண்டாகும். ஆனால் வெறும் உலகியற் சிந்தனைகளும் செயல்களுமே நிகழ்கின்ற இடங்களிலும், வீண்பேச்சுக்கள் பயனற்ற பொழுதுபோக்குச் செயல்கள். வறுமொழியாளர், வம்பப் பரத்தர் போன்ற தீயவர்கள் நடமாட்டம் ஆகியன நிகழும் இடங்களில், மேற்குறித்தவற்றிற்கு நேர்மாறான இயல்புகளும் செயல்களும் அநுபவங்களுமே, நம்மிடம் நிகழ்தலை நாம் நம் வாழ்க்கையில் கண்டுணரலாம்.

அருளாளர்கள் வாழ்கின்ற இடங்கள் புனிதம் அடைகின்றன; அவ்விடங்களில் அருளாற்றல் பதிகின்றது; அவ்விடங்களிலிருந்து அருள் அலைகளும்; அருட் கதிர்களும் வீசுகின்றன. அவைகளின் மூலம், அவ்விடங்களில் அமைதி தரும் சூழ்நிலை ஏற்படுகின்றது. அது மட்டுமன்றி அவ்விடங்களுக்கு மேலுலகில் வாழும் அருளாளர்கள் வந்து செல்கின்றனர். அதனால் அவ்விடங்களில் அவர்களின் தெய்வீக நலங்களும் ஆற்றல்களும் பதிந்து பரவிப் பெருகுகின்றன. இவற்றால் அவ்விடங்கள் புனிதம் மிக்க புண்ணியத் தலங்களாக மாறுகின்றன.

இத்தகைய தூய அருள்நிறைந்து விளங்கும் அருமை பெருமை மிக்க புனிதப் புண்ணிய இடங்களையே திருத்தலங்கள் என்று, நம் முன்னோர்களும் பெரியோர்களும் புகழ்ந்து போற்றி மகிழ்ந்து வந்துள்ளனர்.

—Dr. Annie Besant

—தமிழாக்கம் ஆசிரியர்

# அடக்கமுடைமை

"முத்தமிழ்க் காவலர்" — "கலைமாமணி"

திரு. டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருச்சி

''காக்க பொருளா அடக்கத்தை, ஆக்கம்
அதனினூங் கில்லை உயிர்க்கு''

என்பது திருக்குறளில் அடக்கமுடைமை என்ற தலைப்பில் இரண்டாவதாக வந்துள்ள குறள். நாமெல்லாம் பொன்னையும், பொருளையும் உடைமைகள் எனக் கருதி வருகிறோம். திருவள்ளுவரோ இவையல்லாத உடைமைகளைப் பற்றிக் கூறுகிறார். அவைகளையும் அதிகாரத்தின் தலைப்புக்களாக அமைத்திருக்கிறார். அவை பத்து, அவற்றை அகர வரிசையில் வைத்து முறைப்படுத்தினால், முதலில் வந்து நிற்பது ''அடக்க முடைமை''யே. அதைத் தொடர்ந்து வருகிற மற்ற உடைமைகள் அருளுடைமை, அறிவுடைமை, அன்புடைமை, ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நாணமுடைமை, பண்புடைமை, பொறையுடைமை என்பன.

ஆற்றலுள்ளவர்கள் அடங்குவதற்கே ''அடக்கம்'' என்று பெயர். ஆற்றலற்றவரின் அடக்கம் ''அடக்கம்'' என்ற பெயரைப் பெறாது. ''கற்றுணர்ந்து அடங்கல்'' ''ஆன்றவிந்து அடங்கல்'' என்ற சொற்றொடர்களே இதனை மெய்ப்பிக்கும். இத்தகைய அடக்கமும் பலவகையாம். அவற்றுள் தலைமை வகிப்பன மூன்று. அவை மனஅடக்கம், நாவடக்கம், உடலடக்கம் என்பன. இவை மூன்றும் தீய எண்ணங்களை எண்ணாமை, தீய சொற்களைச் சொல்லாமை, தீய செயல்களைச் செய்யாமை என்றாகும்.

அடக்கம் இன்பத்தையும், அடங்காமை துன்பத்தையும் தருமாதலின், வாழ்வைச் செம்மைப்படுத்த, உயர்த்த இன்றியமையாத ஒன்று ''அடக்கம்'' என்பதையே இக்குறள் வலியுறுத்துகிறது. எதையும், எதிலும் அடக்க வேண்டுமானால், அது ஒரு பொருளாக இருந்தாக வேண்டும். இன்றேல், அது அடங்கவும் செய்யாது. அடக்கவும் முடியாது. அடங்குதல் என்றுமாகாது. ஆகவே, அடக்கம் தானாகவே ஒரு பொருளாகி விடுகிறது. அதை எண்ணியே அடக்கத்தை ஒரு பொருளாக மதிக்கும்படி திருவள்ளுவர் இக்குறளிற் கூறுகிறார். இது எண்ணி மகிழக்கூடிய ஒன்று.

பயிரும், பொருளும் பாதுகாக்கத் தக்கவை. இன்றேல் இவை இரண்டும் அழிந்துபடும். அடக்கம் ஒரு பொருளாக ஆகும் பொழுது அதைப் பாதுகாத்தாக வேண்டும் என்பதும் பெறப்படும். அதனாலேயே 'காக்க பொருளா அடக்கத்தை' என்று இக்குறள் நமக்குக் கடுங்கட்டளையிடுகிறது. காக்காவிடில் தீமை விளையும் என்பது மட்டுமல்ல, காப்பதால் நன்மை விளையும் என்பதும் வள்ளுவரது கருத்து. இதை இக்குறளிலுள்ள 'ஆக்கம்' என்ற சொல் விளக்கிக் கொண்டிருக்கிறது.

அடக்கமான வாழ்வினாற் பெறுகின்ற ஆக்கம் மிக உயர்ந்த ஆக்கமெனவும் அதைவிடச் சிறந்த ஆக்கம் வேறில்லையெனவும் திருவள்ளுவர் அறுதியிட்டுக் கூறுகிறார். இதனை ''ஆக்கம் அதனினூங்கில்லை'' என்பதால் நன்கறியலாம்.

''உயிர்'' என்பது பொதுவாக அனைத்துயிரையும் குறிக்கும். எனினும் அறிந்து, அடங்கிப் பயன் பெறுவது மக்களே ஆதலின், இது மக்கள் உயிரை மட்டுமே குறிக்க வந்ததாகும். ஆகவே, மக்களாகப் பிறந்தோரனைவரும் தங்களுக்குப் பெரும் பயனைத் தருகின்ற அடக்கத்தை ஒரு உயர்ந்த பொருளாகக் கருதி நன்கு பாதுகாத்தாக வேண்டும் என்பது இக்குறள் கூறும் முடிவு. நல்ல சொற்கள் பலவற்றோடு ஒரு தீச்சொல் கலந்து விடுமாயின் அனைத்துமே தீய சொற்களாகிவிடும். தீயினாற் சுட்ட புண்கள் விரைவில் ஆறிவிடுவதைப் போல, நாவினாற்சுட்ட புண்கள் ஆறிவிடுவதில்லை.

ஆகவே, எதை அடக்க முடியாவிடினும் நாவை அடக்கியே ஆகவேண்டும். இன்றேல், வாழ்வில் இழுக்குப்படும். மன அடக்கமும், நாவடக்கமும் கொண்டு வாழ்கின்ற வாழ்வு மிகச் சிறிய வாழ்வாக இருப்பினும், அது மலையினும் உயர்ந்து காணப்படும் பெருவாழ்வாக அமையும். ஆகவே, தம்பீ! அடக்கம் என்னும் அருஞ் செல்வத்தை அடைந்து அதை ஒரு பொருளாகக் கருதிப் போற்றிப் பாதுகாத்து வா! அது உன் வாழ்வின் தரத்தையேஉயர்த்தி விடும்! வாழட்டும் தமிழ்ப் பண்பு! வளரட்டும் குறள் நெறி!

***

# திருமுறைகளில் தமிழ் மரபு

மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

'திருமுறை' என்பது, கடவுள் தன்மை பொருந்திய நூல் எனப்பொருள் தரும் தமிழ்ச் சொல் என்பது வெளிப்படை. எனவே, அச்சொல் தமிழில் கடவுள் தன்மை பொருந்திய நூல்களைக் குறித்தல் சொல்ல வேண்டா. 'முறை' என்பது, நேராகச் சுவடியையே குறிப்பது. அதனை.

''இறை நிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறைவரை வேன்என முயல்வ தொக்குமால்''

என்னும் கந்தபுராண அவையடக்கச் செய்யுளாலும்,

''முறையென்ப கோச மேஊழ்
முறைமைஇம் முப்பேர் என்ப''

என்னும் நிகண்டினாலும் அறியப்படும். கோசம்-சுவடி.

பெரியநூல்கள்ள ஒரே சுவடியாக ஆக்கினால் இன்னல் பல உண்டாதல் பற்றிப் பல சுவடிகளாகப் பகுத்து அமைப்பதை அச்சு முதலியன மிகப் பல்கியுள்ள இக்காலத்திலும் நாம் காண்கிறோம். எனவே, ஓலை ஏட்டிலே எழுதப்பட்ட அக்காலத்தில் இம்முறை இன்றியமையாததாய் இருந்தது. அதனால், இறைவனின் திருவருள் வெளிப்பாடாக எழுந்த திருப்பாடல் நூல்களை, ஒரே சுவடியாகத் தொகுக்காமல் பல சுவடிகளாகப் பகுத்து எழுதுவித்தனர் ஆசிரியர். அச்சுவடிகளே திருமுறைகள். கடவுள் தன்மையுடைய சுவடிகள் ஆதலால், 'முறை' என வாளா கூறப்படாது, 'திருமுறை' என அவை சிறப்பித்துக் கூறப்படுகின்றன. 'முறை' என்னும் சுவடியைக் குறிக்கும் பெயர், பின்னர் இடவாகு பெயராய், அதில் எழுதப்பட்டுள்ள திருப்பாடல்களைக் குறிக்கும்.

'திருப்பாடல்' என்னும் பெயர்க்கு உரிய பாடல்கள் மிகப் பலவாயினமையின், அவை பன்னிரண்டு சுவடிகளாகக் கொள்ளப்பட்டன. அதனால் திருமுறைகள் பன்னிரண்டாக 'பன்னிரு திருமுறை' என்னும் வழக்கம்உளதாயிற்று. திருமுறைகளின் தொடக்கப் பாடலின் முதலில் 'தோ' என்னும் எழுத்தில் 'பிரணவம்' எனப்படும் ஓங்காரத்தின் முதல் எழுத்தாகிய 'ஓ' என்பது தகர மெய்யுடன் கூடி நிற்கின்றது. திருமுறைகளின் இறுதிப்பாடல் 'உலகெலாம்' என்று முடிவதால், முதலில் நின்ற ஓகாரம் ஈற்றில் நிற்கும் மகரமெய்யோடு கூடி, 'ஓம்' என்று முற்றுப் பெறுகின்றது. அதனால் 'திருமுறைகள்' எனப்படும் திருப்பாடல்கள் யாவும் இவற்றினுள்ளே அடங்கி நிற்க, அத்தகைய பாடல்களின் தொகுப்பு, மேற்குறித்த இறுதிப் பாடலோடே முற்றுப் பெற்றனவாகின்றன. அதனால் சேக்கிழார்க்குப் பின்பும் தெய்வீகப் புலவர்கள் தமிழ்நாட்டில் தோன்றிப் பல இறையருள் விளக்கப் பாடல்களைப் பாடிய போதிலும், அவைகளை, 'பதின்மூன்றாந் திருமுறை, பதினான்காந் திருமுறை' என்று வகுத்துத் திருமுறைகளின் எண்ணிக்கையைப் பெருக்க முயலவில்லை. அவ்வாறு முயலுதல், முன்னோர் கருத்துக்கு ஒவ்வாததோடு, தமிழில் ஒரு குழப்பத்தை விளைவிப்பதாகவும் முடியும்.

மேலும், தொன்றுதொட்டு வரும் ஒரு நல்ல நெறியில் அழுந்திய பற்றுக் கொண்டு அதனைப் பாதுகாக்க விரும்புபவர்கள் அதன் தொடர்பாக உள்ள பழைய மரபைச் சிதையாது பாதுகாப்பதிலும் உறுதியாக இருத்தல் வேண்டும். வடமொழியில், 'ஆகமங்களும் வேதத்தோடு ஒத்த சிறப்புடையன' என்பது ஆகமவாதிகள் கொள்கை. எனினும் அவற்றை அவர்கள் 'ஆகமம்' என வேறு பெயரிற் குறித்தல் அன்றி, 'வேதம்' என்று ஒருபோதும் கூறுதல் இல்லை. அவ்வாறே 'ஆகமங்கள் இருபத்தெட்டு' என்ற வரையறை ஏற்பட்ட பின்னர், அவைபோன்ற பிறவற்றை 'உபாகமம்' என்கிறார்களேயன்றி, 'ஆகமம்' என்பதில்லை. மற்றும் 'புராணங்கள் பதினெட்டு' என்று சொல்லப்பட்ட பின்பு, பிறவற்றை 'உபபுராணம்' என்பதல்லது, 'புராணம்' எனக் கூறுதல் இல்லை.

தமிழிலும் திருக்குறளுக்குப் பின் 'ஔவை குறள்' முதலாகக் குறள் வெண்பாக்களால் செய்யப்பட்ட நூல்கள் பல. எனினும், அவற்றை வேறுவேறு பெயர்களால் கூறுதலல்லது 'திருக்குறள்' என்ற பெயரில் ஒருவரும் கூறவில்லை. இம்முறையே திருமுறையிலும் பொருந்தி நிற்கின்றது.

திருமுறைகள் கடவுள் தன்மையுடைய தமிழ் நூல்களாக இருத்தலின், அவை தமிழ் மக்கட்கு வாய்க்கப் பெற்ற திருவருட் செல்வப்

பெருங் கருவூலங்களாகும். அவை தமிழ்மொழியாய் அமைந்திருத்தல் மட்டுமன்று; தமிழ் மரபுகள் பலவற்றினைக் காப்பனவாகவும் உள்ளன. திருமுறை ஆசிரியர்கள் இறைவனது திருவருள் கைவரப்பெற்று, மக்கள் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட அருளாற்றலை உடையவர்களாய் இருந்தமையால், அவர்கள் ஒரு நெறிக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதில்லை. தாம் வகுத்ததே மற்றவர்கட்கு நெறியாகத் தாம் வேண்டியவாறே நடத்தல் கூடும். ஆனாலும் அவர்கள் அவ்வாறின்றி, முன்னை ஆன்றோர் நெறிக்கு உட்பட்டே ஒழுகினமை, அவர்கட்கு ஏனைய மக்கள்பால் எழுந்த கருணையேயாகும். ஏனெனில்,

''மரபுநிலை திரியின்
பிறிதுபிறி தாகும்''

என்று தொல்காப்பியனார் கூறியபடி அவரவர் தாம்தாம் ஒவ்வொரு நெறியைப் புதிது புதிதாக வகுத்துச் செல்வராயின், யாருக்கு என்ன விளங்கி என்ன பயனைத் தரும்?

'திருஞான சம்பந்தர் ஞானப்பாலை உண்டமையால் எல்லாக் கலைகளையும் அப்பொழுதே ஓதாது உணர்ந்தார்' என்றால் 'தமிழ்க்கலைகளை மட்டுந்தான் உணர்ந்தார்' என்பது பொருளா? அக்காலத்தில் மிகச் சிறந்து விளங்கிய வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் முதலிய அனைத்துக் கலைகளையும் உணர்ந்தார் என்பது தானே உண்மை! அதனை அவரது உபநயனச் சிறப்புக் கூறுமிடத்தில் சேக்கிழார், உபநயனத்தைச் செய்வித்த அந்தணர்கள், 'இன்று முதல் வேதத்தை ஓதும் உரிமை உங்களுக்கு உண்டாகின்றது' என்று கூறியபொழுது, ஞானசம்பந்தர் அவர்கள் அறிந்திராத பலவேதப் பகுதிகளை அவர்கட்குக் கூறினார்' என்றும், 'அதனைக்கேட்டு அந்த அந்தணர்கள் அதிசயித்து, வேதத்தில் தங்களுக்கு இருந்த ஐயங்களைப் பற்றி அவர்பால் வினாவி, அவ்வையங்கள் நீங்கப் பெற்றனர்' என்றும் கூறும் முகத்தால் விளக்கியுள்ளார். ஞானசம்பந்தர் அந்தணர்கள் முன் அவ்வாறு கூறியது தமது பெருமையைக்காட்டிக் கொள்வதற்காக அன்று; இறைவனுடைய திருவருளின் பெருமையை இனிதுவிளக்குதற் பொருட்டேயாம்.

மேற்காட்டியவாறு அமைந்த சேக்கிழாரது திருமொழியால் மட்டுமன்று; ஞானசம்பந்தரது திருப்பதிகங்களிலே வேதம், ஆகமம், புராணம் முதலியவற்றின் பொருள்கள் பொதிந்து கிடக்கக் காண்கின்றோமன்றோ! ''ஞானசம்பந்தர் ஓதாதுணர்ந்தவர்'' என்பது பற்றி அவர்பால் இதனை இவ்வளவு தூரம் விளக்க வேண்டி வந்தது. ஏனைய ஆசிரியர்கள் கற்றுத்துறை போயவர். ஆதலால், அவர்கள் அக்காலத்தில் சிறந்து விளங்கிய வடமொழி, தென்மொழி என்னும் இருமொழியினும் நல்ல புலமையுடையவர்கள் என்பதைச் சொல்லத்தேவையில்லை. எனவே, இவர்கள் வடமொழியில் தம் நூல்களைச் செய்ய எண்ணினார்களாயின் தோத்திரமும் சாத்திரமுமாக எத்துணை நூல்களைச் செய்யலாம்! அளவிறந்த நூல்களைச் செய்திருக்கலாமன்றோ! ஆயினும், 'பூசுரர் சூளாமணி' எனப் போற்றப்பட்ட ஞான சம்பந்தரே வடமொழியில் ஒரு பாடலைத் தானும் அருளிச் செய்யாது, தமிழ் மொழியில் மட்டுமே அளவற்ற பாடல்களை அருளிச் செய்தார். அவைகள் பதினாறாயிரம் திருப்பதிகங்கள் என்று சொல்லப்படுகின்றன; அவை அனைத்தையும் தமிழாகவே அருளிச் செய்தது மட்டுமின்றித், தம்மைத் ''தமிழ் ஞானசம்பந்தன்'' என பல்லிடத்தும் கூறினார் என்றால், அதற்குக் காரணம் யாது? தமிழ் மக்கள்பால் அவர் கொண்ட அருளேயாகும்.

இன்னும் அவர் தம்மை ஓரிடத்தில் 'நற்றமிழ்க்கு இன்துணை ஞானசம்பந்தன்' எனக் குறித்தார். அதன் கருத்து யாது? 'பலதுறைகளில் சிறந்து விளங்குகின்ற தமிழ்மொழி, அருளியலிலும் வேதம் போன்ற கடவுள்தன்மை நூலையுடையதாய்ச் சிறந்து விளங்கி, அம்மொழியையுடைய மக்கட்குப் பயன்படச் செய்த ஞானசம்பந்தன்' என்பதே கருத்து. இங்ஙனம் செய்தமையால், இத்திருப்பதிகங்களோடு நிறைவு கொள்ளாமல், பிற மந்திரங்கள் பாடல்கள் முதலியவற்றை நாடுவோர் நாடினும், இத்திருப்பதிகங்களிலே ஆழ்ந்த உறுதியுடையார்க்கு இவையே போதும், என்பதை அவரே ஓரிடத்தில்

''வீடும் ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
வாடின் ஞானம் என்ஆவதும் எந்தை வலஞ்சுழி
நாடி ஞானம்சம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை
பாடும் ஞானம் வல்லார்அடி சேர்வதுஞானமே

என அருளிச் செய்தார். மூவருள் அப்பர் தவிர ஏனையிருவரும் தாம் செல்லாத வடநாடு, ஈழம் இவற்றில் உள்ள தலங்கட்கும் அங்குள்ளவர்கட்குப் பயன்படுமாறு தமிழ்நாட்டிலிருந்தே திருப்பதிகம் அருளிச் செய்தார்கள். இவற்றையெல்லாம் தமிழ்மக்கள்-தமிழ்ச்சமுதாயத்தினர் நன்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும். இவற்றால், திருமுறைகள் தமிழ்மொழிக்கும் தமிழ் இனத்தவர்க்கும் கிடைத்தற்கு அரியவாய்க் கிடைத்த திருவருட் செல்வக் குவியல்களாதல் விளங்கும்.

தமிழில் பாடல்களாய் எழுந்த திருமுறைகளில் தேவாரத் திருமுறைகள் முத்தமிழ்களில் இசைத்தமிழாய் அமைந்து, பண்டைத் தமிழிசையாகிய பண்களை அன்றும் நன்கு பாதுகாத்தன. வடமொழி இராகங்களே பெரிதும் இடம் பெற்று உலாவும் இக்காலத்திலும் ஆராய்ந்து கைக்கொள்ள வல்லவர்கட்கு அப்பண்முறைகளை அறிந்து இசைக்க அவை அருந்துணை புரிகின்றன.

இனி இயற்றமிழ் வகையிலும் அவை யாப்பு முதலியவைகளில் பெருந்துணை புரிகின்றன. அவற்றுடன் தமிழில் பலவகை அமைப்புகளோடு கூடிய பிரபந்த வகைகட்குத் திருமுறைகள் முதல் நிலையாய் விளங்குகின்றன. இதில் திருவாசகம், திருக்கோவையார் பதினொன்றாந்திருமுறை என்பன தனிச் சிறப்புப் பெற்றுள்ளன. ஒன்பதாம் திருமுறையும் பண்

களை நிலைநிறுத்துவதாகும். பத்தாம் திருமுறை நேரே ஆகமமாயும், மந்திரமாயும் விளங்கித் தமிழ் மக்களுக்கு மிக்க பயனைத் தருகின்றது. பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணத்தின் பல்வகைச் சிறப்புகளும், பலராலும் நன்கறியப்பட்டவை.

திருமுறைகள் பெரும்பான்மையும் தமிழ் நாட்டுத் தலங்களைப் பற்றியே எழுந்தமையால், அவைகளில் தமிழ்நாட்டு ஊர்களின் இயற்கை வருணனை, தமிழ் மக்களின் ஒழுகலாறுகள், விருந்தோம்பல் போன்ற பண்பாடுகள், திருமணம் முதலிய பழக்க வழக்கங்கள் இவை போன்றனவே நிரம்பப் பெற்றனவாய் உள்ளன. இன்னோரன்ன தமிழ்மரபுகள் பலவற்றையும் நாம் திருமுறைகளில் கண்டு மகிழ முடியும். முடிவது மட்டுமன்று, அவற்றை அன்போடும், ஆர்வத்தோடும் ஓதிப் பயனும் பெறலாம். அப்பேறு தமிழ் மக்கட்கு இயல்பாக உரியது. ஆனால், தமிழ்மக்களில் எத்துணைப்பேர் அப்பேற்றிற்கு உரியராக அவற்றை அன்புடன் போற்றிப் பயின்று ஓதி வருகின்றனர் என்பதுதான் சிந்தனைக்குரியது.

---

# பசவேசுவரர்

இவர், இலிங்காயதம் என்னும் வீர சைவ மதத்தைப் பரப்பியருளிய சான்றோர். கன்னட நாட்டில் பீஜப்பூர் மாவட்டத்தில் இங்குளாபுரம் பாகேவாடி என்னும் ஊரில், பிராம்மண குலத்தில் பிறந்தவர். தந்தை மாடிராசன், தாய் மாதாம்பாள். மேலைச் சாளுக்கிய மரபைச் சார்ந்த மூன்றாம் சோமேசுவர மன்னரின் பின்வந்த இரண்டாம் சகதேக மல்லர், மூன்றாம் தைலபன் ஆகியோரின் கீழ் இருந்த சிற்றரசனும், கலாசூரி மரபைச் சேர்ந்தவனும், கல்யாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தவனுமான, விச்சலன் (கி. பி. 1156—1167) என்னும் சமண அரசனுக்கு அமைச்சராகவும், தலைமைக் கணக்கராகவும் விளங்கியவர். அவ்வரசனின் படைத் தலைவராகப் பணியாற்றியவரும், தமது தாய் மாமனாரும் ஆன, பலதேவர் என்பவரின் மகள் கங்காம்பிகையை மணந்து கொண்டார். பீஜப்பூர் மாவட்டத்தில் உள்ள கூடலசங்கமம் என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்டு அவரால் இலிங்க தீட்சை பெற்றார். கல்யாணபுரத்தில் ''அனுபூதி மண்டபம்'' என்னும் சமய சங்கம் நிறுவினார். இதனால் இலிங்காயத இயக்கம் பெரிதும் பரவத் தலைப்பட்டது. பசவேசுவரரைத் திருநந்திதேவரின் அவதாரமாக இலிங்காயத மதத்தைப் பின்பற்றும் வீரசைவமக்கள் போற்றுகின்றனர்.

(1) மனிதர் அனைவரும் சம நிலையினரே. (2) மனிதர்களில் எவரும் பிறப்பினாலோ, தொழிலினாலோ, பாற்பகுப்பினாலோ, தம்முள் சிறிதும் உயர்வு தாழ்வு உடையவர் அல்லர். (3) மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலோ, அன்றி ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலோ வேறுபாடு எதுவும் இருத்தலாகாது. (4) ஆன்மீக வளர்ச்சி நெறியில் ஓர் ஆணுக்குப் போலவே, ஒரு பெண்ணுக்கும் சம உரிமைகள் உண்டு. (5) தான் விரும்பும் ஒரு தொழிலை ஒவ்வொருவரும் செய்யலாம். வேலையில்லாமையும் பிச்சையேற்றலும் ஆகிய சமுதாயத் தீங்குகள் அறவே ஒழிக்கப்படல் வேண்டும். (6) பெண்களும்கூட ஒரு தொழிலை மேற்கொள்ளலாம். (7) உடலுழைப்பால் செய்யப் பெறும் தொழில் எதுவாயினும், அது பெருமைக்குரியதேயாகும்; தொழிலில், உயர்வு தாழ்வு என்பது இல்லை. (8) வருணம் ஆசிரமம் பற்றிய வேறுபாடுகள் புறக்கணிக்கத்தக்கவை. (9) உடலுழைப்பின் மூலமாகவே ஆன்மீக வளர்ச்சியைத் தேடிக் கொள்ளுதல் கூடும். (10) வெறும் துறவும், காடுகளிற் சென்று வசித்தலும், வாழ்க்கைத் துன்பங்களிலிருந்து தப்பியோட முயலும் கோழைத்தனமேயாகும். (11) கலப்பு மணங்களும், கலந்து உணவு உண்ணலும், பெரிதும் போற்றி வளர்க்கத் தக்கனவாகும். (12) சமுதாய வாழ்வில் தீண்டாமை என்பது கூடாது, மக்கள் அனைவரும் ஒரு குடும்பத்தினர்போலக் கலந்து பழகுதல் வேண்டும். (13) ஆன்மீகத் துறையிலும் சமுதாயத் துறையிலும் ஒவ்வொரு மனிதனும் தானே சுயமாகச் சிந்திக்க உரிமையுடையவன் ஆவான். (14) நிரந்தரமான சிந்தனைக்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கும், அறிவும் அனுபவமுமாகிய இரண்டும்தான் உண்மை வழி காட்டக் கூடிய ஒளி விளக்குகளாகும். (15) ஆன்மீகக் கல்விக்கும், உலகியற் கல்விக்கும், மக்கள் வழங்கும் தாய்மொழியே உரிய கருவியாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். (16) சமய ஆராய்ச்சிகளில் கலந்து கொள்வதற்கும், ஆன்மீக ஞானத்தைப் பெறுவதற்கும், ஆன்ம வளர்ச்சி நெறியைப் பின்பற்றுவதற்கும், எல்லா மனிதர்களும் சம உரிமை உடையவர்களாவர்.

—ந. ரா. முருகவேள்

# திருப்புல்லாணியின் சிறப்பு

கவிஞர் திரு. மனசை ப. கீரன், B.A., B.T., சென்னை.

**முன்னுரை :**

திருப்புல்லாணி என்னும்சிறந்த வைணவத் திவ்வியதேசம், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரத்துக்குத் தென்கிழக்கில் 9 கி.மீ. தொலைவில், நன்கினிது அழகுற அமைந்துள் ளது. இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு ஆதிஜகந்நாதப்பெருமாள், பத்மா சனித்தாயார், தருப்பசயனராமன், சேதுக் கரை ஆஞ்சநேயர் முதலிய தெய்வத் திரு வுருவங்களை, பக்தர்கள் மிகவும் அன்புடன் போற்றி வழிபட்டு, வேண்டும் வரங்களும் நலங் களும் பெற்று வருகின்றனர். இத்தலத்திற்குப் புல்லாரண்யம் -புல்லங்காடு - தர்ப்பசயனம் - ஆதிசேது - திருவணை முதலிய பெயர்கள் வழங்கி வருகின்றன.

**அகநானூறு :**

இராமபிரான் இலங்கைமேற் செல்லுதற் பொருட்டுத் தமக்குத் துணைவராயினாரொடு கூடி, ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ் அமர்ந்து, மேற்செய்வதற்குரிய செயல்களைக் கருதி ஆராய்ந்து கொண்டிருந்தார். அதுபோது அம் மரத்தில் இருந்த பறவைகள் இரைந்து கூச்ச லிட்டன; அவற்றை இராமபிரான் தன் தெய் விக ஆணையால் அமைதியாக இருக்கச் செய் தனர்.

''வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிடும் பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்று, இவ்அழுங்கல் ஊரே''

எனவரும் அகநானூற்றுப் பாடல் (57) வரி களால், புலப்படுத்தப்படுகின்ற இவ்வரலாறு நிகழ்ந்த இடம், இந்தத் திருப்புல்லாணியே என அறிஞர்கள் கூறுவர்.

இராமபிரான் இலங்கைத் தீவுக்குச்செல்ல அணைகட்ட நினைத்து இங்கு வந்தபோது, தருப்பைப்புல்லைப் பரப்பி, அதனையே படுக் கையாகக் கொண்டருளினர். ஆதலின் இத் தலத்திற்குத் திருப்புல்லணை எனப் பெயர் அமைந்து, அதுவே பின்னர் திருப்புல்லாணி என இதுபோது வழங்கி வருகின்றது.

**சேதுபதிகள் :**

இராமபிரான் இலங்கைத் தீவுக்குச் செல்லச் சேது என்னும் அணைகட்ட முயன்ற போது, இவ்வட்டாரத்திலிருந்த வீரர்கள் பலரும், அவருக்குப் பலவகைகளில் ஒத்து ழைத்து உதவி புரிந்தனர். அதனால் பெரிதும் மகிழ்ந்த இராமபிரான், இந்நாட்டுக்குச் சேது நாடு எனப் பெயரிட்டு, தமக்கு உதவி புரிந்த வீரர் தலைவனைச் சேதுபதி எனப் போற்றிச் சிறப்பித்து, இந்நாட்டுப் பகுதியை அவ்வீரர் தலைவனும், அவனது வழியில் வருவோரும் அரசாண்டு காத்து வரும்படி ஒப்படைத்து அருள்புரிந்தார். அதனால் இத்தலம் சேதுபதி அரசர்களின் ஆட்சியின்கீழ் நெடுங்காலமாக நன்கினிது பரிபாலிக்கப் பெற்று வருகிறது.

**பழமையும் பெருமையும் :**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன் றாகக் கருதப்படும்'கைந்நிலை'என்னும் நூலை இயற்றிய சங்ககாலப் புலவர் ஆகிய 'புல்லங் காடர்' என்பவரும், தொல்காப்பிய உரையா சிரியர்களுள் ஒருவரான 'தெய்வச்சிலையார்' என்பவரும், இத்தலத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப்பெறுகின்றனர். இராமபிரான், இங் குள்ள ஆதிஜகந்நாதப் பெருமாளை வழிபட்டு அவரால் அளிக்கப்பெற்ற கோதண்டம் என்னும் வில்லைக்கொண்டே, இராவணனை வென்று சீதைப்பிராட்டியை மீட்டருளினர் என்பது தல வரலாறு. இராவணனது தம்பியாகிய விபீட ணனும், கடலரசன் ஆகிய வருணதேவனும், இத்தலத்திலேயே இராமபிரானிடம் அடைக் கலம் புகுந்து சரணாகதி செய்தனர் என்று பெரியோர்கள் கூறுவர். புல்லவர், கண்ணுவர் முதலிய முனிவரர்களும், இத்தலத்தில் உள்ள பெருமானை வழிபட்டுப் பற்பல நலங்களை உற்றனர். இத்தலத்தைத் திருமங்கையாழ் வார் தம்முடைய பெரிய திருமொழியில், இருபது பாடல்களால், அகப்பொருள் துறைக் கருத்துக்கள் அமைய அழகுறப் பாடியிருக் கின்றார். தமிழிலும் வடமொழியிலும் இத் தலத்தைப் பற்றிய குறிப்புக்கள் மிகுதியாக உள்ளன.

கோயில் அமைப்பு :

திருப்புல்லாணிக் கோயில் ஐந்து பிராகாரங்களைக் கொண்டு விளங்குகின்றது. ஐந்தாம் பிராகாரம் வெளிமாட வீதியாக அமைந்துள்ளது இதன்கண் பல சத்திரங்களும் மண்டபங்களும் தேர்நிலையும் பிறவும் உள்ளன. இங்கு உள்ள 'மதகுருட்டத் தீர்த்தம்' என்னும் குளத்திலிருந்துதான் பெருமாளுக்குத் திருமஞ்சனத் தீர்த்தம் எடுக்கப் பெறுகின்றது. நான்காம் பிராகாரம் உள்மாட வீதியாகத் திகழ்கின்றது. இங்கு இராசகோபுரமும், இராசகோபுர வாசலும், திருவந்திக்கரப்பு மண்டபமும், தேசிகர் சந்நிதியும் பிறவும் உள்ளன. மற்றும் சதுர்ப்புஜராமர், வரதராசப்பெருமாள் திருவுருவங்களும் இங்கு நிறுவப்பெற்றுள்ளன. மூன்றாம் பிராகாரத்தில் கொடிக்கம்பமும், பலிபீடமும், கோயில் அலுவலகமும், வாகன மண்டபம், உலா மண்டபம், யாகசாலை, பட்டாபிராமர் சந்நிதி முதலியனவும் உள்ளன. இரண்டாம் திருச்சுற்றில் ஆழ்வார் சந்நிதிகளும், அருள்தரு பத்மாசனித் தாயார் சந்நிதியும் அழகுற அமைந்துள்ளன. இத்தலத்தின் புனித மரமாகிய அரசமரம் சிறப்பாக அமைந்துள்ளது. இதனைப் பக்தர்கள் அசுவத்த நாராயணர் வடிவமாகத் தியானம் செய்து வழிபடுகின்றனர். கோதைநாச்சியார் சந்நிதியும் இப்பிராகாரத்திலேயே அமைந்துள்ளது. முதற் பிராகாரத்தில்தான், ஆதிஜகந்நாதர் (தெய்வச்சிலையார்) சந்நிதி, அழகுற அமைந்துள்ளது. இங்கு அவர், திருமகள் நிலமகள் நீளாதேவி ஆகியோருடன், வீற்றிருந்த திருக்கோலத்தில் எழுந்தருளி விளங்குகின்றார். மற்றும் இங்குக் கலியாண ஜகந்நாதர் ''அன்னமாய் நூல் பயந்தார்'' என்னும் பெயருடன் காட்சிதருகின்றார். பூரி ஜகந்நாதத்தில் அருவநிலையில் எழுந்தருளியிருக்கும் பெருமாள், இங்கு உருவநிலையில் சங்கு சக்கரங்களுடனும், நான்கு தடக்கைகளுடனும் எழுந்தருளி விளங்குகின்றார். மற்றும் இச்சந்நிதியில் விளங்கும் தொட்டிற் கண்ணன் (சந்தானகிருஷ்ணன்), பக்தர்களால் பெரிதும் போற்றி வழிபடப் பெறுகின்றான்.

சிற்பச் சிறப்பு :

திருப்புல்லாணிக் கோயிலின் அமைப்பே, அதன் பழமை பெருமைகளைச் செவ்விதின் விளக்குவதாகத் திகழ்கின்றது. இஃது ஒரு சிறந்த கற்கோயில். பண்டைக்காலத்துச் சிற்பக்கலையின் நுணுக்கங்களைக் கோவிலுக்குள் எங்கும் காணலாம். பெருமாள் சந்நிதிக்கும், தாயார் சந்நிதிக்கும் எதிரில் வெளிப்பக்கத்தில் உள்ள மண்டபத்தில் சேதுபதி அரசர்களின் வண்ண வடிவங்களும் பிறவும், கண்கவர் வனப்புடையனவாகத் திகழ்கின்றன. தருப்பசயன ராமரின் திருவுருவ அமைப்பும், அவர்தம் உந்திக் கமலத்தண்டின் அமைப்பும், காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாகும். சேதுக்கரைப் பாதையில் இக்கோயிலைச் சேர்ந்த துணைக்கோயிலின் மகாமண்டபத்தில், கடலிலிருந்து கண்டெடுத்து வைக்கப் பெற்றதும், சலவைக் கல்லால் அமைந்தது மாகிய சுவேத சேது மாதவர்சிலை, கலை நலமும் கம்பீரமும் அமைந்து திகழ்கின்றது.

முடிவுரை :

பழமையும் பெருமையும் வாய்ந்து, திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் பெற்று, தெய்விகச் சிறப்பும் மிக்குத் திகழும் திருப்புல்லாணி என்னும் சிறந்த இந்தத் திவ்விய தேசத்தினை, அன்பர்கள் அனைவரும் சென்று தரிசித்து வழிபட்டு, இம்மை மறுமை நலங்கள் பலவும் எய்தி மகிழ்வார்களாக !

---

## இந்து மதத்தின் சிறப்பியல்பு

''இந்து மதம், எல்லாச் சமயங்களிலுமுள்ள நல்ல கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கின்றது. எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து புறக்கணிக்காமல், எல்லாவற்றையும் ஏற்றபெற்றி உடன்பட்டுத் தழுவிக் கொள்கின்றது. மனித குலத்திற்கும், மனித இயற்கைக்கும், அனைத்துலகிற்கும் உரிய, இனிய மதமாக அது திகழ்கின்றது. வேறு எந்த மதத்தின் வளர்ச்சியினையும் தடுத்து எதிர்க்கும் இயல்பு அதன்கண் காணப்படவில்லை. ஏனைய எல்லாச் சமயங்களையும், தனது பரந்து விரிந்த பெருநோக்கினால், தன்பால் ஏற்று இணைத்துத் தழுவிக்கொள்ளும் பெருமாட்சிமை உடையதாக, இந்து மதம் விளங்குகின்றது. அவரவர்களின் மனப்போக்கிற்கும் இயல்பிற்கும் ஏற்ப, அவரவர்க்குப் பொருந்திய நலங்களை விளைவிக்கும் திறனை, இந்து மதம் உண்மையிலேயே பெற்று விளங்குகின்றது. மனித குலத்திற்கும் மனித மனப்போக்குக்கும் உரிய எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி, இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில், இந்து மதம் இணையற்றதாகத் திகழ்கின்றது. இவ்வியல்பே அதன் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் காரணம் எனலாம். தத்துவஞானிகளுக்கும், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தனிமை நாடுவோர், உணர்ச்சி மிகுந்தோர், செயல்வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மனநிறைவு அளிக்கவல்லதாக, இந்துமதம் இனிய பற்பல சிறப்பியல்புகளைத் தன்னிடம் கொண்டுள்ளது.'' இவ்வாறு சர். மானியர் வில்லியம்ஸ் (Sir Monier Williams) என்னும் மேலைநாட்டுப் பேரறிஞர் ஆராய்ந்து வியந்து புகழ்ந்து கூறுகின்றார்.

—ஆசிரியர்

# நக்கீரர் கண்ட திருவேரகம்

மகாவித்துவான் பண்டித நடேசனார், பி. ஏ., ஜே.பி.

''உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு'' என்று மயிலேறும் பெருமானை மக்களுக்குச் சுட்டிக் காட்டுகிறார் நக்கீரர். சூரிய உதயத்திலும், சூரிய அஸ்தமிப்பிலும், அந்தணர் .முருகனைக் கண்டு துதிக்கின்றனர். பல சமயத்தாரும் வணங்கும் ஞாயிறு போன்று, ஞானபானுவும் (முருகன்)உள்ளான் என்பதே நக்கீரர்தம் மதம். அழகு, இளமை, மணம், தெய்வத் தன்மை ஒன்றாகியதே 'முருகு'. அம்முருகுடையவனே முருகன். மேற்கண்ட பண்புகள் உள்ள இடங்களிலே பொருட்களிலே காலங்களிலே முருகன் வியாபித்துள்ளான் என்பது, ஞானிகள் கண்ட மறை (இரகசியம்). இவ்வுண்மையை வலியுறுத்தவே நக்கீரர் தம் முருகாற்றுப்படையில் ''காடும் காவும் கவின்பெறு துருத்தியும் ஆறும் குளமும் வேறுபல் வைப்பும் சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும் மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்'' முருகன் உள்ளான் என்கிறார். அழகும் கந்தமும் இல்லா இடத்தில் சுகம் இருக்காது; முருகனும் இரான். பல சமயத்தாரும் போற்றும் அழகுள்ள நிலையங்களில் முருகன் வீற்றிருக்கின்றான். தெரிந்தோ தெரியாமலோ இயற்கையோடு இயைந்த வாழ்க்கையால், இயற்கையை இயக்கும் இறைவனை (முருகனை), பல மதத்தினரும் வணங்குகின்றனர் என்னல் உண்மை; மிகையன்று.

முருகாற்றுப்படை எனில், வெறியாட்டுக் களத்திற்கு முருகனை ஆற்றுப்படுத்தல் என்றும், முருகனுள்ள இடங்களுக்குப் பக்தனை ஆற்றுப்படுத்தல் (வழிகாட்டுதல்) என்றும் பொருள் பண்ணுக. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழகம், தமிழ்க் கடவுளைத் தமிழகத்திற்குள் சிறைப்படுத்தாது. அப்படிச் சிறையிடல் அறியாமை. ''பல குன்றிலும் அமர்ந்தபெருமாள்; பல மலையுடைய பெருமாள், வடிவதாமலை யாவையும் மேவிய தம்பிரான்; குன்று தொறாடல் மேவு பெருமாள்; கொந்துசேர் சோலை மேவிய குன்று சூழ்வாகவே வருகுன்றுதோறாடல் மேவிய பெருமாள்'' என்று அருணகிரிநாதர் கூறுவன, உலகுக்கு ஒரு சூரியன்; ஒரு திருமுருகன் எனும் உண்மையை வலியுறுத்தும்.

மலைநாட்டுக் கடவுள் முருகன். முருகன் வழிபாடு குறிஞ்சி நிலத்திலிருந்தே முகிழ்த்தது. அத்தகைய முருகனின் சிறப்புத்தலம் முருகாற்றுப் படையிலும் சிலப்பதிகாரத்திலும் திருப்புகழிலும் இடம் பெறவில்லையெனில் விந்தையினும் விந்தையே. சேரநாட்டில் முருகனுக்குச் சிறந்தகோயில் ஒன்றுமில்லை என்பதே கருத்தாம். சங்க காலத்தே சேரநாட்டிலும், குமரி வட்டத்திலும் கீர்த்தி பெற்ற முருகன் கோயில்களே, இன்றுமுள்ள மருங்கூரிலும், நாகர்கோயிலிலும், தோவாளையிலும், வேளிமலையிலும், வெள்ளிமலையிலும், உள்ளவை. மருங்கூர் கிழார் கண்ணனார், மருங்கூர்ப்பட்டினத்துச் சேந்தன் குமாரனார், மருங்கூர்ப் பாகை சாத்தன் பூதனார் எனும் மூவரும் சங்க காலப்புலவர்கள். பாண்டி நாட்டுப் பொதிகை மலைச் சாரலில் உள்ளதே மருங்கூர். சேந்தனார்கோவில் இதனை உறுதிப்படுத்தும்.

முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரிய சிலப்பதிகாரத்தில் ''சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்'' என்று குறிக்கப் பெற்றுள்ளது. இவ்வேரகத்தைத் 'திருவேரகம் மலைநாட்டகத்தொரு திருப்பதி' என்று அரும்பத உரையாசிரியரும், ஏரகம் மலைநாட்டகத்தொரு திருப்பதி என்று நச்சினார்க்கினியரும் பொருள் விரித்துள்ளார்கள். திருமுருகாற்றுப்படையில் 'ஏரகத்துறைதலும் உரியன்'' எனும் அடியிலுள்ள ஏரகத்தலத்தையே மலைநாட்டுப்பதி என்றார் நச்சினார்க்கினியர் எனில், ஏரகம், சுவாமிமலையன்று என்பது நிச்சயம். ''வெண்குன்று'' எனச் சிலம்புகூறும் இடம் செய்குன்றாகிய சுவாமிமலையைக் குறிக்கும் என்கிறார் அரும்பத உரையாசிரியர்.

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டினராகிய அருணகிரிநாதர், தாம் பக்திப் பரவசத்தால் பாடிய திருப்புகழில் பல இடங்களில், சுவாமிமலையும் திருவேரகமும் ஒன்றெனத் தொனிக்கவே பாடியுள்ளார். கூர்ந்து நோக்குவார்க்கு அவர் பாடிய பாக்களால் ஏரகத்துத் தனிச் சிறப்பு விளங்கும்.

''திருமருவு புயன் அயனோடு அயிராவதக் குரிசில்
அடிபரவு பழநிமலை, கதிர்காமம், உற்றுவளர்
சிவசமய அறுமுகவ! திருவேரகத்திலுறை
பெருமாளே'' (1)

''திருவேரகத்திலுறைவாய் உமைக்கொர்
சிறுவா கரிக்கும் இளையோனே'' (2)

''திறமாதவர்க் கனிந்து உன் இருபாத பத்மம்
உய்ந்த
திருவேரகத் தமர்ந்த பெருமாளே'' (3)

''திரளா மணிக் கலங்கள் அருணோதயத்தை வென்ற
திருவேரகத் தமர்ந்த பெருமாளே'' (4)

''ஏமவெற்பு உயர்ந்த மயில்வீர
ஏரகத் தமர்ந்த பெருமாளே'' (5)

''அதிசயம் அநேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகா! திருவேரகத்தின் முருகோனே'' (6)

''ஒளிவளர் திருவேரகமே உகந்து நிற்கும்
பெருமாளே'' (7)

''சிவனார் தமக்கு உரிய உபதேச வித்தையருள்
திருவேரகத்தில்வரு பெருமாளே'' (8)

''சாலியே மிகுத்து உயர்ந்த மா வயற்கண் மிஞ்சும்
ஏரகத் தமர்ந்த பெருமாளே'' (9)

பனையோலை இதழைக் குழையாகக் கொண்டவள், மறைபட்ட பொன்போன்றவள், திருமாலின் மகள் சுந்தரவல்லி குறவர் மகள் ஆனமையால் (மண்மூடின பொன்போன்றவள்) திருவேரக மலையில் விளங்கும் பெருமாளே. அருணகிரியார் சேர நாட்டை ஓதுக்கினார்; குட காவிரிக்கு வடபாலார் திருவேரகம் எனச் சேரமண்டலத்துத் திருப்பதியைச் சோழ மண்டலத்துத் திருப்பதியாக்கினார் எனக் கொள்ள வேண்டா. சுவாமிமலை இயற்கையில் குன்றன்று; செயற்கைக்குன்று; குன்றுபோலக் கட்டிய கட்டடமே.

''வேள்வி மலையே'' வேளிமலையாக மாறியுள்ளது. செவ்வேள் வள்ளியை மணந்த (வேள்வி) மலை இஃது, என அறிவிக்கவே திரிகூடராசப்பக் கவிராயர் தம் குற்றாலக் குறவஞ்சியில் ''நாஞ்சில் நாட்டு வேள்விமலை அம்மே'' எனப் பாடியுள்ளார். நாஞ்சில்நாடு, தமிழ்நாட்டின் தென்பகுதியாகக் குறுகியுள்ளது. பழந் தமிழகத்தில் சேரநாட்டின் (மலைநாடு) ஒரு பகுதியாக இருந்தது. இதனை நாஞ்சில் வள்ளுவன் ஆண்டான் எனப் புறப்பாட்டால் அறியலாம். இவ்வரசனைப் போற்றி, ஒரு சிறைப் பெரியனார் (புறம் 137), மருதன் இளநாகனார் (புறம் 138, 139); ஔவையார் (புறம் 140); கருவூர்க் கதப்பிள்ளை(புறம் 380) பாடியுள்ளார்கள். இவனது ஆட்சி இரண்டாயிரமாண்டுக்கு முன்னராகும்.

தமிழகம், மண்ணகம், விண்ணகம், என்பனபோல் ஏரகம்; ஏர்-நாஞ்சில்; அகம்-நாடு. ஏரினாலாகிய விவசாயத் தொழில் மிக்க நன்செய் கொழிக்கும் நாட்டையே, நக்கீரரும் இளங்கோவடிகளும் தம் நூல்களில் ''ஏரகம்'' என்றார்கள். சீர்கெழு குமரன் வீற்றிருப்பதால் திருவேரகம் எனப்பட்டது. விளவங்கோடு முதல் மங்கலம் வரை வள்ளுவநாடு பரவி இருந்தது. வள்ளுவன்கோடு (மலை), விளவங்கோடாக மாறியது. கட்டிமாங்கோடு, மேலாங்கோடு, திக்கணங்கோடு, விடைக்கோடு, தேவிக்கோடு, வெள்ளிக்கோடு, இடைக்கோடு, பன்றிக்கோடு எனப் பல குறிச்சிகள் உண்டு.

வேளிமலை முருகனைக் ''குமாரக்கடவுள் என்றும் ''வேலாயுதப் பெருமாள்'' என்றும் கூறுவர். மூலவர் எட்டடி எட்டங்குலம் உயரமுள்ள முருகன். கற்சிலையாகவும், இடப் பக்கம் ஆறடி ஆரண்டங்குலம் உயரமுள்ள வள்ளியம்மை படிமமும் ஆக உள்ளார். விஷ்ணு போல் வரத ஹஸ்தத்தில் விஸ்வரூபத்துடன் நிற்கின்றார். இவ் விக்கிரகங்களைப் போல் வேறு எங்குமில்லை. நான் சென்ற நாள், முருகன் திருநீற்றபிஷேகம் பெற்றும், வள்ளி குங்குமாபிஷேகம் பெற்றும் காட்சியளித்தார். ஏணிமேலேறியே மூலவர் இருவர்க்கும் தினசரி அபிஷேகம் செய்கின்றார்'போத்தி'' (போற்றி). பரங்குன்றில் தெய்வயானை மணமும் வேள்வி மலையில் வள்ளி மணமும் நடந்தன என்ப. வள்ளியும் வேலவனும் தரும் காட்சி யாரும் மறக்க முடியாதது. முதல் பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் ''இளையவராகவும்'' வடமேற்கு மூலையில்''மணவாளக் குமாரராகவும்'' முருகவேளைத் தரிசிக்கலாம். சிவசந்நிதி நந்தியோடு, நடராஜாவும் உண்டு. ஆறுமுக நயினார் செந்தில் நாயகம்போல் நிற்கின்றார். தலவிருட்சம் ஆகிய வேங்கைமரத்துக்குத் தனிச் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. இந்த இடமே முருகன் வேங்கை மரமாகி நின்றது என்கின்றனர்.

வள்ளியை மணஞ்செய்து வைத்த கலியாண விநாயகர் வீற்றிருக்கின்றார். இம்மலைக்கு இரண்டு மைல் தூரத்தில் சிலையுடன் ''வள்ளிக்குகை'' யும் திருக்கல்யாண மண்டபமும் ''தினைப்புன'' மும், ''வள்ளிச்சோலையும்'' ''வட்டச்சோலையும்'', ''கிழவன் சோலையும்'' இருக்கின்றன. வ்ள்ளியை மணம் புணர்வதன் முன்னர், வேடுவர் போரிட்ட இடம் ஒன்று ''குறவர் படுகளம்'' எனக் காட்சியளிக்கின்றது. இன்றும் இம்மலைவாழ் குறவர்களுக்கு ஆண்டிற்கொருமுறை ''படித்தரம்'' வேள்விம்லை ஆலயத்தார் அளிக்கின்றனர். குமாரகோயில் முருகனது விசுவரூபம் தியான சுலோகமாக உள்ளது. மக்களும் அதனைப் பாடிப் பரவுகின்றனர். ''இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல்கின்றனர்; புலராக் காழகம் புலர உடீஇ, உச்சிக்கூப்பிய கையினராய்'' மக்கள் மலையேறுவதைப் பார்க்கலாம். திருவேரகத்துக் குமாரகோயில் என்பதற்கேற்ப பக்தர்கள் ''குமாராயநம'' எனும் மந்திரத்தை மனனஞ் செய்தே கோயிலிலுட்புகுகின்றனர். இதனையே நக்கீரர் ''தற்புகழ்ந்து ஆறெழுத்து (குமாராயநம:) அடக்கிய அருமறைக் கேள்வி நா இயல் மருங்கில் நவிலப்பாடி'' என்றார். வெள்ளிக்கிழமைகளில் கேரள மக்கள் குமரனின் திருவடிமேல் மலர்களைத் தூவி வழிபடுகின்றனர். இக்கோயிலில் நடைபெறும் புஷ்பாபிஷேகம் மிகப் பிரசித்தி பெற்றது. இவ்வுண்மையைக் குறிக்கவே ''விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன்'' என்றார் நக்கீரர். இக்கோயிலைச் சுற்றி மணவாளக் குறிச்சி, கருக்கல்குறிச்சி, திருமலை

திக்குறிச்சி, புலிக்குறிச்சி, மிருதுகுறிச்சி, ''தினைவிளை'' வில்லிக் குறிச்சி, புலியூர்க் குறிச்சி எனப் பலவுள. வேளிமலை வட்டத்தில் யானைகள் நிரம்ப உண்டு.

அழகிய பாண்டிபுரத்தில் பக்கத்துள்ள ஊரின் பெயர் ''குறத்தியறை''. அதனையடுத்துக் ''குறவன் தட்டுவிளை'' என்னும் நிலப்பகுதியும் காணுங்கால், நாஞ்சில் நாட்டில் குறச்சாதியினர் ஆதிக்கம் இருந்திருக்க வேண்டும் எனத் தெளியலாம். நெல்லை மாவட்டத்தில் உள்ளூ. திருக்குறுங்குடியில் ''வள்ளிநாச்சியார்'' பிறந்தார் ; அப்பகுதியை ஆண்ட நம்பிராஜன் வேடர் தலைவன். அவனால் வளர்க்கப்பட்டவள் வள்ளி எனச் சரித்திரம் கூறுகிறது. இதனை வலியுறுத்த ''வள்ளியூரும் நம்பித் தலைவன் பட்டயமும்'' (ஒரு சிறு கிராமம்) நம்பியாறும் உண்டு. தினைப்புனங் காக்கவே வேளிமலைக்கு வள்ளி வந்தாள் என்பர். இவ்வாற்றால் சோழ நாட்டில் உள்ள சுவாமி மலையும், சேர நாட்டில் உள்ள வேளி மலையும் ஆகிய இருதலங்கள், 'ஏரகம்' என்னும் பெயருக்கு உரியனவாகத் திகழக் காண்கின்றோம்.

***

## திருவேரகம் - திருப்புகழ்

சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்க முறுவேனோ
கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்ப மணிவோனே

தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
தவிபுரிய வேணும் நெய்த்த வடிவேலா
அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா
அதிசயம நேக முற்ற பழநிமலை மீது தித்த
அழகதிரு வேர கத்தின் முருகோனே (1)

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே

ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே
சூதம் மிகவளர் சோலை மருவு
சுவாமி மலைதனி லுறைவோனே
சூர லுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே (2)

—அருணகிரிநாதர்



பழநி அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கல்லூரித் திறப்பு விழா நிகழ்ச்சியின் போது, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், திருவிளக்கு ஏற்றி வைத்தல் (19.4.81).






வடாற்காடு மாவட்டம், வெட்டுவாணம் அருள்மிகு எல்லையம்மன் திருக்கோயிலில், ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில் கட்டி முடிக்கப்பெற்ற, அம்மைவார்த்த சேவார்த்திகள் தங்கும் கூடம், அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், I.A.S., அவர்களால், அணைக்கட்டுத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கோ. விஸ்வநாதன், M.L.A., அவர்கள் தலைமையில் திறந்து வைக்கப்பெற்றது (10.4.81).

பதிவு எண். எம் 7039



பழநி அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரித் திறப்புவிழாவில் கலந்துகொண்டு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், கல்வி அமைச்சர் திரு. சி. அரங்கநாயகம், பி.ஏ.,பி.டி.,பி.எல்., அவர்களும் சிறப்புரை நிகழ்த்துதல். அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ்., அவர்களும், பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் திருமதி. டாக்டர். இராதாதியாகராஜன் அவர்களும், மற்றும்பல பெருமக்களும் விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.